இலண்டன்

# சுடரொளி

**CHUDEROLI** MAY - JUNE வைகாசி - ஆனி **2007**

## இலண்டன் இசை விழா 2007 சிறப்பு மலர்



# A-Lanka Travel Ltd

171 TOOTING HIGH STREET, LONDON,SW17 0SZ
020 8672 5551 (3 LINES) 020 8672 2010

## WORLD WIDE TRAVEL AGENT

உலகின் எப்பாகத்திற்கும் மலிவான விலையில்
விமானச்சீட்டுக்கள் பெற்றிட நம்பிக்கையான ஸ்தாபனம்

*அவசர டிக்கட்டுகளுக்கு அழையுங்கள்*

விமல் / விஜி / கலா
**Nik / peter / Ruth**

# 07956 206 709

## SPECIAL RATES FOR

**COLOMBO : 199+TAX** MADRAS : 234+TAX
**CANADA : 129+tax** SINGAPORE & EUROPE

**SPECIAL FAMILY DISCOUNTS AVAILABLE**

**SOLE AGENT FOR AERO LANKA**
**COLOMBO - JAFFNA COLOMBO - TRINCO**
**3 FLIGHTS A DAY 7 DAYS A WEEK**

இலண்டன்

# சுடரொளி

# CHUDEROLI

கலை இலக்கிய அரசியல் சமூக இதழ்

சுடர் 4 ஒளி 17 வைகாசி - ஆனி 2007

**கௌரவ ஆசிரியர் :**

திரு. சி. சரவணபவன் (சிற்பி), M.A.,

**பிரதம ஆசிரியர் :**

திரு. ஐ.தி. சம்பந்தன்

**சிரேட்ட ஆலோசகர்கள் :**

திரு. பொன் பாலசுந்தரம்

திரு. என். செல்வராஜா (நூலகவியலாளர்)

**ஆசிரியர் குழு ஆலோசகர்கள் :**

திரு. மயில் மனோகரன்

திரு. எஸ். கருணானந்தராசா

திருமதி. திருச்செல்வஉமா ஜெயக்குமார்

**நிர்வாகம் :**

திருமதி. செல்வதி சம்பந்தன், B.A.(Hons)

**வடிவமைப்பு :**

உலகத் தமிழர் பதிப்பகம்

**கணினி :**

திருமதி. சரோஜா இலட்சுமணன்

**வெளியீடு :**

Chuderoli Publication Society,
15, Rutland Road, London E7 8PQ
United Kingdom
Tel : 0044 208 552 6992
Mob : 07957 666 598
Email : itsampanthan@hotmail.com

**தமிழகப் பிரதிநிதி :**

திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,
4, Sourashtra Nagar, 7th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Tel : 0091 44 65180155/0944 111 951
E-mail : eramathi@rediffmail.com
utpmathi@yahoo.co.in

**இலங்கைப் பிரதிநிதி :**

திரு. V. தருமலிங்கம்

Annual Subscription (six issues)

| | | |
|---|---|---|
| UK | : | £ 12 |
| Europe | : | £ 15 |
| India | : | Rs. 200 |
| Sri Lanka | : | Rs. 300 |
| All other countries | : | £ 20 |



படைப்பின் கருத்துகளுக்குப் படைப்பாளரே பொறுப்பு


## இந்த இதழில்


1. எமது நோக்கு வானளாவிய சாதனையில் ஈழத்தமிழர் 3
2. தமிழ் தந்த தாதாக்கள் - பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் 5
3. ஈழத்து நாடகமேதை வைரமுத்து - காரை சுந்தரம்பிள்ளை 9
4. தியாகம் - சி. வைத்திலிங்கம் சிறுகதை 12
5. தமிழ் இசைச் சிறப்பு - கி.ஆ.பெ. விசுவநாதம் 17
6. நோய்களை மட்டுப்படுத்தும் இராகங்கள்-சி. ஞானச்செல்வன் 21
7. மனநல வளர்ச்சியில் இசையின் பங்கு-எஸ்.கே. சிவபாலன் 23
8. சங்கத் தமிழர் இசையில் யாழ்-தமிழரசி சிவபாதசுந்தரம் 29
9. இலண்டன் கர்நாடக இசை விழா 2007 32
10. வானொலி மாமா அமரர் வி. இராசையா 34
11. வர்த்தகப் பெருமகன் வேலணை நா. வீரசிங்கம் 37
12. தமிழ் சினிமாவின் வரலாறு - வி. செல்வராசு 43
13. பாரதப் போரில் தமிழரின் பங்கு - வே. விவேகானந்தன் 45
14. திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!! 48
15. இலங்கை -இந்தியர் பிரச்சினையும் நடுவணரசும் 50


## தமிழ் இசை மணி பேராசிரியர் எஸ்.கே. சிவபாலன்



தமிழ் இசையின் வளர்ச்சிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்த பேராசிரியர் சிவபாலன் அவர்கள் வாழும்போது தமிழ்-தமிழ் இசை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன.

பேராசிரியர் சிவபாலன் அவர்கள் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர். நிறைய சங்கீத புத்தகங்கள் எழுதியவர். இவர் சிறந்த தமிழிசை ஆராய்ச்சியாளர். சங்கீதத்தில் பெரும் பாண்டித்தியம் பெற்றவர். அவரது கலைத் திறனைத் தமிழ்நாட்டு அரசும் மற்றும் இசை மன்றங்களும் பாராட்டிக் கௌரவித்துள்ளன.

கலைமாமணி பேராசிரியர் ஆர்.வி. கிருஷ்ணன் அவர்கள் பேராசிரியர் சிவபாலன் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதாவது: "திரு. எஸ்.கே. சிவபாலன், யாழ்ப்பாண மாவட்டத்தில் சித்தன்கேணி என்னும் ஊரைச் சேர்ந்தவர். கரம்பன் கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். அவர் ஓர் கலைப்பட்டதாரியாவார். இலங்கை இந்துமத மாமன்றம் நடத்திய 4 வருடப் பண்ணிசை வகுப்பில் பயின்று முதற்பிரிவில் தேர்வு பெற்று 'பண்ணிசை மணி' என்னும் பட்டம் முன்னாள் தலைவர் நீதியரசர் திரு. வி. சிவசுப்ரமணியம் அவர்களால் வழங்கப் பெற்றவர். தமிழ்நாடு அரச இசைக் கல்லூரியில் 4 ஆண்டுகள் பயின்று, சங்கீத வித்துவான் பட்டச் சான்றிதழும் இசை ஆசிரியர் பயிற்சிப் பட்டயச் சான்றிதழும் முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால் வழங்கப் பெற்றவர். இக்கல்லூரியில் பயிலும் காலத்தே, சிறந்த மாணவர்க்குரிய தங்கப் பதக்கம், முன்னாள் அரச செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்களால் வழங்கப் பெற்றவர். நல்லை ஆதினப் பண்ணிசைப் புலவராகவும், கொழும்பு விவேகானந்த சபையில் பண்ணிசை ஆசிரியராகவும், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 4 வருடங்கள் இசையியல், இசை ஆசிரியப் பயிற்சித்துறை உதவிப் பேராசிரியராகவும் பணியாற்றியவர். நல்லை ஆதின குரு மஹா சன்னிதானம் அவர்கள் ''பண்ணிசைக் கலாநிதி'' என்னும் பட்டத்தையும், சென்னைக் காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதினம் ''திருமுறைச் செல்வமணி'' என்னும் பட்டத்தினையும், சுத்தானந்த யோக சமாஜம் 'தமிழிசை மணி' என்னும் பட்டத்தினையும், மலேசிய இலங்கையர் சங்கம் 'பண்ணிசை அரசு' என்னும் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தனர்''. இத்தகைய இசை மேதை இரு ஆண்டுகளுக்கு முன்னர் இசை உலகைவிட்டுப் பிரிந்தது ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

இலண்டனில் நடைபெறும் இசைவிழாவின்போது அன்னாரை நினைவுகூர்ந்து அவர் விட்டுச் சென்ற பணியை இசை உலகம் தொடரட்டும்.

ஐ.தி. சம்பந்தன், பிரதம ஆசிரியர்

சிந்தனைப் பகுதி

# மனம் போல் வாழ்வு

- சி. மாசிலாமணி

மன அமைதி எம் சிந்தனையின் தன்மையுடன் தொடர்புடையது. அயலவன் முன்னேற்றம் கண்டு உள்ளத்தில் பொறாமை எழுமானால் நாமே எம் அமைதிக்குப் பகைவர்களாகி விடுவோம். தேவையற்ற அவா, அகங்காரம் ஆகியவைகளும் எமது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துபவை. நாம் வாழுகின்றோம் என்றால் பாதிக்கு மேல் எம் மனம் உருவாக்கிய கோட்டையிலேயே வாழுகிறோம். நோயற்ற வாழ்வும் எளிமை கொண்ட தெளிவான சிந்தனையும் மன அமைதியைப் பாதுகாக்கும் அரண்கள். அதே சமயம் எம் அனுபவங்களை வைத்துச் சூழலில் எமக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்காமலும் அவற்றை மிகைப்படுத்தாமலும் இருக்கும் நிலைக்கு எம் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எம் அணுகுமுறை தவறானால் சிறு பிரச்சினை கள்கூட எம் அமைதியைக் குலைக்கலாம். நகரத்தில் வசிக்கும் ஒருவர் ஓர் இரவு கிராம விடுதி ஒன்றில் தங்க நேரிட்டது. கிராமத்து நாய்களின் சத்தம் அவருக்கு எரிச்சல் ஊட்டி அவர் தூக்கத்தைக் கெடுத்தது. அதே விடுதியில் தங்கியிருந்த ஓஷோவிடம் (ரஜனிஷ்சிடம்) முறையிட்டார். அவர் அச்சத்தத்தை இதமானதாக ஏற்றுக் கொள்ளும்படி ஆலோசனை கூறினார். அதிருப்தியுடன் அதைக் கேட்டுச் சென்றவர், மறுநாள் காலை ஓசோவிற்கு நன்றி சொன்னதுடன் அச்சத்தங்களை ஆழ்ந்து கவனித்தபோது. அவை ஒரு வகையான தாலாட்டுப் போல் இருந்ததாகவும் கூறினாராம்.

மனிதனின் அடிப்படைத் தேவை, உணவு, உடை, வதிவிடம் என்பார்கள். அவற்றுடன் திருப்தி கொள்ளும் நிலையிலா உள்ளோம். தொழில் நுட்பம் வளர்ந்து எம் பணிகளை எளிதாக்கும் எத்தனையோ சாதனங்களை உபயோகிக்கின்றோம். அதில் தவறில்லை. மின் விளக்கு இருக்கும்போது மண்ணெண்ணை விளக்கைத் தேடி அலையத் தேவையில்லை. ஆனால், அவாக் கொண்டு எம் ஆற்றலுக்கு அதிகமாக வசதிகளை ஏற்படுத்திவிட்டு அவற்றின் பராமரிப்பிற்காக அமைதி இழந்து தவித்தல் நன்றன்று.

எம் கட்டுப்பாட்டிற்குள் ஒன்று இல்லையென்றால் அதுபற்றிய கவலையை விட்டு ஒழிக்கவேண்டும். அவசியத் தேவை ஒன்றின் நிமித்தம் நாம் பிரயாணம் செய்கின்றோம் என்று வைத்துக்கொள்வோம். பிரயாணத்திற்கு 10 மணி நேரம் தேவை. அந்தப் பத்து மணி நேரமும் நாம் சென்றடைந்த பின் செய்யப் போவன பற்றித் தேவை என்றால் சிந்திக்கலாம். அது சம்பந்தமாக அங்கலாய்த்தல் தேவையற்றது.

உற்று அவதானிப்போமானால் எம் உணவைக் கூட ஈற்றில் எம்மனம்தான் சுவைக்கின்றது. உணவு நாக்கிடம் செல்வதற்கு முன்னமே மூக்கு அதன் மணத்தைச் சுவைத்து விடுகின்றது. கண் அதன் நிறத்தையோ தயாரிக்கப்பட்ட விதத்தையோ உணர்த்திவிடுகின்றது. எம் அனுபவ அறிவு அதன் சிறப்புப் பண்பை, அதன் சத்தூட்டும் தன்மையை முன் கொணர்கிறது. இவை எல்லாம் சேர்ந்த கூட்டாகவே சுவையை எடுக்க வேண்டி உள்ளது. உடலுக்கு நன்மை, தீமை பயக்கும் உணவு வகை பற்றி இன்று எவ்வளவோ அறிந்துள்ளோம். அப்படியானால் தீமை தரும் உணவு வகைகளை மனம் வெறுக்க வேண்டும். அது எளிதில் நடக்கும் செயல் அன்று. உதாரணத்திற்கு, பரிமாணத்தின் மிச்ச சொச்சமோ தெரியவில்லை. கொழுப்பு உணவென்றால் உடலுக்கு ஒரு தனி நாட்டம் உண்டு. அத்துடன் சிறு வயதுமுதல் உண்ட பழக்கமும் சேர்ந்துவிட்டால் எம் உடலுக்கு உகந்த உணவைத் தெரிவு செய்வதே ஒரு போராட்டமாகிவிடுகின்றது. ஆனாலும் எம் நரம்பின் சுவை அரும்புகள் நாம் நாளாந்தம் உண்ணும் உணவு வகைகளைக் காலப்போக்கில் ஏற்கக்கூடியவை. மனம்தான் சுவையை உணர்கின்றது என்பதற்கு ஒரு அழகிய புராணக் கதை ஒன்று உண்டு. உலகு பற்றிய உண்மையை அறிய நால்வர் புறப்பட்டார்களாம். அவர்கள் சந்தேகங்கள் தீரவில்லை. ஈற்றில் ஜனகன் என்னும் மன்னனிடம் சென்றார்கள். செல்லும்போதே இவ்வளவு துறவிகளாலும் போக்கமுடியாத எங்கள் சந்தேகங்களை ஒரு அரசனால் எப்படிப் போக்க முடியும் என்ற சந்தேகமும் சேர்ந்து கொண்டது. ஞானியான அந்த அரசன் இவர்கள் மேலதிக சந்தேகத்தைப் புரிந்து கொண்டான். சுவை குன்றிய காய்கறிகளாலான உப்பற்ற உணவு அவர்களுக்குப் பரிமாறப்பட்டது. அவர்கள் உண்ண ஆரம்பிக்கு முன் மகாராஜன் உணவு எப்படி இருந்தது என்று கேட்டால் அவர்களால் எப்படிப் பதில் சொல்ல முடியும். அவர்கள் புலன்கள் உணவைச் சுவைக்கவில்லையே. தான் மன்னன் என்றாலும் உலகப் பற்றில் இருந்து விலகி உள்ளேன் என்பதை அவர்களுக்கு விளக்க அந்த வழியைப் பயன்படுத்தியதாகக் கதை கூறுகிறது.

இக்கட்டத்தில் கட்டுரைக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு ஆலோசனையைத் தர விரும்புகிறேன். உண்ட பழக்கம் எம் உடலுக்கு உகந்த உணவைத் தெரிவு செய்வதை ஒரு போராட்டமாக மாற்றுகிறது என்றால் வளர்ந்தவர்கள், பழக்கதோஷம் தங்கள் மாற்றத்திற்கு இடைஞ்சல் அளிப்பதை உணர்ந்து தங்கள் குழந்தைகளுக்காவது நல்வழி காட்ட முன் வரவேண்டும். உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். பச்சை அரிசி, புழுங்கல் அரிசி, இவை இரண்டிலும் புழுங்கல் அரிசி தரத்தில் கூடியது என்று ஆய்வுகள் சொல்கின்றன. ஆனால், இங்குள்ள எமது எத்தனை குழந்தைகள் சிவப்புக் கைக்குத்தலரிசியை விரும்பிச் சாப்பிடப் பழக்கப்பட்டுள்ளார்கள்?

*

# எமது நோக்கு

## வானளாவிய சாதனையில் ஈழத்தமிழர்

உலகெலாம் பரந்து வாழும் பத்துக்கோடித் தமிழர் களின் வரலாற்றில் 21 ஆம் நூற்றாண்டில் சாதனை படைக்கும் தமிழர்களாக விளங்குபவர்கள் ஈழத் தமிழர்கள்.

ஆங்கிலேயரின் ஆட்சியால் இழந்த ஈழத்தமிழ் இராச்சியத்தை மீளப்பெறுவதற்குக் கடந்த 55 ஆண்டு களாக நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டம் ஈழத் தமிழர்களின் பல சாதனைகளை வெளிக் கொணர்ந்துள்ளது. சங்ககால இலக்கியத்தில் கூறப்பட்ட தமிழர்களின் வீரவரலாற்றை மீண்டும் உருவாக்கி வருபவர்கள் ஈழத் தமிழர்கள்.

ஈழத்தமிழ் மண் புண்ணிய பூமி. வரலாற்றுப் பெருமை படைத்த திருத்தலங்கள் கொண்டது. அறிஞர் பெருமக்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்கிய பூமி.

1951 இல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த 'கல்கி' ஆசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி தமது பிரயாணக் கட்டுரையில் 'யாழ்ப்பாணத்தில் எங்காகுதல் நடந்து செல்லும்போது தடுக்கி விழ நேர்ந்தால் ஒரு பண்டிதர் வித்துவான் மேல்தான் விழ வேண்டும்' என்று குறிப் பிட்டுள்ளார். அவ்வாறு தமிழறிஞர்களால் புகழ் பெற்றி ருந்த பூமி ஈழத்தமிழ் மண். அந்நியர் ஆட்சியின் போது சைவத்தையும் தமிழையும் அழியவிடாது பாதுகாத்தவர் நாவலர் பெருமான். அவர் தமது சைவத் தமிழ்ப் பணி களைத் தமிழ்நாட்டிற்கு விரிவுபடுத்தித் தமிழ்நாட்டு அறிஞர்களின் பாராட்டைப் பெற்றவர்.

'நாவலர்' என்ற பெயரைத் தமிழ்நாட்டு ஆதீனம் வழங்கிக் கௌரவம் பெற்றவரும் ஈழத்தமிழரே. 'யாழின்' பெருமையை யாழ்நூல் மூலம் துலங்க வைத்த பெருமைக்குரியவர் ஈழத்தமிழர் விபுலானந்த அடிகளார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் ஸ்தாபகர் வனபிதா தனிநாயகம் அடிகளார். உலகமெலாம் தமிழ் ஆராய்ச்சி செய்யும் பணியைத் தொடங்கி வைத்த பெருமைக்குரிய அவரும் ஈழத்தமிழரே.

'தமிழ் ஓசை உலகெல்லாம் பரப்பும் வகை செய்தல் வேண்டும்' என்ற மகாகவி பாரதியாரின் கனவை இன்று நனவாக்கி வருபவர்கள் புலம் பெயர் ஈழத்தமிழ் மக்களே. புலம் பெயர் தமிழ் மக்களால் இன்று தமிழ் உலக அரங்கில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. தமிழகத் தில் உருவாகும் தமிழ் வெளியீடுகள் இன்று உலக வலம் வருவதற்கு ஈழத்தமிழர்களே காரணம்.

இன்று தமிழ் நாட்டை அடித்தளமாகக் கொண்ட மணிமேகலைப் பிரசுரம் வெளியீடுகள் உலகமெலாம் பரப்ப உறுதுணையாக இருப்பவர்கள் ஈழத்தமிழர்களே. உலகத் தமிழ்க் கவிதைப் போட்டிகளை நடத்தித் தமிழ்க் கவிஞர்களை உலக அரங்கில் மேன்மைப்படுத்தி வருபவர்களும் ஈழத்தமிழர்களே.

பிரித்தானிய மகாராணி எலிசபெத் அம்மை யாருக்குக் கணிதம் படிப்பித்த பெருமையைத் தேடித் தந்தார் அடங்காத்தமிழன் கணிதமேதை திரு. சி. சுந்தர லிங்கம் அவர்களே. மகாராணியின் முடிசூட்டு விழா விற்கு அழைக்கப்பட்ட அடங்காத் தமிழன் திரு. சி. சுந்தர லிங்கம் அவர்களும் ஈழத்தமிழரே.

ஆங்கிலேயர் இலங்கையை ஆண்டபோது படித்த இலங்கையர் என்ற பெருமையுடன் ஆட்சியாளரால் கௌரவிக்கப்பட்டவரும் ஈழத்தமிழர் கே.பி. இராமநாதன் அவர்கள்.

'ஆண்ட இனம் மீண்டும் ஆள நினைப்பதில் தவறு என்ன' என்று ஆயிரக்கணக்கான தமிழ்ப்பற்று. நாட்டுப்பற்று விடுதலை உணர்வு மிக்க' கவிதைகளைப் பாடிய உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதை கள் ஆங்கில மொழியில் வெளியாக்கி பெருமை சேர்த்த வரும் ஈழத்தமிழரே.

இனவிடுதலைக்கான போராட்ட வரலாற்றை எடுத்துக் கொண்டால் சேர, சோழ, பாண்டியர் பின் வீரவரலாறு படைத்து வருபவர்கள். ஈழவிடுதலைப் போராட்ட வீரர்களே. சங்க காலத்தில் தமிழ்த்தாய் போர் முனைக்குத் தன் மகனை அனுப்பிவிட்டுப் 'போரில் புறமுதுகு காட்டித் திரும்பினால் பாலூட்டிய எனது முலை மார்பை அறுத்தெறிவேன்' என்று வீரம் பாய்ச்சி அனுப்பிய மகன் போரில் வீரமரணமடைந்தான் என்ற செய்தி கேட்டுப் பெருமை அடைந்தார். அதுபோன்ற வரலாற்று நிகழ்வுகள் இன்று ஈழப்போராட்டத்தில் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

இதுவரையும் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ்ப் போராளிகள் போராட்டத்தில் வீரச் சாவைத் தழுவிக்கொண்ட வரலாற்றை ஈழத்தமிழர்கள் படைத்து உள்ளனர். ஈழத்தில் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகிய பின்னர் விடுதலைப் போராட்டத்தால் தமிழீழ இராணுவம் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. ஈழத்தமிழ்ப் போராளிகளின் சாதனைகள் உலகத் தமிழர்களுக்கே பெருமையாக விளங்குகிறது.

22 வருட ஆயுதப் போராட்ட காலத்தில் தமிழீழ இராணுவம் இரு வல்லரசுகளின் இராணுவத்துடன் எதிர்த்துப் போராட்டம் நடத்திச் சாதனை படைத்து உள்ளது.

1987இல் இலங்கைக்குள் நுழைந்த இந்திய அமைதிகாக்கும் படைக்கெதிராக இரு வருடங்கள் போராட்டம் நடத்தி வந்தன. விடுதலைப் புலிகளின்

இராணுவத் தந்திரத்தால் இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இது ஈழத்தமிழரின் வீரச் சாதனையே, இது பகையல்ல, ஒரு நாட்டின் விளையாட்டு வீரர்கள் பிறிதோர் நாட்டின் விளையாட்டு வீரர்களைத் தோற் கடிப்பது அவர்களது திறமையும் ஆற்றலுமேயாகும். எனவே, இந்திய இராணுவத்துடன் போராடியது தமது பலத்தின் திறனை வெளிக்கொணர முடிந்ததேயன்றி இந்தியாவுடன் பகையை வளர்த்துக் கொள்வதற்கல்ல. எனவேதான் இந்தியாவுடன் ஈழத் தமிழர்கள் உறவு மீண்டும் ஐக்கியமாக வளர்கிறது. விளையாட்டில் வெற்றி தோல்வி பெற்ற இருவரும் கை கொடுப்பது போன்றதே.

இலங்கை இராணுவத்துடன் கடந்த 22 வருடங்களாகப் பல போராட்டங்களை நடத்திச் சாதனை புரிந்து வருபவர்களும் ஈழத்தமிழர்களே. இலங்கை இராணுவம் வெளிநாடுகளிலிருந்து பெறும் நவீன ஆயுதங்களை அவர்களிமிருந்து பறித்தெடுத்து விடு தலைப் போராட்டம் நடத்துபவர்கள் ஈழத் தமிழ்ப் போராளிகளே.

உலகத்தில் எந்த விடுதலைப் போராட்டமும் எதிரிகளின் ஆயுதங்களைப் பறித்துப் போராடியதாக வரலாறு இல்லை. அந்தப் புதிய வரலாற்றைப் படைத்தவர்கள் ஈழத்தமிழர்களே.

உலக வரலாற்றிலே ஒரு விடுதலைப் போராட் டத்தை நடத்துபவர்கள் தரைப்படை, கடற்படை, வான் படை வைத்துப் போராடும் வரலாற்றை உருவாக்கிய வர்கள் ஈழத்தமிழர்களே. அண்மையில் கட்டுநாயக்க விமானதளத்தைத் தாக்கிவிட்டு வெற்றிகரமாக மீண்டும் தளத்திற்குத் திரும்பிச்சென்ற தமிழீழ வான்படை மூலம் தமிழர்கள் வீரம் வானளாவிய ரீதியில் உயர்ந்துவிட்டது. இந்தப் பெருமைக்குரிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும் ஈழத்தமிழனே.

தமிழனுக்கு ஒரு நாடு கிடைத்தால் சுதந்திரத் தமிழகத்தைப் பொன்கொழிக்கும் பூமியாக்கும் ஆற்றல் ஈழத்தமிழர்களுக்குண்டு என்பதை வன்னியில் உருவாக்கிய விமானம் நிரூபித்துள்ளது.

அமெரிக்காவின் தொழில்நுட்பத்துடன் போட்டி போட்டுச் சாதனை படைக்கும் வல்லவர்கள் ஈழத்தமிழர் களிடையே இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமே தமிழ் விமானத் தயாரிப்பு.

சுதந்திரமாக செயற்படவிட்டால் ஈழத்தமிழர்கள் பல சாதனை புரிபவர்கள் என்பதை உணர்ந்த உலக வல்லரசுகள் இலங்கை அரசுக்கு நவீன ஆயுதங்களை வழங்கி விடுதலைப் புலிகளின் வீரவரலாற்றை முறி யடிக்கலாம் என்று கனவு காண்கின்றார்கள். இது மற்றோர் சாதனைக்கு வழிவகுத்துச் செல்லும். இன விடுதலைக்கு இதயசுத்தியோடு போராடிய விடுதலை இயக்கம் தோல்வி கண்ட வரலாறு கிடையாது.

யூத இனத்திற்கு இணையான ஈழத்தமிழர்கள் தமக்கெனத் தனியான ஒரு சுதந்திர நாட்டை உருவாக்கி உலகில் மற்றுமோர் சாதனை படைக்கும் நாள் வெகு விரைவில், வானளாவிய ஈழத்தமிழர்களின் சாதனைகள் உலக வரலாற்றில் பதியப்படும். *

# எங்கள் மண் எங்களுக்கே!

**— சுந்தரி சதாசிவம்,** மிருசுவில், தமிழீழம்

''நம்புங்கள் தமிழீழம்
நாளை பிறக்கும்
நாட்டின் அடிமை
விலங்கு தெறிக்கும்.

மாண்ட வீரர்
கனவு பலிக்கும்
மகிழ்ச்சிக் கடலில்
தமிழ் மண் குளிக்கும்.''

மேற்படி கவிதையின்
அரசன் காசி ஆனந்தன்
காலங்காலமாய்
களிப்போடு வாழ்க!

பொங்கும் நினைவினை
பொசுக்கியவாறே
கண்ணீர் துடைத்து
எழுந்து நின்றேன்.

சொத்து இழந்தேன்
சுகமும் இழந்தேன்
மெத்த துன்பம்
நித்தம் பட்டேன்.

இடம் பெயர்ந்தேன்
இடர் பல பட்டேன்
தடம்புரண்டு
தவித்து அலைந்தேன்.

ஏதிலர் போல
எம்மவர் இன்று
வீதி தோறும்
அலைந்து திரிகிறார்.

ஆண்ட பரம்பரை
ஆளும் காலம்
மீண்டும் விரைவில்
வந்து சேர்ந்திடும்.

மண்ணுக்காக
இன்னுயிர் நீத்த
மாவீரர்களை
என்றும் மறவோம்.

கண்ணீரால் அவர்
கல்லறைகளைக்
கழுவி நாங்கள்
தொழுது நிற்போம்.

எங்கள் மண்
எங்களுக்கே
என்றொரு நாள்
விரைவில் வரும்.

தங்க ரதத்தில்
எங்கள் தலைவர்
தலைநிமிர்ந்து
வந்திடுவார்.

மங்கள கீதம்
இசைத்து நிற்போம்
மனத் துயர்நீங்கி
மகிழ்ந்திடுவோம்.

அடிமை கொள்ள
வந்த சிங்களவரின்
கொடுமை மறையும்
குதூகலமாவோம்.

எங்கள் புலிக்கொடி
எங்கும் பறக்கும்
தமிழன் எனத்
தலை நிமிருவோம்.

We invite you

**Tamil United Day**

**Our Leader Sri Sabaratnam 21st Remembrance Day Meeting and Discussions.**

**Speakers:**
Mr S Adaikalanathan MP, Mr N Srikantha MP,
Mr M K Sivajilingam MP, Mr V Noharathalingam MP,
Mr Jana Ex MP, Mr T Sothilingam and
Mr P Sumithiran Ex-members of TELO.

**Date: Sunday 06th May 2007**
**Time: 5.00pm 10.00pm**
**Venue: Conway Hall, 25 Red Lion Square, London, WC1R 4RL.**
**(Tube: Holborn)**

www.telo.org wetelo@btinternet.com

அட்டைப் பட விளக்கம்

மதங்கொண்ட யானை
மனித உயிர்களை
அழித்துத் திரிந்தக்கால்,
உதயணன் யாழ் வாசித்து
அதனை அடக்கினான்
என்பதைச் சுட்டும்
''பெருங்கதை'' காட்சி

பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் எழுதிய

# தமிழ் தந்த தாதாக்கள்

## கூழங்கையர் வண்ணம்

கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளைத் தினமும் வணங்கி அருள்பெற்ற கோபால் செட்டியாருக்கு அக் காலத்தில் ஓர் ஆண் மகவு பிறந்தது. செட்டியாருடைய மனைவியார் தையலாச்சி என்பாள் சங்கேந்தி என்னும் ஊரிற் பிறந்தவள். அவள் பெற்ற மைந்தன் பிறந்த வேளையையும் அவனுடைய அங்கலடசணங்களையும் கணித்த தம்பிரான் சுவாமிகள் ''இவன் யாழ்ப்பாணத் தில் அரும்பணிகள் செய்வதற்கு வந்தவன்'' என்று ஆசீர்வதித்தார்.

தம்பிரானை வணங்கி எழுந்த தையலாச்சியை வாழ்த்திய சுவாமிகள், அவள் பிறந்த சங்கேந்தி என்னும் ஊரையும் அவள் பெயரையும் சிலேடையாகக் கொண்டு அரியதொரு வெண்பாப் பாடியுள்ளார். ஒரு கையில் பாஞ்சசந்நியம் என்னும் சங்கினை ஏந்தியவரின் தங்கை ஒரு தையல். இங்கே சங்கேந்தி ஊரில் பிறந்த இவளும் தையல், அவள் பசுக்களைப் பரிபாலிக்கும் கோலா னாகிய சிவபெருமானின் தேவி. இங்கே இவளும் கோபாலன் என்னும் செட்டியாரின் மனைவியாவாள்.

**''சங்கேந்தி தங்கச்சி தையலென்பா ரிங்கிவளும்**
**சங்கேந்தி தங்கச்சி தையலே - அங்கவளைக்**
**கோபாலன் றேவியெனக் கூறுவா ரிங்கிவளுங்**
**கோபாலன் தேவியெனக் கூறு''**

தம்பிரான் சுவாமிகள் இலக்கணத்தில் வல்லவரா யிருந்தமையால் நன்னூலுக்கு நல்ல வியாக்கியானம் செய்துள்ளார். இன்று போல் அன்றும் அருள் கொழித்து விளங்கிய நல்லை காத்த சுவாமியார் மீது நல்லைக் கலிவெண்பா ஒன்று பாடியுள்ளார். இது குமரகுருபர சுவாமிகள் திருச்செந்தூர் முருகன் மீது பாடியருளிய கந்தர் கலிவெண்பா போன்றதாகும்.

தம்பிரான் சுவாமிகள் சிலகாலம் அரியாலை மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுக்கு அறிவு நூல்கள் பலவற்றை ஐயந்தீரக் கற்பித்து வந்த காலத்தில் அங்கே எழுந்தருளியுள்ள சித்தி விநாயகர் திருவிரட்டை மணிமாலை என்னும் திருவருள் மாலை ஒன்றும் பாடியுள்ளார்.

தம்பிரான் சுவாமிகள் அமைதியான துறவுநெறி யில் வாழ்ந்தவர். அவருக்குச் சமயவிடங்களில் காய்தல், உவத்தல் உண்டாகவில்லை. அவர் எல்லோருக்கும் நண்பராய்க் காட்சிக்கு எளியவராய் வாழ்ந்தவர். கிறிஸ்தவ சமயத்தவர் பலர் அவரையடுத்துத் தமது தமிழறிவை விருத்தி செய்து கொண்டனர். அவர் கதா காலட்சேபம் செய்வதில் நல்லதொரு முறையினைத் தாடனப்படுத்திப் பொதுமக்களுக்கும் முதியவருக்கும் கல்வியறிவூட்டியவர்.

## யோசேப்பு புராணம் தந்த தம்பிரான்

கோவாவிலிருந்து வந்த குருமார் சிலர் இவரை யணுகித் தமிழ்மொழியை ஆழமாகக் கற்றுக்கொண்ட தோடு இவரை நயந்து வேண்டித் தங்கள் மதத்துக்கு அருமையானதொரு பெரிய நூலையும் செய்வித்தார் கள். யோசேப்பு புராணம் என்னும் நூல் இருபத்தொரு காண்டங்களைக் கொண்டதாய், 1023 பாடல்களில் நிறைவுறுவது. தமிழ்நயம் களிநடம் புரியும் இனிய பாக்கள் விரவிவர நன்றாகப் பாடப்பெற்றது. அதில் ஆற்றுப்படலத்தில் வரும் ஆறு விருத்தப்பாக்கள் ஆசிரியர்கள் பலரால் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. நூல் அச்சில் வெளிவரவில்லை என்பது உறுதியாக நம்பக்கூடியதாகவுள்ளது.

யோசேப்பு புராணத்தை வெகுவாக நயந்து அதிலிருந்து ஆறு பாடல்களை எடுத்து முதலில் சுவைத் தவர் கற்பிட்டிவாசியும் பழந்தமிழ்ப் புலவருமான சைமன் காசிச் செட்டியாரவர்களாவர். யோசேப்புப் புராணம் பாடுவித்தபெருமை பிலிப்மெல்லோ என்னும் பாதிரியாரையே சாரும், மெல்லோபாதிரியார் ஒல்லாந்தர் காலத்தில் சிறந்து விளங்கிய கொழும்புத் தமிழன். அவர் ஹீப்ரு மொழியோடு கிரேக்கம், இலத்தீன், போர்த்துகல், ஒல்லாந்தம் ஆகிய மொழிகளையும் நன்கறிந்த பன்மொழிப் புலவர். அவர் யாழ்ப்பாணம் வந்திருந்த காலத்தில் ஆறுமுக நாவலரவர்களின் தந்தையார் அவரிடம் ஒல்லாந்த மொழியினை நன்கறிந் தார். மெல்லோபாதிரியார் ஹீப்ருமொழியிலிருந்து பைபிள் நூலைத் தமிழில் மொழிபெயர்த்துப் பெருமை பெற்றவர். அந்த மொழிபெயர்ப்பை நாவலரவர்களின் தந்தையார் ஆராய்ச்சி கந்தப்பிள்ளை பார்வையிட்டுள் ளார். கூழங்கைத் தம்பிரான் தமது யோசேப்பு புராணத் தில் மெல்லோ பாதிரியாரையும் பாடியுள்ளார் என்று அறிந்தவர்கள் எழுதியுள்ளார்கள். தம்பிரான் சிலேடை யாகப் பேசுவதில் சமர்த்தர் என்ப. தம்பிரான் சுவாமிகள் மெல்லோ பாதிரியார் வேண்டுகோளுக்கிணங்கித் தேவப் பிரசையின் திருக்கதை என்றொரு நூலும் செய்துள்ளார்.

## 'செட்டியார் சிவன்கோயில்' என்னும் வைத்தீஸ்வரன் கோயில்

கூழங்கைத் தம்பிரான் குடியிருந்த மனையில் கோபாலுச் செட்டியாரின் மைந்தன் வைத்திலிங்கம் செட்டியாரும் சுவாமிகள் சீடர்களில் ஒருவர். நல்ல வியா பாரப் பெருக்கத்தாலும், முத்துக்குளிப்பாலும் பெருநிதி

பெற்ற வைத்திலிங்கச் செட்டியார், தமக்கு ஒரு பெரிய வீடு கட்டுவதற்கு விரும்பினார். தமது விருப் பத்தை அவர் தம்பிரான் சுவாமிகளிடம் விண்ணப் பித்தபோது, சுவாமிகள் மகிழ்ந்து ஆசீர்வதித்ததோடு "நீ உனக்கு மனைவகுப்பதன்முன், உன்னை ஆளாக்கிய இறைவனுக்கு ஆலயம் அமைத்தல் அமைவுடையதே யாகும்'' என்று ஆலோசனை கூறினார்.

குருவாக்கைத் தலை மேற்கொண்ட வைத்திலிங் கஞ் செட்டியார் தமிழ்நாட்டில் தாமறிந்த வைத்தீஸ்வரன் கோயிலமைப்பில் சிவபூமியாகிய இலங்கையின் சிரத் தானமாகிய யாழ்ப்பாணத்தில் அமைக்கத் திட்டமிட்டுத் தமிழ் நாட்டிலிருந்து ஆகமம் வல்ல ஸ்தபதிகளையும் கலைஞர்களையும் வரவேற்றுபசரித்துக் கோயிற்பணி யைக் குறைவறக் கவனித்து உபசரித்து உடன் நின்று உருவாக்கினார்.

ஒல்லாந்தர் காலத்தில் ஆரம்பித்து நிறைவேறிய கட்டட வேலைகள், ஒல்லாந்தர் ஆட்சி முடிவடையும் காலத்தில் நிறைவு பெற்றன. நல்லூர்க் கந்தசாமியாருக்கு இன்றுள்ள ஆலயம் கட்டி முடிக்கப்பெற்றபின் ஒல்லாந்தர் காலத்திலேயே எழுந்த பழைய ஆலயங்களுள் செட்டியார் சிவன் கோவிலும் ஒன்று.

இக்கோயில் பிரதிட்டைப் பெருவிழா 1791ஆம் ஆண்டுக்குச் சரியான சாதாரண வருடத்துச் சித்திரை மாதத்துப் பூர்வ பட்சத்து சப்தமி திதியிலே புனர்பூச நட்சத்திர வேளையிலே ஆகமவிதிகளுக்கமைய அருமை யாக நடைபெற்றது. அந்த வேளையிலேயே வைத்தி லிங்கச் செட்டியாருக்கு அருகில் நின்று கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் மனமுருகிப் பாடிய அவருடைய சொந்தத் தோத்திரப் பாடல் எம்மை அசைக்கிறது;

ஆசிரிய விருத்தம்

நதியரவ மதியிதழி புரிசடை யவிழ்ந்து
நடநண்ணுமா காச லிங்கம்
நால்வருக் குக்கலா னிழலில் லுபதேசம்
நவிலுற்ற மவுன லிங்கம்

நிதிபதி தனன்புடைத் தோழனா யீசான
நிலை நின்ற வேட லிங்கம்
நிவாதமுறை யிருவர்க் கழற்கம்ப வடிவாகி
நின்றெழுந்த சோதி லிங்கம்
துதி துதிக் கையானை யன்பொடும் போற்றிடுஞ்
சுயம்பான வப்பு லிங்கம்
துய்யவுணர் வோரிதய கமலா லயத்திலெழு
சுடர்ப்பொற் கொழுந்து லிங்கம்
மதிதவழு மதிலோடு கோபுரந் திகழ்வுறும்
வண்ணையெல் லையினிறுத்தும்
மாதங்க புரிதையல் பாகமிசை மீதமரும்
வைத்தீச மாலிங்கமே.

தையல்நாயகி சமேத வைத்தீஸ்வரப் பெருமான் பஞ்சலிங்க சமஸ்டியாக வண்ணையில் எழுந்தருளிய பெரும்பேற்றினைக் கண்களிப்பக் கண்டுருகி வருஞ் சந்ததியார்களில் நெஞ்சிற் பதியுமாறு அன்று தம்பிரான் சுவாமிகள் பாடிய பாடலின் அமைதியே அமைதி.

யாழ்ப்பாணத்தில் சைவத் தமிழ்ப் பாரம்பரியத் தின் மறுமலர்ச்சிக் காலத்து முன்னோடிகளுள் ஒருவராய் ஒளி வீசிய பின் 1795ஆம் ஆண்டளவில் ஒய்வுடன் ஞானவொடுக்கத்தமர்ந்து சமாதியாயினர். அவர் சமாதி யான இடம் நல்லூரையடுத்த அரிவாலையோ என்பது ஆய்வுக்குரியதாகும்.

# மாவை வாசி தந்த மாண்புடைப் பள்ளு

ஈழநாட்டுப் புலவர்கள் காலந்தோறும் தந்த தமிழ்ப் பிரபந்தங்களுள், காதல், தூது, நொண்டி நாடகம், பள்ளு, குறவஞ்சி முதலியன பொதுமக்கள் படித்துணரும் வகையில் சாதாரண மக்களின் வாழ்க்கைச் சம்பவங்களை வருணிப்பதில் சிறந்து விளங்குகின்றன. ஈழத்தெழுந்த பள்ளுகளும் காலத்தாற் பிந்தியது மாவிட்டபுரத்துச் சின்னக்குட்டிப் புலவர் தந்த தண்டிகைக் கனகராயன் பள்ளு என்னும் பிரபந்தமாகும்.

தமிழரசர் காலத்தில் காரைக்கால் என்னும் ஊரில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறிய வேளாளர் தெல்லிப்பழை, இருபாலை, மயிலிட்டி முதலாய இடங் களில் பெருஞ் செல்வராக வாழ்ந்தனர். அவர்களுள் தெல்லிப்பழையில் சிறப்புடன் வாழ்ந்த கனகராயன் என்பாரின் முன்னோருக்குத் தமிழரசர் தண்டிகை முதலாய விருதுகள் வழங்கிக் கௌரவித்திருந்தனர். அந்தச் சிறப்பு மேம்பாட்டினால் அவர்களின் பாரம் பரியப் பெயர்களுக்கு முன் தண்டிகை என்னும் விருது வழங்கவே, அந்த மரபில் வந்த இவர் தண்டிகைக் கனகராயன் எனப் புகழ் பெற்றார்.

## ஆஸ்தான புலவர்

தெல்லிப்பழையில் வாழ்ந்த தண்டிகைக் கனக ராயனின் மாளிகையில் மதிப்புவாய்ந்த ஆஸ்தான புலவராய் அம்மனையை அலங்கரித்தவர் மாவிட்ட புரத்தவராய சின்னக்குட்டிப் புலவர் என்னும் சிறந்த கல்விமானாவர். சின்னக்குட்டிப் புலவர் நல்ல தமிழ்ப் பரம்பரையில் உருவான நற்றமிழ்ப் புலவராவார்.

அவர் தாம் வாழ்ந்த பெரும்பகுதியெங்கும் அன்று நிலவிய உழவு வாழ்க்கையை நேரில் நன்றாக அறிந்தவராவர். உழவுத் தொழிலில் உழுவித்துண் போருக்குப் பண்போடும் பணிவோடும் பணிபுரிந்த தொழிலாளரின் பெயரினாலேயே பள்ளுப் பிரபந்தம் தோன்றியதாகும். ஆனால், அது உழவுத் தொழிலின் உயர்வையும் பண்பாட்டையும் குறிப்பதாகும்.

பள்ளுப் பிரபந்தம் நாடகமாக நடித்தற்கேற்ற வகையில் எழுந்ததாகும். அதிலே வருகின்ற உரை யாடல் அந்த நாடகத்துக்கு ஏற்றங் கொடுக்கும் ஓர்

அம்சமாகும். தொழிலாளிக்கு அக்கால வழக்கத்தின்படி இரண்டு மனைவியர் வெவ்வேறு பிரதேசத்தவராய் வந்து வாய்ப்பது வழக்கம். அவர்கள் இடையிடையே தங்களுள் உண்டாகும் பிணக்குகளில் ஆளை ஆள் செல்லமாகவும், காரசாரமாகவும் ஏசிக்கொள்ளும் போது அவரவர் பிரதேசத்து வாழ்க்கைப்போக்கு நாகரிகம் கண்டிக்கப்படும் வகையில் அவரவர் வணங்கும் தெய்வ மூர்த்தங்களும் கண்டிக்கப்படுதல் வழக்கமாயிற்று.

## மனைவியர் மரபை மாற்றிய புலவர்

பள்ளுப் பிரபந்தங்களில் பொதுவாகத் தொழிலாளியின் மனைவியர் வெவ்வேறு ஊரவராயோ, நாட்டவராயோ வந்து வாய்ப்பவராக, இங்கே சின்னக் குட்டிப் புலவர் சித்திரித்த மனைவியர் இருவரும் புகழ் பெற்ற வளம் நிறைந்த காரைக்காட்டுப் பிரதேசத்த வராய், ஒருத்தி வடபகுதியினளாகவும், மற்றவள் தென் பகுதியினளாகவும் வந்து வாய்த்துள்ளனர். இருவரும் அபிவிருத்தியடைந்த பிரதேசத்தவராகத் தங்கள் பிரதேச வளச் சிறப்புக் கூறும்போது படிப்பவர் மனம் பக்கஞ் சாராது மணிக்கூட்டு ஊசலி போல அங்கும் இங்கும் அசைகிறது.

நாட்டுவளம் கூறும் பெண்கள் தங்கள் நாட்டில் பாலும் தேனும் கலந்து பாய்வதாகவும், வாழை, மா, பலா ஆகிய முக்கனிகளின் சாறுகள் மூன்றும் திரண்டு பாய்வதாகவும், கிளி, குயில் முதலிய இனிய குரற் பறவைகள் ஒலி செய்வதாகவும் பாடுதல் புகழ்தல் வழக்கம். அந்த மரபில் இவர்களும் தத்தம் பிரதேச வளங் கூறுதல், கற்பனையில் ஓர் உயர்ச்சிதான். அந்த உயர்ச்சியிலே நெற்பயிர் கரும்பின் அளவுக்கு வளர் கின்றதென்றால் அதற்கு வயலில் உண்டான சேறுதான் காரணமாம்; அந்தச் சேறு முக்கனிகளின் சாறுதான்.

**வண்ண மாங்கனி யூற்றிய ஆற்றின்**
**வருக்கை வாழை பெருக்கிய சேற்றின்**
**கன்ன லென்னவே செந்நெல் வளர்ந்தோங்கும்**
**தென்காரைவள நாடெங்கள் நாடே.**

தென்காரைக்காடு இவ்வாறாக. வடகாரைக்காடு எவ்வாறென்னில் அங்கே செந்நெல்லினத்திலே பலவகை யான இனங்கள் முற்றிக் கலகலத்து அறுவடையாகி, மலைகள் போலக் குவிக்கப் பெற்றுள்ளதாம்.

**பலவிதச் செந்நெல் போரை மிதித்துப்**
**பகரும் பற்பல நற்றிசை தோறும்**
**மலைகளன்ன பொலியைக் குவிக்கும்**
**வடகாரைவள நாடெங்கள் நாடே.**

பாரத நாட்டிலே தென்திசைக்கு ஒரு பெரிய ஏற்றம் பண்டுதொட்டு இன்று வரை உண்டு. அது எக் காலத்திலும் உள்ளது. மேருமலை தாழ்ந்து தென்திசை உயர்ந்தபோது, திசையனைத்தின் பெருமையெல்லாம் தென்திசையே சென்றேற என வருந்தொடர் தென்னாட்டுத் தெய்வமே எந்நாட்டவர்க்கும் தெய்வம் எனப் போற்றவும் வைத்தன. அந்த வகையில் அந்த மரபில் வந்த தென்காரைக்காற் பெண் என்ன சொன்னாள் தெரியுமா?

திருவைந்தெழுத்தும் என்றும் சனாதனமாய் நிலவும் சைவ சமயமும் திருநான்மறையும், திருமால், பிரமன் ஆகியோராலும் அறியமுடியாத நீதியும் வாய் மையும் வளர்ந்தோங்கிய சிறப்பில் திருவெண்ணீற்றின் சிறப்பும் அறநெறியும் தென்பகுதியிலே வளர்ந்தோங்கு கின்றதாம்.

**மருவும் அஞ்செழுத்தும் வளர் சைவமும்**
**மறையும் நீதியும் வாய்மையும் ஓங்கிட**
**திருவெண்ணீறும் அறநெறியும் வளர்**
**தென்கரைவள நாடெங்கள் நாடே.**

## மற்றுஞ் சில மரபு மாற்றங்கள்

பள்ளுப் பிரபந்த மரபில் சின்னக்குட்டிப் புலவர் செய்த மற்றுஞ் சில மரபு மாற்றங்களும் உண்டு. பள்ளுப் பிரபந்தப் பாத்திரங்கள் அவர்கள் செய்த தொழில்களை யும், இருப்பிடச் சூழல்களையும் அடிப்படையாகக் கொண்டே வழங்கிவந்தன. சங்ககால இலக்கியங்களில் ஆயிரக்கணக்கான தனிப்பாடல்களிலேயும் அந்த மரபு நிலவி வந்தது. கலித்தொகை, நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு முதலிய பாடல்களில் தலைவன் தலைவியர் தனிப்பட்ட பெயர் பெற்றவராய் இருப்பதாகத் தெரிய வில்லை. அந்த வகையிலே வந்த வரிசையிலேதான் பள்ளுப் பிரபந்தப் பாத்திரங்களும் வழங்கிவந்தன வேனும், சின்னக்குட்டிப் புலவர் அந்த வரன்முறையை மாற்றிப் பாத்திரமாயமைந்த பண்ணைத் தொழி லாளிக்குப் பெயர் குறிப்பிட்டு நாகன் என வழங்கு கின்றார்.

இன்னும் சின்னக்குட்டிப் புலவர் எடுத்துக் கொண்ட பிரபந்தத்தின் பாட்டுடைத் தலைவனாகக் கனக நாயகன் என்பானின் குலமுறை கிளத்தும் மரபினையும் அவ் விருந்தாகப் புதுவதாக, நூதனமாக, புரட்சிகரமாக நுழைத்துள்ளார். கனகநாயகனின் முன்னோருள் பெருஞ் சிறப்புப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தவர் கனகராயன் என்பாரவர். இங்ஙனம் நுழைந்தவர் அந்தக் குலமுறை யில் வந்தவர்கள் வரன்முறையாக வாழ்த்தும் பகுதியும் புதியதாகத் தெல்லிப்பழை, மயிலிட்டு, இருபாலை ஆகிய மூன்று ஊர்களிலும் வாழ்ந்த முப்பத்து நால் வரை வாழ்த்துகின்றார். இந்தக் கனகராயன் குடும்பத்துக் கும் கனகராயன் குளத்துக்கும் தொடர்பு இருக்கலாமோ தெரியவில்லை.

## நூலாக்கிய பெருமை

இவ்வாறாகத் தண்டிகைக் கனகராயன் பள்ளினை நன்றாக ஆராய்ந்து வரலாற்று விளக்கம் முதலிய சிறப்பு களோடு அருமையாக அரிதில் முயன்று 1932-ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்ட பெருமை பட்டதாரி யும் சட்டத்தரணியுமான அறிஞர் குமாரசுவாமி அவர் களுக்கே உரியதாகும். இவர் கோப்பாய் முன்னாள் பிரதிநிதி வன்னிய சிங்கம் அவர்களின் தந்தையாராவர். இப்பெருமகனார் தேடிவைத்திருந்த யாழ்ப்பாணத் தமிழ் நூல்கள் பல வன்னிய சிங்கம் அவர்கள் மூலமாக யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் அன்பளிப்பாகக் கிடைத்திருக்கின்றன. அவை அக்கினி பகவானுக்கு ஆகுதி யாகிவிட்டமை தமிழர் செய்த தவக்குறைவேதான். ✱

*(தொடரும்)*




# கனடா தமிழர் தகவல்
# 16 ஆவது ஆண்டு மலர்

பிரதம ஆசிரியர், திரு. எஸ். திருச்செல்வம்

*(கனேடிய மண்ணில் அண்மையில் வெளிவந்ததொரு சிறப்பு மலர் பற்றிய விமர்சனம் இவ்விதழில் இடம்பெறுகிறது. நூலகவியலாளர் திரு. என். செல்வராசா அவர்கள் இலண்டன் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 8-4-07 அன்று செய்த அறிமுக உரையிலிருந்து தொகுக்கப்பட்டது. - ஆசிரியர்.)*

தகவல் துறையில் பதினாறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து பதினேழாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் தமிழர் தகவல் என்ற மாதாந்த தகவல் இதழில் ஈரெண் அகவைச் சிறப்பிதழாகப் பெப்ரவரி 2007க்குரிய இதழ் கனதியாக வெளிவந்துள்ளது. தமிழர் தகவல் கனேடிய மண்ணில் வாழும் புலம்பெயர் தமிழர்களுக்கு அன்றாடம் பயனுள்ள அடிப்படைத் தகவல்களைத் தமிழில் தருவதையே ஆரம்பத்தில் தனது முழுமையான நோக்கமாகக் கொண்டிருந்தது. பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் அங்குப் புலம் பெயர்ந்து சென்ற எம்மவர்கள் அத்தியாவசியமாக அறிந்திருக்க வேண்டிய கனேடிய அரசின் செயல்திட்டங்கள், அறிவித்தல்கள் சட்ட திட்டங்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துத் தமிழாக்கம் செய்து வழங்கியும், அவை தொடர்பான மேலதிக தகவல்கள், செய்திகள், ஆலோசனைகள் போன்றவற்றைச் சிறு கட்டுரை உருவில் துறைசார் அறிஞர்களைக்கொண்டு எழுதுவித்து மாதாந்தம் வெளியிட்டு வந்த தமிழர் தகவல், கனேடிய மண்ணில் வாழப்புகுந்த எம்மவர்களுக்கும் கனேடிய மக்களுக்கும் இடையே ஒரு உறவுப்பாலத்தை இன்றுவரை காத்திரமாக அமைத்து வந்திருக்கின்றது.

இன்றுவரை ஏறத்தாழ நான்கு இலட்சம் ஈழத் தமிழர் கனடாவில் குடியேறியிருக்கிறார்கள். அவர்கள் இன்று கனேடியத் தமிழர்களாக, அந்நாட்டுச் சட்டதிட்டங்களை அறிந்து, அனுசரித்து ஏனைய கனேடிய குடியேற்றவாசிகளுடன் இணைந்து சுதந்திரமாக வாழ்ந்து வருகிறார்கள். எம்மவர்களின் புகுந்த வீடாகிய அங்குத் தாய்நாட்டின் நினைவுகளுடனும். தாய்மொழியை அன்றாட வாழ்வில் சுதந்திரமாகப் பேசிப் பயன்படுத்தியும் வருவதுடன் கனேடிய மண்ணின் நிர்வாக நடைமுறைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டும் அதற்கமைய ஒழுகியும் வாழ்ந்து வருகிறார்கள். இதற்குத் தமிழர் தகவல் என்ற இந்த மாதாந்த தகவல் இதழில் பதினாறு ஆண்டுப் பங்களிப்புக் கணிசமான பக்கபலத்தினை வழங்கி வருகின்றது.

தமிழர் தகவலின் பயணம் ஒட்டகப் பயணம் என்று அதன் ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள் ஓரிதழில் குறிப்பிடுகின்றார். பாலை மணலில் தன் சுவடுகளை ஆழமாகவும் நேர்த்தியாகவும் பதிந்து செல்லும் ஒட்டகம் போலத் தமிழர் தகவல் மாத இதழும் தன் பதினாறு ஆண்டுப் பயணத்தை நேர்த்தியாகப் பதிந்து வந்திருப்பதை அதன் பழைய தடங்களிலிருந்து அறிய முடிகின்றது. தமிழர் தகவல் ஆண்டுமலரின் சிறப்பம்சம் யாதெனில் அதில் வழமையான சிறப்பிதழ்களில் முக்கிய இடம் பெறும் படைப்பிலக்கியங்களுக்கு - அதாவது கதைகள், கவிதைகளுக்கு முக்கிய இடம் இருப்பதில்லை. பெரும்பாலும் தகவல் கட்டுரைகளையே தாங்கி வருவது இம்மலரின் சிறப்பம்சமாகும்.

தமிழர் தகவல் 16ஆவது ஆண்டு மலரில் 100க்கும் அதிகமான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கட்டுரைகள், கனடாவிற்குள் மட்டும் என்ற புவியியல் எல்லையற்று உலகெங்கிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களையும், அவர்களது வரலாறுகளையும் புலம் பெயர் வாழ்வியலில் அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளையும், அதற்கான ஆலோசனைகளையும் அவர்கள் சந்தித்த வெற்றிகளையும் ஓரளவு பதிவுக்குள்ளாக்கியுள்ளனர். அனுபவம் மிக்க படைப்பாளிகளுக்கு இணையாக அறிமுக எழுத்தாளர்களையும் குறிப்பாக இரண்டாம் தலைமுறை இளைஞர்களையும் களத்தில் இறக்கி அவர்களின் தமிழ் ஆங்கில ஆக்கங்களையும் பதிவு செய்திருப்பது விதந்து குறிப்பிடத்தக்கது. இளையோர் பக்கங்களை இவர்களின் ஆக்கங்கள் கணிசமான அளவு அலங்கரிக்கின்றன.

வழமை போலவே இம்முறையும் தமிழர் தகவல் ஆண்டு மலர் வெளியீடு, தமிழர் தகவல் வருடாந்த விருது வழங்கும் வைபவத்துடன் இடம்பெற்றிருந்தது.

சமூகப்பணி, கல்வி, ஆய்வுப்பணி, தொழிற்றுறைசார் பணி, கலைப்பணி, ஆகியவைக்காகக் கனடாவில் வாழும் 10 பிரமுகர்கள் தமிழர் தகவல் வருடாந்த விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். நீண்டகால சமூகப் பொதுப்பணிகளுக்காகவும் கலை இலக்கியப் பங்களிப்புகளுக்காகவும் தொழில்துறை சார் மகத்துவத்துக்காகவும் இவர்கள் தமிழர் தகவல் சிறப்பு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். கல்வித் திறமை, கலைத் துறை, தொண்டர் சேவை, விளையாட்டு, தேசிய இளைஞர் சேவை ஆகியவைகளுக்காக அடையாளம் காணப்பெற்றுள்ள மாணவ மணிகளும் தமிழர் தகவல் விருதுகளைப் பெற்றனர். அவர்களது விவரங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. இவ்வாண்டு தமிழர் தகவல் விருதினைப் பெற்றவர்களுள் கலாநிதி நா. சுப்பிரமணியனும் ஒருவர். திறனாய்வாளரான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நீண்டகாலம் பணியாற்றியவர்.

இம்மலரின் முன்னட்டையினை விருது பெறும் பதின்மரின் புகைப்படங்கள் அலங்கரித்திருக்கின்றன. உள்ளே விருதாளர்களைப் பற்றிய அறிமுகக் கட்டுரைகள் இடம் பெற்று உள்ளன. மேலும், பக்கங்கள் தோறும் ஆக்கங்களை வழங்கிய படைப்பாளிகளின் புகைப் படங்கள் ஆக்கங்களுடன் சேர்ந்து நூலை அலங்கரித்த வண்ணமுள்ளன.

புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொரு ஈழத் தமிழீழக் குடும்பங்களின் இல்லங்களிலும் இந்த மலர்கள் பேணப்பட வேண்டியவைகளாகும். இலவசமாக விநியோகிக்கப்படும் இம்மலர்களைத் தமிழர் தகவல் அலுவலகத்திலிருந்து தபால் செலவுடன் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்கும். Tamil Information, P.O. Box. 3, Station F, Toronto, Ontario, M4Y 214, Canada.

*

# ஈழத்து நாடகமேதை வைரமுத்து

## - கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

# வாழ்க்கை வரலாறு (14)

*யாழ்ப்பாணத்து அடிநிலை மக்கள் விரும்பிப் பார்த்துக் களித்து வந்த ஒரு நாடக மரபினை, இன்று நகர ரசனை மட்டத்துக்குக் கொண்டு வந்தவர் நடிகமணி வைரமுத்து; இவர் அற்புதமான பாடகர்; அதியற்புதமான நடிகர்.*

**- பேராசிரியர் கா. சிவத்தம்பி**

## இயல் பதின்நான்கு
## மேடைக் காட்சியமைப்பு

பரதமுனிவர் தமது 'நாட்டிய சாஸ்திரம்' என்னும் நாடகவியல் பற்றிய நூலில் நாடக அரங்கம் எப்படியிருக்க வேண்டும் எனக் கூறியிருப்பதை இங்கே நோக்குதல் பொருத்தமுடையதாகும். 'சதுரம்' 'நீள்சதுரம்' 'முக்கோணம்' ஆகிய வடிவங்களில் இவை அமைக்கப் படலாம் என்பது அவருடைய கருத்தாகும். இவ்வரங்குகள் மிகப் பெரியனவாக, இடைப்பட்டனவாக அல்லது சிறியனவாக நிறுவப்படலாம். எனினும் இடைப்பட்ட நீள்சதுரமான வடிவத்தையுடைய அரங்கே சிறப்பு உடையது என மேலும் வலியுறுத்துவர் பரதர்.

மிகப்பெரிய அரங்குகளில் நடிகர்களின் முக பாவங்களை அவதானிக்க முடியாதென்றும், அவர்கள் பேசுவதைச் சரியாகக் கேட்க முடியாதென்றும் இவர் கருதுகின்றார். ஆனால், இன்று ஒலிபெருக்கி வசதியும், மின்னொளி வசதியும் உள்ளதால் பெரிய அரங்குகளை அமைப்பது தவறல்ல என இன்றைய நாடகவியலாளர்கள் கருதுகின்றார்கள்.

நாட்டார் கூத்துகள் ஆரம்ப காலத்தில் 'வட்டக் களரி'யிலேயே ஆடப்பட்டு வந்தன. மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்தில், ஒரு சில இடங்களிலும் இன்றும் வட்டக்களரியிற் கூத்தாடுவதைக் காணலாம். கிறிஸ்தவர்களின் வருகைக்குப் பின் மன்னாரில் வட்டக்களரிக்குப் பதிலாகக் கொட்டகையமைத்து, கொட்டகையின் முன் அரைவட்டக்களரியமைத்துக் கூத்துகளை மேடையேற்றத் தொடங்கினர். ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்னர் அரங்க வளர்ச்சியில் ஏற்பட்ட பெரு வளர்ச்சியினாலும், பாரசீத் தியேட்டர் மரபினரின் வருகையினாலும் ஒருமுகமேடை (Proscenium theatre) அறிமுகமாகியது.

அரங்கம் மிகவும் கலையழகு சொட்டும் வனப்புடன் தூண்கள், சிலைகள், ஓவியங்கள் என்பனவற்றுடன் விளங்குதல் வேண்டும் என்பர் பரதர். நாடகமேடை எப்பொழுதும் மங்களகரமாக இருத்தல் வேண்டும். மேடைப் பொருள்கள் அளவுக்கு அதிகமாகவிருத்தலாகாது. அளவுக்கு விஞ்சிய அலங்காரப் பொருள்கள் இருக்குமானால் பார்ப்போருடைய கவனம் முழுவதையும் நாடகத்திற் செல்லவிடாது அவை தடுத்துவிடும். இப்பொருள்களில் மட்டும் கவனம் செலுத்தப்படுமானால் பார்ப்போரால் நாடகத்தை முழுமையாகச் சுவைக்க முடியாது போய்விடும்.

மேடையிற் செய்யப்படும் காட்சிப் பொருள்களைப் பரதர் மூன்று வகையாகப் பாகுபடுத்திக் கூறுவர். அவை யாவன:

1. ஸந்திம: கடதாசி, மூங்கில், புல், துணி, தோல் என்பனவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் மேடைப் பொருள்கள்.
2. வியாஜிம: கயிறு, கப்பி, கம்பு, நெம்புகோல் ஆகிய மேடைப் பொருள்கள்.
3. சேஷ்டிம : துணியினால் தயாரிக்கப்பட்ட நகரும் தன்மையுடைய பொருள்கள் (Appa Rao 1965:61).

தேர், மலை ஆகியனவும் ஓவியத் தட்டிகளும் (தள்ளு தட்டிகள்) இவற்றுள் அடங்கும்.

மேடையலங்காரத்துக்கெனச் செய்யப்படும் பொருள்கள் அனைத்தும் கனமில்லாதனவாகவும் இலகுவாக எங்கும் எடுத்துச் செல்லக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும். வசந்த கான சபையினர் அமைத்த மேடைப் பொருள்களும் பரதரின் கருத்துடன் இணைந்து செல்லக் காணலாம்.

நடிகமணி வைரமுத்து 'நாட்டிய சாஸ்திரம்' படித்தவரல்லர். ஆனால், அவருடைய நாடகவியல் பற்றிய அறிவு நாட்டிய சாஸ்திரத்துடன் ஒத்துப் போவதை அவதானிக்க முடிகிறது. இதற்கு இவருடைய ஆசிரியர்களும், இவருக்கு வழிகாட்டிகளாக வாழ்ந்து சென்ற கலைஞர்களும் காரணமாக அமைந்திருக்கிறார்கள் எனக் கருதமுடிகிறது.

வசந்தகான சபையினர் நடித்த நாடகங்கள் பார்சி மரபு வழிவந்த இசை நாடகங்களாகும். பார்சி தியேட்டர் மரபினர் பிரமாண்டமான கொட்டகைகளை அமைத்து, உயர்ந்த ஒரு முகமேடையில் (Proscenium) முன்திரை, பின்திரை, பக்கத்திரை என்பனவற்றைக் கட்டிப் பலவகையான அரங்க அமைப்புகளுடன் நாடகங்களை மேடையேற்றினர். ஏற்றியிறக்கும் திரைகளையும், சக்கரம்

பூட்டப்பட்ட தள்ளிவிடும் ஓவியத் தட்டிகளையும் பயன் படுத்தினர். கொசுவலை போன்ற துவாரமுள்ள மெல்லிய துணிகளின் பின், பேய், பிசாசு, ஆவி போன்ற பாத்திரங் களை நடிக்க வைத்தும், தெய்வ, அமானுஷப் பாத்திரங் களைத் தோன்ற வைத்தும் நாடகமாடினர்.

ஆயினும், வசந்தகான சபையினர் பிரமாண்ட மான மேடைகளை அமைத்து நாடகமாடவில்லை. அவர்கள் கோயில் வீதிகளிலும் பொது இடங்களிலும் பாடசாலை அல்லது பொது மண்டபங்களிலும் நாடகங் களை மேடையேற்றினர். இவர்கள் நீள் சதுரமான உயர்ந்த ஒருமுக மேடைகளை அமைத்து நடித்து வந்தனர்.

வைரமுத்து இந்தியாவில், நவாப் இராஜ மாணிக்கம் பிள்ளை குழுவினர், கன்னையா குழுவினர், கருணாலயா பாகவதர் குழுவினர் ஆகியோர் நடித்த நாடகங்களைப் பார்த்த அனுபவமுடையவர். இந்திய நாடகக் கலைஞர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு இருந்தவர். அதனால் சில சமயங்களில் மேடையலங் காரங்களை அழகாக அமைத்து நாடகங்களை மேடை யேற்றியும் வந்துள்ளார் என்பதனையும் இங்குக் குறிப்பிடத்தான் வேண்டும்.

நடிகமணி வைரமுத்துவுக்கு மேற்படி காட்சிகளை யெல்லாம் அமைத்துக் கொடுத்த ஓவியர் க. கோவிந்த சாமி (அப்பையா) என்பவராவர். இவர் வேறு யாரு மல்லர். வைரமுத்துவின் வளர்ப்புத் தந்தையார் க. முருகேசுவின் உடன் பிறந்த சகோதரராவார். கற்பனை வளமும் ஓவியத் திறனும் கொண்ட கோவிந்தசாமி ஏராளமான காட்சியமைப்புகளைச் செய்து கொடுத்தார். இந்தியக் கலைஞர்களுக்கு மேடையமைப்புகளைச் செய்து கொடுத்த கொண்டை ராஜு எனும் கலைஞர் அமைத்த மாதிரிகளைப் பார்த்துத் தன்னுடைய கற்பனையையும் இணைத்து ஆரம்பத்தில் மேடையமைப்புகளைச் செய்யத் தொடங்கியதாகக் கோவிந்தசாமியவர்கள் கூறியுள்ளார். ஆனால், பிற்காலத்தில் அவர் அமைத்த காட்சிகள் ஒப்புயர்வற்றவை; தனித்துவமானவை.

பூதத்தம்பி நாடகத்துக்காக இவர் அமைத்துக் கொடுத்த பழைய யாழ்ப்பாண நகரின் தோற்றம், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் பழைய தோற்றம், யாழ்நகர வீதி, கொழும்பு வீதி, பூநகரி ஏரி, அதனோடி ணைந்த காட்சிகள் என்பன வியக்கத் தக்கனவாகும்.

நல்ல காட்சியமைப்புகளுடன் நாடகங்களை மேடையேற்றிய நடிகமணி வைரமுத்து, காலப்போக்கில் இவற்றை விடுத்து இசைக்கும், நடிப்புக்கும் முக்கியத்து வம் கொடுத்துச் சாதாரண வெறுந்திரைகளின் முன் நடிக்கவாரம்பித்தார். மக்கள் மனத்திற் பதியும் வகையில் இவரது நடிப்பும் இசையும் அமைந்த காரணத்தினால், வெறுந்திரைக்கு முன்பே, மயானகாண்ட நாடகத்தில் மயானக் காட்சியையும், நந்தனார் நாடகத்தில் சிதம்பரம் கோயிலையும், நடேசரையும், பூதத்தம்பி நாடகத்தில் யாழ்ப்பாணக் காட்சிகளையும், பார்ப்போர் மனக் கண்ணிற் கண்டு சுவைத்தனர்.

நாடகக் கதைச் சூழலுக்குப் பொருந்தாத மேடைப் பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம் பார்ப்போரு டைய இரசனையைக் கெடுக்க வேண்டியேற்பட்டுவிடும் என்ற கருத்துடையவர் வைரமுத்து. இதற்கு ஓர் உதாரணத்தைக் கூறலாம்.

'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தைப் பிறிதொரு குழுவினர் நடத்திக் கொண்டிருந்தனர். இந்நாடகத்துக்கு நடிகமணி வைரமுத்து ஆர்மோனியம் வாசித்துக் கொண்டிருந்தார். சத்தியவான், கானகத்தில் ஒரு வாங்கில் (Bench) தூங்கிக் கொண்டிருக்கிறான். அப்பொழுது சாவித்திரி தன்னுடைய கைகளைத் தட்டி அவனைத் துயிலெழ வைக்கிறாள். அவன் ''ஏனோ எனையெழுப்ப லானாய் மடமானே...'' என அவளைப் பார்த்துப் பாடுகிறான்.

சபையில் இருந்த ஒருவர் ''காட்டிலே யாரடா வாங்கு கொண்டு வந்து போட்டவன்?'' என்ற வினாவைக் கேலியாக எழுப்புகின்றார். சத்தியவானாக நடித்தவருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் ''உனக்கு விருப்பமென்றால் நாடகத்தைப் பார்; இல்லாதுவிட்டால் எழுந்துபோ'' என்றார் ஆத்திரத்துடன். சபையில் இதனாற் பெருங்குழப்பம் உண்டாக, நாடகமும் சிறிதுநேரம் இடைநிறுத்தப் படலாயிற்று. இதன் பின்னர்ச் சத்திய வானாக நடித்தவரால் தொடர்ந்து நன்றாக நடிக்க முடியவில்லை.

இச்சம்பவம் பற்றிக் குறிப்பிடும்போது நடிகமணி வைரமுத்து பின்வருமாறு கூறினார். ''நடிகன் சபையில் நடப்பதைப் பற்றிக் கவலைப்படக்கூடாது. அவ்வாறு கவனம் செலுத்தினால் நடிப்புப் பாதிக்கப்பட்டுவிடும். சிந்தனை முழுவதையும் நடிப்பிலேயே முழுமையாகச் செலுத்துகின்ற எந்த நடிகனையும் வெளிப்புறச் செயல்கள் பாதிப்பதில்லை.''

இத்துடன் தொடர்புபடுத்தி இன்னொரு சம்பவத் தையும் இவ்விடத்திற் கூறுதல் மிகவும் பொருத்த முடையதாகும். நடிகமணி வைரமுத்து 'பூதத்தம்பி' நாடகத்தில் அந்திராசியாக நடித்துக் கொண்டிருந்த சமயம், அழகவல்லியைக் கொடுமைப்படுத்தும் காட்சி இடம் பெற்றது. இதனால் ஆவேசமுற்ற பார்ப்போருள் ஒருவர் ''விடடா அவளை'' எனக் கத்தினார். வைர முத்து ஒன்றுமறியாதவர்போலத் தனது பாகத்தை நடித்து முடித்தார். நாடக முடிவில் இதுபற்றிக் குறிப்பிட்டபோது ''அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததா'' என வைரமுத்து திருப்பிக் கேட்டார் (தகவல் : மார்க்கண்டு) அவர் மேடையில் நடிக்கும்போது அதை ஒரு யோகமாகவே கொள்கிறார் என்பதை இவ்விடத்தில் வலியுறுத்த விரும்புகிறேன். ஆயினும், சபையில் நடப்பதைப் பூரண மாக அவதானிக்காமல் நடிக்கின்றார் என்றும் சொல்ல முடியாது. அவருடைய சிந்தனை முழுவதும்

நடிப்பிலேயே தோய்ந்துவிடுகிறது என்பது மட்டும் உண்மை.

## ஒளி, ஒலி அமைப்பு

இன்று ஒளி, ஒலி என்பன நாடகத்துறையில் முக்கியமான அம்சங்களாக அமைந்துள்ளன. அன்று கூத்துக் களரியை அல்லது நாடக மேடையைத் தீப்பந்தங் களாலும், காடை விளக்குகளாலும் ஒளியூட்டினர். காலப் போக்கில் அவ்விடத்தைக் காஸ் (gas), விளக்குகளும், பெற்றோமாக்ஸ் விளக்குகளும் பிடித்துக்கொண்டன. மின் விளக்கின் வருகைக்குப்பின் ஒளியமைப்பு நாடகத் துறையில் தனிக்கலையாக வளர்ச்சி பெற்றுவிட்டது. குறிப்பாக மேல் நாடுகளில் இதனை அவதானிக்க முடிகிறது. ஆனால் இலங்கையில் இத்துறை அத்தகைய வளர்ச்சி பெறவில்லை. இந்தியாவிற்கூட இவ்வளர்ச்சி போதாதென்கின்றார் பத்மா சுப்ரமணியம். (1985 : 125)

நாடக மேடையில் முக்கியமாக இருவகை விளக்குகளைப் பயன்படுத்துவர். ஒன்று நிழல் விழாத படி பல திசைகளிலிருந்தும் ஒளி தரும் பெருக்கொளி. இதனை ஆங்கிலத்தில் Flood Light என்பர். மற்றையது குறிப்பிட்ட இடத்தில் மட்டும் வட்டமாக ஒளிபாய்ச்சும் 'விளக்கு வட்டம்' அல்லது 'பொட்டொளி' இதனை ஆங்கிலத்தில் Spot Light என்பர்.

வைரமுத்து பெரும்பாலும் பிரகாசமான வெளிச் சத்தில்தான், நாடகங்களை நடத்துவது வழக்கம். மண்டபங்களிலும், முக்கியமான இடங்களிலும் மட்டும் 'ஸ்பொட்' லைற்றைப் பயன்படுத்துவர். மயானக் காட்சி யின்போது எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டு ஈமத் தீயின் முன் நடிக்கும் இவர், சில சமயங்களில் ஸ்பொட் லைற்றையும் பயன்படுத்துவர். மயானக் காட்சியின் போது வெளிச்சத்தைக் குறைத்து இருளோடு கூடிய மந்தமான ஒளியிலும் அக்காட்சியை நடித்துக் காட்டுவது வழக்கம்.

நாடகத்தில் ஸ்பொட்லைற்றை மிகவும் நுணுக்க மாகப் பயன்படுத்தினால்தான் அது அழகாக இருக்கும். வட்டமான உலோகத் தகடுகளில் சுற்றிவர வட்டத் துளைகளிட்டு அதிற் பல வண்ணக் கடதாசிகளைப் பொருத்தி, மேடை முழுவதும் சுழற்றிச் சுழற்றிப் பல வண்ண நிறங்கள் விழும்படி செய்து, நாடகத்தின் சுவையைச் சிலர் கெடுத்து விடுகின்றனர். வைரமுத்து இதனை ஒருபோதும் அனுமதிப்பதில்லை. அதுமட்டு மன்றி, நாடகமேடையின் முன் விளிம்புடன் இணைத்து அமைக்கப்படும் காலடி விளக்குகளையும் (Foot Light) இவர் வரவேற்பதில்லை. இவ்விளக்குகள் நடிகரின் கண்களைக் கூசச் செய்து முகபாவத்தைக் கெடுத்து விடுகின்றன. கால்களின் கீழ்ப்பகுதியை மறைத்து விடு கின்றன. தரையில் நிழல் விழவும் காரணமாகின்றன. அத்துடன் பின் திரையிலும் நிழல் விழக் காரணமா கின்றன. பாத்திரங்களை விகாரமாகக் காட்ட வேண்டு மானால் காலடி விளக்கைப் பயன்படுத்தலாம். இக் காரணங்களால்தான் இவர் பெரும்பாலும் பெருக்கொளி யில் (Flood Light) நாடகங்களை நடத்தியுள்ளார்.

வைரமுத்து நடிக்கத் தொடங்கிய காலத்தில் ஒலிபெருக்கி வசதிகள் இருக்கவில்லை. அக்காலத்தில் பெரிய குரலில் உரத்துப் பாடி, பேசி நடிக்கக் கூடியவர் களால்தான் சிறந்த நடிகர்களாக விளங்க முடியும். அந்தவகையில் வைரமுத்துவும் ஒலிபெருக்கியின்றியே தூரத்தில் இருப்பவர்க்கும் நன்றாகக் கேட்கும் வகையில் ஆரம்ப காலத்தில் பாடி நடித்தார். *(தகவல் : க. முருகேசு)*

காலப்போக்கில் ஒலிபெருக்கி அறிமுகமாகியது. ஒலியியலை அறிந்து அதற்கேற்ப அரங்கங்களை அமைக்கும் கட்டடக்கலையும் பெருவளர்ச்சி பெற்றது. ஒலி பெருக்கியை மேடை அல்லது மண்டபம் என்பன வற்றுக்கேற்ற வகையில் அமைத்துக் கொடுப்பதே ஒரு தனிக் கலையாகும். மேடையின் எந்த எந்தக் கோணத் தில் நின்று நடிகர்கள் நடிப்பரோ அந்த அந்த இடத்திற் கேற்பவும், குரல்வளத்துக்கேற்பவும், ஒலிபெருக்கி மூலம் பார்ப்போர் அனைவரும், நடிகர்கள் பேசுவதை யும் பாடுவதையும் சுவைக்க வைத்தல் வேண்டும். அதே போலப் பின்னணி இசைக்கும் பொருந்தும் வகையில் ஒலியமைத்தல் வேண்டும். எதிரொலிக்காத வண்ணம் தெளிவாக ஒலியமைத்தல் இன்றியமையாததாகும்.

துரதிஷ்டவசமாக இக்கலை எமது நாட்டில் வளர்ச்சி பெறவேயில்லை என்றுதான் கூறவேண்டும். சொற்பொழிவுக்கு எப்படி ஒலி வாங்கியை அமைக் கிறார்களோ அதேபோலத் தான் இசைக் கச்சேரிகளுக் கும், நாடகங்களுக்கும் அமைக்க முயல்கிறார்கள். ஒலி வந்தால் போதும் என்ற சித்தாந்தமுடையவர்களாக எம்மவர்கள் இருக்கிறார்கள் என்ற குறையும் சொல்லப் படுகிறது.

ஒலியின் உரப்பை (Volume) உணர்ந்து அதன் ஏற்ற இறக்கத்தை நிர்ணயிக்கும் (Balancing) அறிவு இக்கலைஞர்களுக்கு இருத்தலவசியம். ஒலியமைக்கும் பணியில் ஈடுபடுபவர்கள் இன்றும் இதுபற்றிக் கவலைப் படுவதாகவில்லை.

மேடைக்கேற்ற வகையில் அல்லது மண்டபத்துக் கேற்ற வகையில் ஒலிவாங்கியை அமைக்கும் நுட்பம் வளராத ஒரு காலகட்டத்தில் தான் வைரமுத்து நாடகங் களை மேடையேற்றவாரம்பித்தார். பின்னர்த் தனக்குக் கிடைத்த அற்ப வசதிகளைக் கொண்டே ஒலியமைத்து இவர் அற்புதமாகத் தனது நாடகங்களை மேடை யேற்றிப் பெருவெற்றிகளையீட்டிக் கொண்டார். இவருடைய வெற்றிக்குக் காரணம் ஒலியமைப்புப் பற்றிய அறிவும் இவருக்கிருந்தமையாகும். *(தகவல் : ஆர்மோனிய வித்துவான் சின்னத்துரை)*

சுருக்கமாகச் சொல்வதானால் பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறுவதுபோல் ''யாழ்ப்பாணத்து அடிநிலை மக்கள் விரும்பிப் பார்த்துக் களித்து வந்த நாடக மரபினை இன்று நகர ரசனை மட்டத்துக்கு வைரமுத்து கொண்டுவந்தார்'' என்றால் அது அவருடைய நாடகத் துறைசார் பல்துறை அறிவும், அனுபவமுமே காரணி களாமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை. *

(தொடரும்)



# தியாகம்

சிறுகதை எழுத்தாளர் சி. வைத்திலிங்கம்

*(70 ஆண்டுகளுக்கு முன்பு ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் பிரகாசித்த சிறுகதை எழுத்தாளர் ஒருவரின் படைப்பு இங்கு மீள் பிரசுரம் செய்யப்படுகிறது.*

*தமிழ் இலக்கிய வரலாற்றில் ''மணிக்கொடி''க் காலம் என்பது மணியான காலமாகும். அக்கால கட்டத்தில்தான் தமிழ்ச் சிறுகதைகள், வெற்றுக் கற்பனைகளிலிருந்து விலகி, மானிட வாழ்க்கையின் இயல்புகளை எடுத்தியம்பும் படைப்பிலக்கியம் என்னும் பாங்கினைப் பெற்றது, ஓங்கி வளரத் தொடங்கியது.*

*அக்கால கட்டத்தில் ஈழத்தில் தோன்றிய எழுத்தாளர்களும், தாய்த் தமிழகத்தின் படைப்பாளர்களுக்கு இணையாகத் தங்களின் பங்கையும் செலுத்தித் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். அத்தகைய படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்க ஒருவரான திரு. சி. வைத்திலிங்கம் அவர்கள் எழுதிய சிறுகதைகள் 1930-40களில் தமிழகத்தின் முன்னணிப் பத்திரிகைகளிலும் ஈழத்தின் ஏடுகளிலும் வெளிவந்துள்ளன.*

*இவரது கதைகளைத் தொகுத்து வெளியிட்ட மணிமேகலைப் பிரசுரத்தார் பாராட்டுக்குரியவர்கள். இவ்வெளியீட்டை வெளிக்கொணர உதவிய திருமதி வைத்திலிங்கம் அவர்கள் தன் கணவர் மறைந்தாலும் அவரது படைப்புகளைத் தமிழ் வாசகர் வாசிக்கவேண்டும் என்று ஆவல் கொண்டுள்ளார். அவரது அபிலாசையை நிறைவேற்றவும் திரு. வைத்திலிங்கத்தின் எழுத்தாற்றலை இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவும் 1940 இல் கலைமகள் இதழில் வெளியான கட்டுரை இங்கு வெளியிடப்படுகிறது. - ஆசிரியர்)*

அநுராதபுரத்தில் செங்கோலோச்சி ஆண்டு வந்த தமிழ் மன்னனாகிய ஏலாளன் என்பவனைக் கொன்று சிங்கள இராச்சியத்தை மீண்டும் இலங்கையில் நிறுவிய துட்டைகைமுனு என்னும் அரசன் ஆண்ட காலம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டாகும். அக்காலத்தில் லங்காத்வீபம் தனிச் சிறப்புடன் விளங்கியது. தர்மசாலைகளும், விஹாரைகளும், தாது கோபுரங்களும் சிற்பச் செல்வங்களாய் விளங்கின. கழனிகளில் விளையும் தானிய வகைகளை ஏற்றிக்கொண்டு மரக்கலங்கள் துறைமுகங்களிலே வேற்று நாடுகளுக்குச் செல்லத் தயார் நிலையில் நின்றன. புத்த பகவானின் அறவுரைகளும், தர்மோபதேசங்களும் நாடெங்கும் பரவிச் சண்டைகளும் சச்சரவுகளும் மறைந்து சீருக்கும் சிறப்புக்கும் இடம் கொடுத்திருந்தன.

தமிழ் மன்னர்களைப் போரில் வெற்றி கண்டு, சிங்கள ஆட்சியை மீண்டும் இலங்கையில் நிலை நிறுத்திய பெருமை துட்டகைமுனுவுக்கு உரியது. ஆனால், அவன் பெயர் இன்றும் இம்மலைப் பிரதேசத்தில் பேசப் படுவதற்குக் காரணமாயிருப்பவன் சாலி என்னும் அவன் புதல்வனே. சாலி யானை யேற்றம், குதிரை யேற்றம், வில்வித்தை முதலியவைகளில் நிபுணனாய் விளங்கினான். அவன் மகாவீரனாய் இருந்ததல்லாமல் பெரிய கலா விநோதனாகவும் துலங்கினான். புத்த பகவானின் போதனைகளால் கவரப்பட்டுப் புத்த தர்மத்தைத் தானே படிப்பதிலும், அதை மக்கள் மத்தியில் பிரசாரஞ் செய்வதிலும் கண்ணுங்கருத்துமாயிருந்தான்.

கலை உள்ளம் படைத்த இந்த இராஜகுமாரனுக்கு அரசாங்க விவகாரங்களிலே மனம் செல்லவில்லை. நீரோடைகளும், சிற்றாறுகளும் புல்வெளிகளும், நிறைந்த கிராமப்புறங்களிலே யதேச்சையாய் அலைந்து திரிவான். ஒரு நாள் அரண்மனைக்கு வெகு தூரத்தில் இருந்த சோலை ஒன்றில் அவன் மனம் போல் சுற்றி வரும் போது, வெகு தொலைவில் பூங்கொடிகளுடன் ஒரு கொடி போல் ஒரு பெண் அசோக மலர்களைக் கொய்து தன் கூந்தலிலே சூடிக்கொண்டு நிற்பதைக் கண்டுவிட்டான். அவள் வாலை இளங்குமரி. வயசு பதினேழு பதினெட்டு இருக்கலாம். அவள் இடையைச் சுற்றி நாலு முழத்துண்டு. மேலே அவள் மார்பைக் கச்சினால் இறுகக் கட்டி இருந்தாள்.

சாலி அவளைக் கண்டதும் பார்த்த கண் எடுக்கவில்லை. ஸ்தம்பித்து நின்றான். அவன் உள்ள வீணையில் கேட்டும் கேளாமலும் விசித்திரமான உணர்ச்சி அலைகள் மிதந்து வருவது போல் உணரலானான். முன்னொரு பொழுதும் அநுபவியாத மன எழுச்சி, புளகாங்கிதம், அவனைத் திக்குமுக்காடச் செய்தன.

அத்தருணம் அவள் திரும்பித் தன் குடிசைக்குப் போக அடி எடுத்துவைத்தாளோ இல்லையோ, தன் முன்னால் தன்னையே பார்த்த வண்ணம் நிற்கும் சாலியைக் கண்டு கொண்டாள். இருவர் கண்களும் சந்தித்தன, கலந்தன... அவள் தலை கவிழ்ந்து கொண்டது. அவள் மேனியிலிருந்து யௌவன லீலைகள் சொரிந்த வண்ணமிருந்தன.

சாலி மெல்ல அவளை நெருங்கி மிகமிக மென்மையாய் ''வனதேவதையே, நீ யார்? எவ்விடத்தில் இருக்கிறாய்'' என்று வாத்சல்யத்துடன் வினவினான்.

''சுவாமி, நான் தேவதையுமல்ல, பூதகணத்தைச் சேர்ந்தவளுமல்ல, அதோ, தெரிகிறதே அந்தக் குக்கிராமத்தில் வசிக்கும் ஓர் ஏழைப் பெண், என்னை 'அசோகமாலா' என அழைப்பார்கள்''

''அசோகமாலா, அசோகமாலா'' என்று ஜபித்துக் கொண்டான் சாலி.

'அசோகமாலா'! என்ன அழகான பெயர்! அவளுக்கு எவ்வளவு பொருத்தமான பெயருங்கூட.

''அந்த வனமல்லிகைக் கொடிகளுக்கு மத்தியில் நிற்கும்போது, நீயும் ஒரு கொடி போல் என் கண்களுக்குக் காட்சி தருகிறாய். சிறிது நேரம் அப்படியே நில் பார்க்கலாம். நான் உன்னை என் நெஞ்சில் நிலை நிறுத்திக் கொள்கிறேன்.''

''வேண்டாம் சாமி. என் அண்ணா என்னை எதிர் பார்த்த வண்ணம் குடிசையில் இருக்கிறார். என்னைத் தேடிக்கொண்டு அவர் இங்கே வந்தால் இருவரையும் கொன்று விடுவார். மன்னியுங்கள் சாமி, நான் வருகிறேன்'' என்று அடி எடுத்து வைத்தாள்.

''சற்று நில், உன் அண்ணன் வேண்டாம். உன் கண்களே என்னைக் கொன்றுவிடும் போல் தெரிகிறது. என்னைக் கண்டதும் இப்படிப் பயந்து ஏன் ஓடுகிறாய்? எனக்கோ உன்னுடன் பேச வேண்டுமென்று ஆவலாய் இருக்கிறது. அந்தக் கொடி வீட்டில் நான் சிறிது நேரம் உல்லாசமாய்ப் பொழுதைக் கழித்து விட்டு...''

''வேண்டாம் சாமி, வேண்டாம். நான் இப் பொழுதே என் குடிசைக்குப் போக வேணும். என் அண்ணா என்னை இப்பவே தேடிக்கொண்டு வரப் போகிறார்''.

சாலியால் ஒன்றும் பேசமுடியவில்லை. அவள் போகும் போது அவனையே திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் போனாள்.

சாலி மறுநாள் அதிகாலையிலேயே அவ்விடத் திற்கு வந்துவிட்டான். அவள் கட்டாயம் வருவாளென்று அவன் மனத்தில் ஒரு நம்பிக்கை... சிறிது நேரத்தில் அவள் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள்! அவன் உள்ளம் இன்பப் பெருக்கால் துள்ளிக் குதித்தது...

சாலி அவளை வாஞ்சையுடன் பார்த்து ''மாலா, நீ மீண்டும் என்னிடம் வருவாய் என்று என் உள் மனம் சொல்லிக் கொண்டிருந்தது. என் வாழ்வில் நான் எத்தனை ரூபவதிகளைப் பார்த்திருக்கிறேன். என் மனம் ஜீவசக்தி அற்றுத் தூங்கிக் கிடந்தது. இன்று ஒரு புதிய உலகில் நான் உலாவி வருவதாக உணர்கிறேன். உன்னைப் பார்க்குந் தோறும் என் உள்ளம் கிளர்ந் தெழுந்து ஆரவாரிக்கிறது. வா, அந்தக் கொடி வீட்டில் சற்று பேசிக் கொண்டிருப்போம்.'' என்று அவன் முன் செல்ல அவளும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவர்கள் கொடி வீட்டை அடைந்த போது இளஞ்சூரியனின் கிரணங்கள் அந்த லதா கிருகத்தின் இலை, கொடிகள், ஊடாக வடிந்து சென்று வண்ணக் கோலங்களைத் தரையிலே வரைந்து கொண்டிருந்தன. இதையே பார்த்து வியந்து நின்ற சாலியைப் பார்த்துக் கேட்டாள்.

''சாமி, காணாததைக் கண்டவர் போல் இந்தக் கோலங்களைப் பார்ப்பதற்காகவா இங்கே வந்தீர்கள்?''

''இல்லை மாலா. அழகை எங்குக் கண்டாலும் நான் அதை ஆராதிக்கிறேன். பார், இந்த வனப் பிரதேசம் எவ்வளவு மனோரம்மியமாயிருக்கிறது. தூரத்தில் நீர் நிலைகளில் பட்சிக்கூட்டம் உல்லாசமாய் நீந்துகின்றன. மான் கூட்டங்கள் குளங்களிலே பயம் தெரியாமல் நீர் அருந்துகின்றன. பரந்த புல் வெளிகளிலே மாட்டு மந்தைகள் மேய்ந்து வருகின்றன. மெல்லிய இளந் தென்றல் காட்டு மலர்களின் சுகந்த மணத்தைச் சுமந்து வந்து மேனியை வருடி இன்பத்தில் ஆழ்த்துகிறது.''

''இவற்றையே தினமும் பார்த்துப் பழகிய என் கண்களுக்கு ஒன்றும் புதுமையாயில்லை''.

''என்றும் நீ என் பக்கத்தில் இருக்க வேணும். காதோடு காது வைத்து நீ என்னுடன் பேச வேணும். சின்னச் சின்ன கதைகள் நீ எனக்குச் சொல்லவேணும். நான் அதைக் கேட்டுச் சிரிக்க, நீயும் என்னுடன் சேர்ந்து சிரிக்க வேணும்... உனக்கு இவற்றில் புதுமை ஒன்றும் இல்லையா மாலா?''

''இதெல்லாம் உங்கள் கற்பனையில்தானே. நாம் இருவரும் இங்கே சேர்ந்திருக்க முடியுமா? இப்பவே உங்கள் இல்லத்தை நோக்கித் திரும்பி விடுவீர்களே, சாமி.''

''ஆகவே நான் இங்கே உங்கள் இனத்தவர் களுடன் தங்கிவிட வேணுமென்றுதானே விரும்புகிறாய்.''

''சுவாமி, வனமிருகங்கள் திரியும் காட்டுப் பிரதேசம் இது. நாங்கள் இழிகுலத்தார். வனவாசிகள். இக்கூட்டத்தினருக்கு என் தந்தை முடியப்பனே தலைவன். இங்கே அவர் இட்டது சட்டம். ஆதிவாசி களின் வாழ்க்கை போன்றது எங்கள் வாழ்க்கை முறை. வன விலங்குகளை வேட்டை ஆடிப் புசித்து வரு கிறோம். உங்களால் இந்த இழிந்த சூழலில் வாழ முடியுமா?''

''ஏன் முடியாது மாலா? நீயும், நானும் உன் தந்தை, தமையன், இன சனத்தார் சுற்றத்தார் யாவரும், சேர்ந்து முயற்சித்தால் இந்த இடத்தை ஒரு அழகிய கிராமமாக்கிவிட முடியும்.''

''நீங்கள் நகர்ப்புறத்தில் வாழ்ந்து பழக்கப்பட்ட வர்கள். அங்கே உள்ள வசதிகள் இங்கே கிடைக்குமா?''

''அதெல்லாம் கிடைக்கும். அதற்காகத்தான் என்னை உன் தந்தையிடம் அழைத்துப் போகும்படி கேட்கிறேன். நான் அவருடன் பேசவேண்டும். என் நோக்கங்களை அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.''

''நீங்கள் விரும்பினால் நான் மறுக்க மாட்டேன். அவரோ முன்கோபி. உங்களை உதாசீனம் செய்து விட்டால், அதை என் மனம் பொறுக்காது, இறந்தே போவேன்.''

''என்னைத்தானே அவர் உதாசீனம் செய்வார். அதற்கு நீ ஏன் இறக்க வேண்டும் மாலா?''

அசோக மாலாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. பின்னர் ''நான் சொல்லித்தான் நீங்கள் அறிய வேணுமா சாமி? என் வாயை ஏன் இப்படிக் கிளறுகிறீர்கள். நான் உங்களைக் கண்டதும்...'' மேலும் அவளால் பேச முடியாதபடி நாணிச் சிவந்து போனாள்.

சாலி, அவளைக் கனிவுடன் பார்த்து அவளை அணைத்த வண்ணம் வாஞ்சையுடன் ''இதை உன் வாயி லிருந்து அறிந்துவிட வேணுமென்று ஆசைப்பட்டேன். வா மாலா, நாம் உன் குடிசைக்குப் போகலாம்'' என்று இருவரும் நடக்கலானார்கள். அவர்கள் மேலும் பேச வில்லை. இருவர் உள்ளமும் அந்தரங்கமாய், மிக நெருக்கமாய், உறவாடிக் கொண்டிருந்தன. *

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

## மலையக எழுத்தாளர் வரிசை (13)

# மலைவிளக்காகத் திகழ்ந்த இலக்கியச் சுரங்கம் கே. கணேஷ்

**நூலகவியலாளர் என். செல்வராஜா**

மலையகத்திலிருந்து கிளம்பிப் பரந்துபட்ட தமிழக, ஈழத்துத் தமிழ் இலக்கிய கர்த்தாக்களிடையே தனக்கென்றொரு இடத்தை நிரந்தரமாக்கிய பின்னர் எம்மை விட்டுப் பிரிந்துள்ள படைப்பாளிகளுள் மலையகத்தின் மலை விளக்கு - கே. கணேஷ் குறிப்பிடத் தக்கவர். கண்டிக்கு அருகிலுள்ள அம்பிட்டிய என்னும் பிரதேசத்தில் தலாத்துஓயவில் வாழ்ந்து 5-6-2004 இல் மறைந்த கணேஷ், 2-3-1920 இல் பிறந்தவர்.

சித்திவிநாயகம் என்ற இயற்பெயரைக் கொண்ட கே. கணேஷின் முன்னோர் தமிழகத்தின் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தத்தமங்கலம் என்ற சிற்றூரிலிருந்து தாது வருஷப் பஞ்சத்தின்போது இலங்கைக்குக் கப்பலேறி மன்னார் மாத்தளை வழியாக மலையகத்தில் வந்து குடியேறியவர்களாவர். தந்தைவழி மூதாதையர் வைணவர்களாக ஸ்ரீரங்கம் அரங்கநாதனையும் திருப்பதி வெங்கடாசலபதியையும் குலதெய்வமாகப் போற்றியவர்கள். தாய்வழித் தாத்தா மலைநாட்டில் கங்காணியாக இருந்தவர். பின்னாளில் பேருவளையில் ரைட்டராகப் (P.W.D. Overseer) பணியாற்றியவர்.

இளவயதில் தன் ஆரம்பக் கல்வியைத் தோட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள Bapist Mission பெண்கள் கல்லூரியில் சிங்களமொழி மூலமும் பின்னர்க் கண்டி செயின்ட் அன்டணி (St. Antony's) கல்லூரியில் ஆங்கில மொழி மூலமும் கற்றார். தமிழ்மொழியைத் தம் தாயார் மூலம் வீட்டிலேயே கற்றுத் தெளிந்துள்ளார். அத்தாயின் மொழியே பின்னாளில் அவரது குருதியுடன் கலந்து நின்றுள்ளது. தமிழகத்திலிருந்த தாயார் தபாலில் பெற்றுத்தரும் தமிழ்க் கதை நூல்களை ஆர்வத்துடன் படித்துள்ளார். 1934ஆம் ஆண்டு முதல் இராமநாதபுரம் அரசரின் உறவினரான சேத்தூர் ஜமீந்தார் பாண்டித்துரை தேவர் அவர்களின் ஆதரவுடன் தொடங்கப்பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் சிலகாலம் கல்வி பயின்று உள்ளார். 1934-1935 களில் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டிருந்தது. இவரது இடதுசாரிக் கொள்கைகளாலும் தொடர்புகளினாலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து சில மாதங்களிலேயே விலக வேண்டி ஏற்பட்டது. பின்னர்ச் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் நுழைவுத் தேர்வில் சான்றிதழ் பெற்றுத் திருவையாறு அரச கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்தார்.

தமது பன்னிரண்டாவது வயதில் (1932இல்) ஆனந்தபோதினி என்ற பிரபல்யமான ஏட்டில் தமது எழுத்துப் பணியை ஆரம்பித்தவர் கே. கணேஷ். பின்னாளில் மணிக்கொடி, கலாமோகினி, கிராம ஊழியன், சக்தி, ஹனுமான், தென்றல் போன்ற சிற்றிலக்கிய ஏடுகளினூடாகத் தமது எழுத்துலக வாழ்வில் பயணித்து வந்தார். மணிக்கொடி சஞ்சிகையில் இரண்டு கதைகளை எழுதியவர் இவர். புதுமைப் பித்தன், பிச்சமூர்த்தி, வல்லிக்கண்ணன் போன்றோரின் காலத்தில் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர். இலக்கியக் கருத்துப் பரிமாற்றங்களில் வீறுடன் இறங்கியவர். சஞ்சிகை ஆசிரியர்களான பி.எஸ். ராமையா, ப. ராமஸ்வாமி, கு.ப. ராஜகோபாலன், வல்லிக்கண்ணன், தி.ஜ.ர. போன்றோருடன் இலக்கியத் தொடர்பினை ஆரோக்கியமாகப் பேணி வந்தார்.

இ. மாயாண்டி பாரதி, கே. இராமநாதன் சக்திதாசன் சுப்பிரமணியம் போன்றோர் அமைத்த இளைஞர் காங்கிரஸ் அமைப்பின் ஆதரவுடன் லோகசக்தி என்னும் முற்போக்குச் சிந்தனைகொண்ட பத்திரிகையைச் சிந்தாதரிப்பேட்டையில் இருந்த ம.கி. திருவேங்கடம் என்பவர் நடத்திவந்தார். மாயாண்டி பாரதி இந்திய அரசின் தியாகச் சின்னம் தாமிர விருது பெற்றவர். முன்னர் திருநெல்வேலி சதி வழக்கில் ஆயுள்தண்டனை பெற்று விடுதலையானவர். இவரது இல்லத்திலிருந்தே கணேஷ் முன்னாளில் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குச் சென்று கற்று வந்தார். பொதுவுடைமைக் கருத்துகளில் நாட்டம் கொண்ட இவருக்கு, லோக சக்தி பத்திரிகையின் வாயிலாகக் கம்யூனிச சித்தாந்திகளின் தொடர்பு ஏற்பட்டது. குறிப்பாகத் தமிழகத்தின் கம்யுனிஸ்ட் கட்சித் தோழர் ப. ஜீவானந்தனின் நட்பு இவருக்குக் கிட்டியது. பின்னர் 1938 இல் இலங்கை திரும்பியதும் தமிழக கம்யுனிஸ்ட் தலைவர்களுடனும் சுதந்திரப் போராட்ட வீரர்களுடனும் தொடர்பினைப் பேணிவந்தார். ஒரு காலகட்டத்தில் இவர் இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் முக்கிய செயற்பாட்டாளராகத் திகழ்ந்துள்ளார். எஸ். நடேசன் தலைமையில் இயங்கிய ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கலாசாரப் பிரிவின் பொறுப்பாளராக இவர் இருந்துள்ளார். மலையகப் படைப்புலகில் பிரபல்யமான பலர் தொழிற்சங்கவாதிகளாகவும் தொழிலாளர் நலனுக்காகக் குரல்கொடுப்போராகவும் இருப்பது நூற்றாண்டுப் பழைமைமிக்க மலையகத் தமிழர் வரலாற்றில் காலம் காலமாகப் பதியப்பட்டு வந்துள்ளது. கே. கணேஷ் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

நாடு திரும்பியதும் 1946இல் பாரதி என்ற தலைப்பில் முற்போக்குச் சஞ்சிகையொன்றினை, இலக்கியவாதி கே. இராமநாதனுடன் இணைந்து தொடங்கினார். பீற்றர் கெனமனின் வீட்டையே செயலகமாகக் கொண்டு இச்சஞ்சிகை வெளிவந்தது. பாரதியின் வெளியீட்டுக்குத் தேவையான மூலதனத்தைப் பெற அவரது தந்தையார்

இவர்பேரில் எழுதிவைத்த தலாத்து ஓயா காணியை (தற்போது தலாத்துஓயா மத்திய மகாவித்தியாலயம் அமைந்திருக்கும் இடம்) விற்றுச் செலவிட்டுள்ளார். இச்சஞ்சிகையில் அ.ந. கந்தசாமி உட்படப் பிரபல படைப்பாளிகள் பலா் எழுதியிருந்தனர். 1948 வரை பாரதி ஆறு இதழ்களே வெளிவந்திருந்தாலும், அது மலையக இலக்கியத்தில் ஏற்படுத்திய இலக்கியத் தாக்கம் வரலாற்றில் அழிக்க முடியாததாயிற்று. பாரதி இதழ்கள் பற்றிய விரிவான கட்டுரை முதலில் தினகரனி லும், பின்னர் மீள்பதிப்பாக நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள் (மல்லிகைப் பந்தல் வெளியீடு, 2002) என்ற நூலிலும் இடம் பெற்றுள்ளது.

அகில இலங்கை எழுத்தாளர் சங்கத்தின் உரு வாக்கத்திலும் கே. கணேசின் பங்கு குறிப்பிடத்தக்கது. கிழக்கின் சுவாமி விபுலானந்தரை தலைவராகவும் (பண்டிதர் சா. மயில்வாகனம்) சிங்கள இலக்கிய முன்னோடி மார்ட்டின் விக்கிரமசிங்கவை உபதலைவராகவும் கொண்டு இச்சங்கம் உருவாகியிருந்தது. அச்சங்கத்தில் கணேஷ் கலாநிதி சரத் சந்திரவுடன் இணைந்து இணைச் செயலாள ராகப் பணியாற்றினார். தமிழ் சிங்கள எழுத்தாளர்கள் ஒருங்கிணைந்த ஒரு குடை அமைப்பாக அந்நாள்களில் அகில இலங்கை எழுத்தாளர் சங்கம் திகழ்ந்தது. செய லாளரான சரத் சந்திரா மேற்படிப்பிற்காக இலண்டன் சென்றதால் இச்சங்கம் பின்னாளில் செயல்திறன் குன்றி யது. அவ்வேளையில் கே. கணேஷ், பாரதி பத்திரிகை, தேசாபிமானி, நவசக்தி ஆகியவற்றில் எழுதிய எழுத் தாளர்களைத் திரட்டி முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தினை ஆரம்பித்தார். செ. கணேசலிங்கன், சில்லையூர் செல்வராசன், அ.ந. கந்தசாமி ஆகியோர் ஆரம்பகால அங்கத்தவராகி இவருக்குப் பக்கபலமாயிருந்துள்ளார் கள். இவ்வேளையில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் களின் பிரதிநிதியாகப் பல தடவைகள் சர்வதேச மாநாடு களில் பங்கேற்று வெளிநாட்டுப் பயணங்களை இவர் மேற்கொண்டுள்ளார். சீனா, ரஷ்யா, பல்கேரியா போன்ற நாடுகள் அவற்றுட் சில.

இலங்கையின் சுதந்திரத்தின் பின் வீரகேசரி பத்திரிகையின் வார்ப்பதிப்பில் திரு. லோகநாதனின் கீழ் துணையாசிரியராகப் பணிபுரிந்துள்ளார். கே.பி.ஹரன், கே.வீ.எஸ். வாஸ் போன்றவர்களுடன் பணியாற்றிய கே. கணேஷ், வீரகேசரி சுதந்திர தினச் சிறப்பு மலரின் தயாரிப்புப் பொறுப்பையும் ஏற்று ஒப்பேற்றியிருந்தார். இவரது தீவிர கொம்யுனிசவாதிகளின் தொடர்பு காரண மாக மதுரைத் தமிழ்ச் சங்கம் போன்றே, சில காலங் களில் வீரகேசரியிலிருந்தும் விலக்கப்பட்டார்.

1947 ஜூன் 1 ஆம் திகதி சுதந்திரன் பத்திரிகை அரசியல் தினசரியாக வெளிவந்தபோது அதன் ஆரம்ப கால ஆசிரியராக கோ. நடேசையர் பணியாற்றினார். பின்னாளில் எஸ்.டி. சிவநாயகம் ஆசிரியராக இருந்த வேளையில் 1956இல் கே. கணேஷ் அங்குச் செய்தி யாசிரியராகப் பணியாற்றியுமுள்ளார்.

ஒரு மொழிபெயர்ப்பாளராக, கே. கணேஷின் பணி விதந்து கூறத்தக்கது. மணிக்கொடியில் அதிர்ஷ்ட சாலி என்ற பெயரில் ஹங்கேரியச் சிறுகதையொன்றை மொழிபெயர்த்து எழுதினார். இதுவே இவரது முதல் மொழிபெயர்ப்பு முயற்சியாகும். தத்தமங்கலம் க. கணேசன் என்ற பெயரில் அது வெளிவந்திருந்தது. அவர் மொழிபெயர்த்த முதல் நூல் முல்க்ராஜ் ஆனந்த் எழுதிய தீண்டத் தகாதவன் என்ற நாவலாகும். 1947 இல் இது மொழிபெயர்க்கப்பட்டது. பம்பாய்க்காரரான கே.ஏ. அப்பாசின் நண்பராகவிருந்த கே. கணேஷ் அவரது சில சிறுகதைகளையும் மொழிபெயர்த்துக் கல்கி வார இதழில் தொடர்ச்சியாக இடம்பெறச் செய்தார். ஓவியர் மணியனின் ஓவியங்களுடன் இக்கதைகள் வெளிவந்து கே. கணேஷின் மொழிபெயர்ப்புத் திறனைத் தமிழக வாசகர்களிடம் எடுத்துச் சொல்லின. இச்சிறுகதைகள் பின்னர் 1955இல் குங்குமப்பூ என்ற தலைப்பில் தமிழ கத்தில் இன்ப நிலைய வெளியீடாக வெளிவந்தன. கணேஷின் மொழிபெயர்ப்புப் பணி லூசுன், ஹோசி மின், அல்தாப் முகம்மதோவ, பாரபரா, குப்ரியா னோவ், பல்கேரியக் கவிஞர்கள் என்று பின்னாளில் உல களாவிப் பரந்து விரிந்துசென்றது. நாவல், குறுநாவல், சிறுகதைகள், கவிதைகள் என்று 22 நூல்கள் வரை கணேஷின் மொழிபெயர்ப்பில் இதுவரை உருவாகி யிருந்தன. கே. கணேஷ் சித்தார்த்தன், கலாநேசன், மலை மகன் போன்ற புனைபெயர்களிலும் எழுதியிருந்தார்.

கணேஷின் பணிகளை விதந்து பாராட்டி அரசும் தனியார் அமைப்புகளும் பல விருதுகளை வழங்கி யிருந்தன. இலங்கை அரசின் கலாபூஷண விருதினை இவர் 1995 இல் பெற்றிருந்தார். கனடாவின் தமிழ் இலக்கியத் தோட்டம் 2002இல் அவ்வாண்டுக்கான இயல் விருதினை இவருக்கு வழங்கிக் கௌரவித்திருந் தது. மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் ஏற்பாடு செய் திருந்த இயல்விருது வழங்கும் வைபவத்திற்குக் கனடா விலிருந்து பேராசிரியர் செல்வா கனகநாயகம் வருகை தந்து அவ்விருதினை கே. கணேஷுக்கு நேரடியாக வழங்கிக் கௌரவித்தார். கனடாவில் காலம் சஞ்சிகை தனது 17ஆவது இதழை சனவரி 2003 இல் கே. கணேஷ் சிறப்பிதழாக வெளியிட்டிருந்தது. கண்டியிலிருந்து தி. ஞானசேகரன் அவர்களின் ஞானம் சஞ்சிகையும் கணேஷ் அவர்களைக் கௌரவித்துச் சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட்டிருந்தது. டொமினிக் ஜீவாவின் மல்லிகை சஞ்சிகை ஏப்பிரல் 1971 இலும், அந்தனி ஜீவாவின் கொழுந்து சஞ்சிகை மே 1989 இலும் கே. கணேஷை அட்டைப்பட அதிதியாக்கி கௌரவித் திருந்தன.

2003 சனவரிக் காலம் சஞ்சிகையின், கே. கணேஷ் சிறப்பிதழில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குக் கணேஷின் பதில் இங்குப் பதிவாக்கப்பட வேண்டியதாகும். மலை யக எழுத்தாளராக இருந்தபோதிலும் அவர் மலையகத் தொழிலாளர்கள் பற்றி இலக்கியம் படைக்கவில்லை என்றவொரு குற்றச்சாட்டுக்கு அவரது பதில் பின்வரு மாறிருந்தது.

''நான் இருக்கும் இடம், சுற்றுச் சார்புகள் சிங்களக் கிராமமாக இருக்கிறது. இந்நிலையில் தேயிலைத் தோட்டம் தொலைநோக்கிச் செல்ல நேர்ந்ததால், தேயிலைச் செடிகள் கண்ட வாய்ப்பே எமக்கு அரிதாயிருந்தது. தவிர்த்து அங்கு வசித்த தொழிலாளிகளைப் பற்றியோ, தேயிலை பயிர்செய்கைச் சூழ்நிலைகள் குறித்தோ அறிய எனக்குப் பெரிதும் வாய்க்கவில்லை. இலங்கை, தமிழகத்துப் பள்ளிப் படிப்பை முடித்து நான் முப்பதை எட்டும் காலத்திலேயே மலைநாட்டுப் பகுதியில் நண்பர், உறவினர்களுடன் தங்கித் தேயிலைத் தோட்ட வாழ்க்கை முறைகளையும் சூழல்களையும் ஓரளவு அறிய வாய்த்தது. மற்றும் ஏடுகள், நூல்கள் வாயிலாகவே இதுபற்றி அறிய முடிந்தது. எனவே, நான் வாழ்ந்த கண்டியச் சூழ்நிலையில் மலையகத்து மக்களின் வாழ்வு குறித்து ஆக்கங்களைப் படைக்கத் தகுதியற்றவனாக இருந்த நிலையில் கற்பனையில் கதைகளோ கவிதைகளோ புனைய விரும்பவில்லை. ஒரு ஓட்டம் பார்த்து வந்து அவர்களது உள்ளார்த்மாவையே உணர்ந்து விட்டதாகப் பம்மாத்துப் புரிய மனம் வரவில்லை''.

பின்னாளில் தமது இறுதிக் காலத்தில் சுய வரலாற்றையும், சமகால மலையகத் தமிழ் மக்களின் வரலாற்றையும் எழுதிவந்த கே. கணேஷ் அதை நிறைவு செய்தாரா என்று தெரியவில்லை. பேராசிரியர் கா. சிவத்தம்பி இரங்கவுரையொன்றில் குறிப்பிடும்போது ''கணேஷ் ஒரு மலை விளக்கு. அதன் ஒளி பல இடங்களுக்கும் தெரியும். பல பாதைகளைச் சுட்டும். அவர் வாழ்ந்த இலக்கிய வாழ்க்கையை மேலும் ஆக்க பூர்வமானதாக்கும் வகையில் அவரது எல்லா ஆக்கங்களையும் தொகுத்து ஒரு முழு நூலாக வெளியிட வேண்டியது அவசியம்'' என்று தெரிவித்துள்ள கருத்து கே. கணேசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களின் கவனத்துக்குரியது.

கணேஷ் பற்றிய தனது தினகரன் கட்டுரையொன்றில் மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவா அவர்கள் ''கணேஷ் கட்டிக் காத்த பயனுள்ள பல ஆயிரம் நூல்களைக் கொண்ட அவரது நூலகத்தை அவர் விரும்பியதுபோலக் கண்டியில் ஒரு பொது நிறுவனம் முன்னின்று பாதுகாக்கவேண்டும். அதுவே கே. கணேஷ் கண்ட கனவாகும்'' என்று குறிப்பிட்டு உள்ளார். இதுவும் மலையக அறிவுஜீவிகளின் கவனத்துக்குரியது.

*(மலையக மக்களின் நல்வாழ்வுக்காக உழைத்துவந்த மலையக எழுத்தாளர்கள் அவர்களது அவல நிலைமைகளை, வாழ்க்கை நிலையை, தோட்டத் தொழிலாளர்களின் கலை கலாச்சார, கல்வி நிலை மற்றும் பிரச்சினைகளைக் காலத்திற்குக் காலம் மலையக எழுத்தாளர்கள் வெளிக் கொணர்ந்துள்ளனர். அவ்வாறு எழுத்து மூலம் பணியாற்றி வந்தவர்களின் வரலாறு பதியப்படவேண்டும் என்பதற்காக இலண்டன் சுடரொளி மூலம் இதுவரை 13 மலையக எழுத்தாளர்களின் வரலாற்றைப் பதிவு செய்துள்ளோம். இந்தப் பணியை நிறைவாக எமக்கு எழுதி உதவி வருபவர் நூலகவியலாளர் திரு. என். செல்வராஜா அவர்கள். சுடரொளியில் தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரைகள் ஒரு நூலாக வெளிவர வுள்ளது என்பதையும் நேயர்களுக்கு அறியத் தருகிறோம். - ஆசிரியர்).*

# 'சென்னை சங்கமம்' வெற்றி
# கனிமொழிக்குப் பாராட்டு விழா
## ராஜ்ய சபா எம்பியாக்க வலியுறுத்தல்



திரு. கிருஷ்ணகாந்த், சுதா ரகுநாதன், மணிமேகலை கண்ணன்

சென்னையில் பிரம்மகான சபா சார்பாகக் கவிஞர் கனிமொழிக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.

சென்னையில் நடைபெற்ற பாரம்பரிய நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகளான சென்னை சங்கமம் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்திய முதலமைச்சர் கருணாநிதியின் மகள் கவிஞர் கனிமொழிக்கு நல்லிகுப்புசாமி செட்டியைத் தலைவராகக் கொண்ட பிரம்ம கான சபா பாராட்டு விழா நடத்தியது. சுனில் கலைமன்றத்தின் கௌரவத் தலைவர் கிருஷ்ணகாந்த், பன்னாட்டுத் தமிழ் நடுவம் தலைவர் சுதா இரகுராமன், செயலாளர் மணிமேகலை கண்ணன் ஆகியோர் ஆளுயர மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

பாராட்டு விழாவுக்கு நல்லி குப்புசாமி செட்டி தலைமை வகித்தார். கவிஞர் வாலி, பிரபல கர்நாடக இசைப்பாடகி சுதா ரகுநாதன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் சென்னைத் தொலைக்காட்சி நிலைய முன்னாள் இயக்குனரும், பிரம்ம கான சபாவின் துணைத் தலைவருமான ஏ. நடராஜன் வரவேற்றுப் பேசினார்.

பல பெருமைகளையும், விருதுகளையும் பெற இருக்கிற கனிமொழியை ராஜ்ய சபா எம்.பி.யாக ஆக்க வேண்டும் என்ற தமது ஆசையை வெளிப்படுத்தினார்.

அவரைத் தொடர்ந்து பேசிய கவிஞர் வாலி, கனிமொழியின் தகுதிக்கும், திறமைக்கும் ராஜ்ய சபா எம்.பி. பதவி என்பது மிகச் சிறியது என்று கூறிய அவர், 'இன்று கனிமொழி கலைஞரின் புதல்வி, நாளை தமிழக முதல்வி' கூறினார்.

விழா இறுதியில் கவிஞர் கனிமொழி ஏற்புரை நிகழ்த்தினார். விழா நிகழ்ச்சியைச் சென்னைத் தொலைக்காட்சி நிலையச் செய்திப் பிரிவின் முன்னாள் இயக்குநர் எச். இராமகிருஷ்ணன் தொகுத்து வழங்கினார்.

# தமிழ் இசைச் சிறப்பு

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

இசை பலவகை, அதில் தமிழிசை ஒரு வகை. இரண்டெழுத்துள்ள இச்சொல் பொருள் அமைதி யுடையது. சுதி, பாட்டு, பண், தாளம், பக்கவியம், பாடுவோர் உள்ளம், கேட்போர் உள்ளம் ஆகிய அனைத்தும் இசைந்தால்தான் அதற்கு இசையென்று பெயர். இல்லாவிட்டால், அதன் பெயர், ''இரைச்சல்'' என்றாகிவிடும்.

இசைக்குப் 'புகழ்' என்றும் பெயர் உண்டு 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற சொற்றொடரும் இதனை மெய்ப்பிக்கும். 'இசையென்னும் எச்சம் பெறாவிடின் வசையென்ப வையத்தார்க் கெல்லாம்' என்பதும், 'வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா யாக்கை பொறுத்த நிலம்' என்பதும், 'வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய வாழ்வாரே வாழாதவர்' என்பதும் வள்ளுவர் வாக்கு. இதிலிருந்து வசைக்கு எதிர்மறை இசை என்பதை நன்கறியலாம். அக்காலத்து மன்னர்களைப் பாணரும் புலவரும் இசையின் மூலமே புகழ்ந்ததால், இப்பொருள் வந்தது போலும்!

இறைவனையே இசைமயமாகக் கண்டவர்கள் தமிழ் மக்கள். ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவனே இறைவன் எனக் குறிப்பிட்டனர். இறைவனை இசை கொண்டு பாடியே வணங்கினர். இம்முறையில் பண்ணோடு கூடிய பக்திப் பாடல்கள் பல தமிழ் மொழியில் உள்ளன. இவற்றுள் தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம், திருப்புகழ் முதலியவை குறிப்பிடத்தக்கன. இந்நூல்களில் உள்ள பக்திப் பாடல்கள் தமிழ்த் தேனோடு இசைத் தேனையும் கலந்து சுவை தருவனவாகும்.

தமிழிசை தோன்றிய காலம், தமிழ்மொழி தோன்றிய காலமே! தமிழ் மக்களின் எண்ணம், சொல், செயல், வாழ்வு அனைத்தும் இசை கலந்தவையாகவே காட்சியளிக்கின்றன. இவற்றுள் பிறந்த நாள் இசை, பாலூட்ட இசை, தாலாட்ட இசை, சோறூட்ட இசை, (திருப்பள்ளி இசை), படுக்க இசை, உறங்க இசை, பள்ளியில் வைக்க இசை, நாற்று நட, களை பிடுங்க, கதிரறுக்க, தாளடிக்க, போரடிக்க, வண்டியோட்ட, நெல்லுக்குத்த, சுண்ணம் இடிக்க, ஏற்றம் இறைக்க எல்லாவற்றிற்குமே இசை!

திருமணத்தில் நலங்கு இசை, வளைகாப்பில் இசை, வாழ்த்த இசை! எல்லாம் இசைமயமேயாம். சுருக்கமாகக் கூறவேண்டுமானால், தமிழகத்தில் கல்லும் இசைகேட்டு நகருகிறது (ஏலக்கத்தா); கப்பலும் இசை கேட்டு ஓடுகிறது. (ஐலசா); பாம்பும் இசை கேட்டு ஆடுகிறது. (மகுடி); பசுவும் இசை கேட்டுக் கறக்கிறது. (கறவைப் பாட்டு); தமிழகத்தில் செத்த பிணமுங்கூட ஒப்பாரி இசை கேட்டுதான் சுடுகாட்டுக்குப் போகிறது என்றும் கூறலாம்.

இசை என்பது வாயினால் பாடுவது மட்டுமல்ல; கருவியினால் இசைப்பதும் இசையேயாகும். அவை தோல் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி என மூவகைப்படும். இவற்றை விழா நாள்களில் மட்டுமல்ல, பிற நாள்களிலும் இசைத்து முழக்குவது உண்டு. மணப்பறை, பிணப்பறை, போர்ப்பறை, விழாப்பறை என்ற சொற்கள் இவற்றை மெய்ப்பிக்கின்றன.

தமிழ் இசை வேறு கருநாடக இசை வேறு எனச் சிலர் கருதுகின்றனர், அது தவறு. தமிழ் இசை என்பதுதான் கருநாடக இசை; கருநாடக இசை என்பதுதான் தமிழ் இசை. இரண்டும் வேறுபட்டவை அல்ல; ஒன்றே.

வடக்கில் உள்ள பல நாடுகளில் கடல் இல்லை. அதனால் கடற்கரையும் இல்லை. தமிழகமோ மூன்று பக்கங்களிலும் கடல்களையும் கடற்கரைகளையும் கொண்டது, சோழ மண்டலக் கடற்கரை, பாண்டி மண்டலக் கடற்கரை, சேர மண்டலக் கடற்கரை என்ற பெயர்கள் இன்றும்கூட மக்கள் துறையிலும் ஆட்சித் துறையிலும் காணப்படுவதே இதற்குப் போதிய சான்றாகும். இதனால் தமிழகத்தைக் 'கரை நாடு' என்றும், தமிழிசையைக் 'கரை நாட்டு இசை' என்றும் வடக்கேயுள்ளவர் குறிப்பிட்டனர். அதையே பலரும் கர்நாட்டிசையென்றனர். ஆங்கிலேயனும் அதை 'கர்நாட்டிக் இசை' என்றான். ஆகவே, கரை நாட்டு இசை என்பது தமிழ் இசையைக் குறிப்பதே.

காலப்போக்கில் வடமொழியின்மீது பற்றும், வடநாட்டின்மீது காதலும் கொண்ட சிலர், கரைநாட்டு இசையை வடநாட்டு இசை என்றும், தமிழ் இசை இதற்கு முற்றும் மாறானது என்றும் கூறத் தலைப்பட்டுவிட்டனர். தமிழில் உள்ள இசைக்கலை நூற்கள் அனைத்தையும் வடமொழியில் பெயர்த்து எழுதினர். இந்த அளவோடு அவர்கள் நின்றுவிடவில்லை. தமிழ் மொழியில் உள்ள பாடல்களை வெறுத்து ஒதுக்கவும் தொடங்கினர். உயர்ந்த பக்திப் பாடல்களை இசையரங்கில் பாடாது விட்டனர். உயர்ந்த கருத்துகள் அமைந்த சித்தர்களின் பாடல்களையும், நாட்டுப்பாடல்களையும் அவர்கள் நாடோடிப் பாடல்கள் என்று எழுதியும் பேசியும் வந்தனர். இது தமிழை வெறுப்பதும், தமிழ் அறிஞர்களை இழிவுபடுத்துவதுமாகுமெனவும், தமிழ் மக்களும் தமிழறிஞர்களும் நாடோடிகளல்லர் எனவும், அவர்கள் தமக்கென்று ஒரு நாடும் தமக்கென்று ஒரு

மொழியும் உள்ளவர் எனவும், தமக்கென ஒரு நாடும் மொழியும் இல்லாதவரே நாடோடிகள் எனவும் முழக்கிய பின்னரே, தமிழ்ப் பாடல்களை 'நாடோடிப் பாடல்கள்' எனக் கூறிய நாடோடிகள் திருந்தினர். அரசாங்கத் தமிழ் வளர்ச்சிக் கழகப் பதிவேட்டிலும் இந்த நாடோடிப் பாடல் என்ற சொல் அழிக்கப்பெற்று, 'நாட்டுப் பாடல்' என்று திருத்தப் பெற்றது. கலைக் களஞ்சியத்தில் உள்ள நாடோடிப் பாடல்கள், நாடோடி இலக்கியங்கள், நாடோடி ஓவியங்கள் என்பனவும், அதன் மறுபதிப்பில் திருத்தப் பெற வேண்டும்.

தமிழ் இசைக் கருவிகள் தமிழகத்தில் தமிழனால் கண்டுபிடிக்கப் பெற்றவை. அவை மூவகை என மேலே கண்டோம். அவற்றிற்குப் பெயரிட்ட தமிழ் மக்களும், தமிழுக்கே சிறப்பாக உள்ள 'ழ' என்ற எழுத்தை அச் சொல் ஒவ்வொன்றிலும் வைத்துத் தோல் கருவிக்கு 'முழவு' என்றும், துளைக் கருவிக்குக் 'குழல்' என்றும், நரம்புக் கருவிக்கு 'யாழ்' என்றும் பெயரிட்டிருக்கின்ற னர். இவை தமிழனின் சொந்தச் சொத்து. தமிழனால் கண்டுபிடிக்கப் பெற்றவை. தமிழ் எழுத்து உள்ளவை என அன்றே பதிவு செய்திருப்பது எண்ணி எண்ணி வியக்கக் கூடியதாகும்.

இக்கருத்தைப் பின்வரும் தமிழ்ப் பாடல் ஒன்று அரண் செய்கிறது. ''மக்கள் முதல்முதல் விலங்குகளை வேட்டையாடி, இறைச்சிகளை உண்டு, அதன் தோல் களை மரக்கிளைகளில் காய வைத்தனர். காய்ந்த தோலின் மீது உலர்ந்த குச்சிகள் உராய்வதைக் கொண்டு தமிழன் தோற்கருவியைக் கண்டுபிடித்தான். வேட்டையாடுகின்ற பொழுது, வில்லின் நாணினின்று வெளிவரும் ஒலியைக் கொண்டு, நரம்புக் கருவியைக் கண்டுபிடித்தான். ஆற்றின் இருகரைகளிலும் இருக்கின்ற நாணற்செடி களில் உள்ள தீஞ்சுவையை வண்டுகள் துளைத்து உண்டபிறகு, அதனுள்ளே தென்றல் காற்று புகுந்து ஓசை யிடுவதைக் கண்டு, தமிழன் துளைக் கருவியைக் கண்டுபிடித்தான்.''

'ஏழிசைமோகன்' என்பது ஒரு சோழ மன்னனது பெயர். இராவணன் தென்திசை மன்னன். அவனுக்குத் 'தென்னவன்' என்றும் பெயர். அவனது யாழிசையைக் கேட்டு, இறைவன் மகிழ்ந்து வரம் அளித்தான் என்பது இராமாயண வரலாறு. இதிலிருந்து தமிழிசையின் காலம் இராமாயண காலத்திற்கும் முற்பட்டது என்று தெரிகிறது. மொகஞ்சதரோவில் அகழ்ந்து எடுக்கப்பெற்ற இசைக் கருவிகள், 5000 ஆண்டுகளுக்கு முன்னைய தமிழிசைக் கருவிகள்.

தமிழிசையிலும் இசைக் கருவிகளிலும் யாழுக்கு முதன்மையுண்டு. யாழ் நான்கு வகைப்படும். அவை செங்கோட்டி யாழ், மகர யாழ், சகோட யாழ், பேரியாழ் எனப் பெயர் பெறும். ஒவ்வொன்றிற்கும் நரம்புகளின் எண்ணிக்கையும், நீளத்தின் அளவும் உண்டு. அந்நரம்பு களை மிழற்றுவதற்கும் இலக்கணம் உண்டு. இசையறி ஞர்கள் அவற்றைத் துருவி ஆராய்ந்து, மூவகைப்படுத்தி நல்ல தமிழாலே அவற்றிற்குப் பெயரும் கண்டிருக்கின்ற னர். அவை தெறித்தல், வருடுதல், உராய்தல் என்பன. யாழ் செய்யும் முறையையும், குழல் செய்யும் அளவை யும், முழவு செய்யும் வகையையும், இவற்றைப் பயன் படுத்தும் முறைகளையும், பண் முதலியவைகளுக்கு இலக்கணங்களையும் வகுத்துத் தமிழ் இசை அறிஞர்கள் பல்வேறு நூல்களை இயற்றி இருந்தனர். அவைகளிற் பல அழிந்தொழிந்து போயின.

அவற்றில் என்னென்ன செல்வங்கள் இருந்தனவோ? அதன் ஆசிரியர் எவரெவரோ? அவை தோன்றிய காலம் எதெதுவோ? அவை போன்ற நூல்கள் இன்னும் என்னென்னவோ? அவை அழிந்தது எப்படியோ? யார் காண்பது? எவரால் அறிய முடியும்? மேலே கண்ட நூல்கள் இருந்து அழிந்தன என்பதைச் சில நூல்களில் காணப்படும் உரைகளால், உரைகளில் காணப்படும் மேற்கோள்களால், அறிய முடிகிறது.

அழிந்தவை போக இருக்கின்ற நூல்களாலும், உரைகளாலும், பாரம்பரியமாகக் கையாளப்பெற்று வருகிற இசை மரபுகளாலும், தமிழிசையின் தொன்மையை, சிறப்பை, தகுதியை, முறையை, அளவை, உயர்வை, ஒருவாறு காணமுடிகிறது. அவற்றுள் அடியில் குறிப் பிடுவன சில. அவையும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

## இசைக்கலை மூவகை

அவை ஆடல், பாடல், கொட்டு எனப் பெறும்.

**1. ஆடல்** : இக்கூத்து 11 வகைப்படும். இவற்றுள் நின்றாடுதல் ஆறும், வீழ்ந்து ஆடுதல் ஐந்தும் ஆகும். இவற்றை (அ) ''அல்லியம், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல்லுடன் நின்றாடலாறு''; (ஆ) துடி, கடையம், பேடு, மரக்காலே, பாவை, வடிவுடன் வீழ்ந்தாட லைந்து'' என்ற நூற்பாக்களால் அறியலாம்.

**2. பாடல்** : பாட்டு என்பது அக நாடகங் களுக்கும் புற நாடகங்களுக்கும் உரிய உருவாகும். அக நாடகங்களுக்குரிய உரு 'கந்தம்' முதல் 'பிரபந்தம்' ஈறாக உள்ளவை 28. புறநாடகங்களுக்குரிய உரு, 'தேவ பாணி' முதலாக 'அரங்கொழிச் செய்யுள்' ஈறாகச் செந் துறை விகற்பங்கள் அனைத்துமாகும். (அ) 'கந்தம்' என்பது அடிவரையறையுள்ளது; ஒரு தாளத்தாற் புணர்ப் பது, (ஆ) 'பிரபந்தம்' என்பது அடிவரையறை இல்லாதது; பல தாளத்தாற் புணர்ப்பது.

**3. கொட்டு** : கொட்டு என்பது கொட்டப் படுகின்ற இசைக் கருவிகள்; இவை பாட்டுக்குரியன; நாட்டியத்திற்குரியன; இவ்விரண்டிற்கும் உரியன என மூவகைப்படும். (அ) பாட்டிற்குரியன 'கீதாங்கம்' எனப் படும். பாடல் என்பது இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம் உச்சம் ஆக எண்வகைப் பயனுடையதாகும். (ஆ) நாட்டியத்திற்குரியவை, 'நிருத் தாங்கம்' எனப்படும். இது அகக்கூத்து, புறக்கூத்து இரண்டிற்கும் உரியது. கீற்று, கடிசரி முதலிய தேசிக்

குரிய கால்கள் 14. சுற்றுதல், எறிதல் முதலாகிய வடுகுக் குரிய கால்கள் 14. உடல் தூக்கு முதலாகிய உடல் வர்த் தனை 19 - ஆக 47ம் இதற்குரியனை. (இ) இரண்டிற்கும் உரியது. ஆடலுக்கும், பாடலுக்கும் உரிய இது 'தாளம்' ஆகும். கொட்டு, அசை, தூக்கு, அளவு என இது நான்கு நிலைகளையுடையது, 'கொட்டு' ஆவது அமுக்குதல், 'அசை' ஆவது தாக்குதல். 'தூக்கு' ஆவது தூக்கித் தாக்கு தல். 'அளவு' ஆவது, ஓசையின் எல்லை.

**4. ஓசையின் அளவு :** கொட்டு அரை மாத்திரை, அசை ஒரு மாத்திரை, தூக்கு இரண்டு மாத்திரை, அளவு மூன்று மாத்திரை. கொட்டுக்கு வடிவு க. அசைக்கு வடிவு எ. தூக்குக்கு வடிவு உ. அளவுக்கு வடிவு ஃ.

**5. தாள வகை :** அரை மாத்திரையுடைய ஏக தாளம் முதல் 16 மாத்திரையையுடைய உலோசனம் வரையுள்ள 14 தாளங்களும் புறக்கூத்துக்கு உரியன. ஆறன் மட்டம், எட்டன் மட்டம், தாள வொரியல், தனி நிலை வொரியல் என்பனவும், ஒன்றன்பாணி முதல் எண்கூத்துப் பாணி வரையுள்ள பதினொரு தாள விகற்பங்களும், முதல் நடை வாரம் முதலியனவும் அகக்கூத்துக்கு உரியன.

**6. தூக்கு :** இத் தாளங்களின் வழி வரும் தூக்குகள், அவை செந்தூக்கு, மதலைத் தூக்கு, துணிபுத் தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத் தூக்கு, கழாத் தூக்கு, நெடுந் தூக்கு என எழுவகைப்படும்.

**7. பிண்டி, பிணையல் :** பிண்டி என்பது எழிற்கை. பிணையல் என்பது தொழிற்கையாகும். பிண்டி, ஒரு கையால் காட்டும் அவிநயங்கள்; பிணையல் இரு கைகளால் காட்டும் அவிநயங்கள் என்றாகும். இவற்றுள் ஒற்றைக் கை அவிநயம் 33 வகை: அவை 1. பதாகை, 2. திரிபதாகை, 3. கத்திரிகை, 4. தூபம், 5. அராளம், 6. இளம்பிறை, 7. சுகதுண்டம், 8. முட்டி, 9. கடகம், 10. சூசி, 11. கமல கோசிகம், 12. காங்கூலம், 13. கபித்தம் 14. விற்பிடி, 15. குடந்தை, 16. அலாபத்திரம், 17. பிரமரம், 18. தாம்பிரசூடம், 19. பசாசம், 20. முகுளம், 21. பிண்டி, 22. தெரிநிலை, 23. மெய் நிலை, 24. உன்னம், 25. மண்டலம், 26. சதுரம், 27. மான்தலை, 28. சங்கு, 29. வண்டு, 30. இலதை, 31. கபோதம், 32. மகரமுகம், 33. வலம்புரி என்பவை. இரட்டைக் கை அவிநயம் 15 வகைகளாகும். அவை : 1. அஞ்சலி, 2. புட்பாஞ்சலி, 3. பதுமாஞ்சலி, 4. கபோதம், 5. கற்கடம், 6. சுபத்திகம், 7. கடகாவருத்தம், 8. நிடதம், 9. தோரம், 10. உற்சாவிகம், 11. புட்பபுடம், 12. மகரம், 13. சயந்தம், 14. அபயவத்தம், 15. வருத்தமானம் என்பவை. இவை 48ம் எவ்விதம் கை விரல்களால் காட்டுவது என்பதற்கு நூற்பாக்கள் இன்னும் இருக்கின்றன.

**8. குரவை, வரிக்கூத்து :** குரவைக் கூத்து வரி கூத்து என்பன அவரவர் பிறந்த நிலத்துத் தன்மையும், தொழில் தன்மையும் தோன்ற நடித்தல். வரி என்பது பெரும்பாலும் வேற்றுருத் தாங்கி நடிப்பது. முல்லை நிலத்தில் ஆய்ச்சியர் குரவையும், குறிஞ்சி நிலத்தில் குன்றக் குரவையும் நெய்தல் நிலத்தில் கானல் வரியும், பாலை நிலத்தில் வேட்டுவ வரியும், மருத நிலத்தில் ஊர்சூழ் வரியும் நிகழ்ந்தனவாகச் சிலப்பதிகாரத்தில் அமைத்திருப்பதை அறிந்து மகிழுங்கள்.

**9. யாழ் :** பேரியாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் என யாழ் நால்வகைப்படும். பேரி யாழுக்கு நரம்பு 21, மகர யாழுக்கு நரம்பு 17, சகோட யாழுக்கு நரம்பு 16, செங்கோட்டி யாழுக்கு நரம்பு 7 ஆகும்.

**10. குழல் :** இது புல்லாங்குழல், வேய்ங்குழல், வங்கியம், வேணு எனப் பெயர் பெறும். அது மூங்கி லாலும், வெண்கலத்தாலும், சந்தன மரம், செங்காலி மரம், கருங்காலி மரம், ஆகிய மரங்களாலும் செய்யப் பெறும். இவற்றுள் மூங்கில் உயர் தரம்; வெண்கலம் நடுத்தரம்; மற்றவை கீழ்த்தரம் ஆகும்.

**11. முழவு :** முழவு என்பது தோல் கருவிகளா கும். இவை அகமுழவு, அகப்புற முழவு, புறமுழவு, புறப்புற முழவு, பண்ணமை முழவு, நாண் முழவு, காலை முழவு என ஏழு வகைப்படும். (அ) 'அகமுழவு, மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படாகம், குடமுழா என்பன (ஆ) 'அகப்புறமுழவு' தண்ணுமை, தக்கை, தகுணிச்சம் என்பன. (இ) 'புறமுழவு' கணப்பறை முதலியன. (இ) 'புறப்புறமுழவு' நெய்தற்பறை முதலியன (உ) 'பண்ணமை முழவு' நிசாளம், துடுமை முரசு திமிலை என நான்கு (ஊ) 'நாண்முழவு' நாழிகைப்பறை (எ) 'காலை முழவு' துடி என்பதாகும். இவற்றுள் (அ) உயர்தரம், (ஆ) நடுத்தரம், (இ) கடைத்தரம் உண்டு.

**12. ஏழிசை :** ஏழிசைகளும் தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனக் குறிப்பிடப்பெறும். இதனை, வடநூலார் சட்சம், ரிடபம், மத்திமம், காந்தாரம், பஞ்சமம், தைவதம், நிடாதம் எனப் பெயரிட்டு, இச்சொற்களின் ஏழு முதல் எழுத்துக் களைக் கொண்டு ச, ரி, க, ம, ப, த, நி எனச் சுர வரிசை யிட்டனர். இது தமிழிசையாய ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழிசையாகும். இதனை 'ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ வெனும் இவ்வேழெழுத்தும் ஏழிசைக் குரிய'' என்ற திவாகரச் சூத்திரம் மெய்ப்பிக்கும்.

**13. பெயர் :** தமிழில் இசை, பண் என்பவை களை வடமொழியாளர் சுரம், இராகம் எனக் கூறுவர். தமிழில் அலகு என்று சொல்லப்படுவதே வடமொழி யில் சுருதி என்றாகும். தமிழில் ஆளத்தி என்று கூறு வதையே வடமொழியினர் ஆலாபனம் எனக் கூறுவர்.

**14. அலகுகள் :** ஏழிசைகளாகிய குரல், துத்தம் முதலியவைகளுக்குத் தமிழில் 22 அலகுகள் கூறப் பட்டுள்ளன. வடமொழியிலும் இவ்வாறே 22 சுருதிகள் கூறப்பட்டுள்ளன என்றாலும், தமிழ் அலகுள் 4 4, 3, 2, 4, 3, 2; வடமொழி அலகுகள் 4, 3, 2, 4, 4, 3, 2 என

ஆகும். இந்த இசை வரிசையைத் தமிழில் கோவை யெனவும் கூறுவதுண்டு. இவ்வரிசை அமைப்புகள் ஆயப்பாலை, சதுரப்பாலை, வட்டப்பாலை, திருக்கோணப் பாலை என நால்வகைப்படும். இவற்றினின்றும் தோன்றுவதே இசையாகும்.

15. இசையின் எண் : இவ்வாறு பிறக்கும் இசையின் எண்ணிக்கை 11991 ஆகும். இதற்கு எடுத்துக்காட்டாக உள்ள நூற்பா அடியிற் கண்டவாறு சிதைந்து காணப்படுகிறது.

உயிர் மெய் அளவு உரைத்த ஐம்பாரிலும்
உடல் தமிழ் இயல் இசை எழுடன் பகுத்து
மூவேழ் பெய்த............
தொண்டு மீண்ட பன்னீராயிரம்
கொண்டனர் இயற்றல் சொல வல்லோர் கடனே!

இதில் தொண்டு மீண்ட என்பது 'ஒன்பது குறைந்த' என்றாகும். உயிர் மெய் அளவு ஆவது அவரவர் விரற்கிடையில் 96 விரற்கிடையாம், மேலே 47½ யும் கீழே 47½ யுமாக விரற்கிடை அளவுகளைக் கழித்தால், இடையில் இருக்கிற ஒரு விரற்கிடை அளவே மீதியாகும். இந்த விடத்தில்தான் மூலாதாரம் இருக்கிறது. இந்த மூலாதாரத்திலிருந்துதான் ஒலி கிளம்புகிறது.

இம்மேற்கோளாக வந்த நூற்பாவும், சுவை 9-க்கும் நடிப்பு 24-க்கும் மேற்கோளாக வந்த நூற் பாக்களும் எவர் பாடியதோ? நூல் எதுவோ? எக்காலத் ததோ? எப்பொழுது, எவ்வாறு அழிந்ததோ? அறிய முடியவில்லை.

இன்னும், இசை இலக்கணத்தில் கவிஞன் அமைதியும், ஆடலாசிரியன் அமைதியும், பாடலாசிரி யன் அமைதியும், யாழ் ஆசிரியன் அமைதியும், குழல் ஆசிரியன் அமைதியும், முழவு ஆசிரியன் அமைதியும், ஆடு மகளிர் அமைதியும், பாடு மகளிர் அமைதியும், அரங்கின் அமைதியும், குழல் செய்யும் முறையும் கூறப் பெற்றுள்ளன. இவை அனைத்தும் விரிக்கிற் பெருகும்; நினைக்கில் நெஞ்சு இளகும்.

16. அழிந்துபோன இசை நூல்கள் : சிற்றிசை, பேரிசை, இசை நூல், இசை நுணுக்கம், இசை விளக்கம், பஞ்ச மரபு, பஞ்சமா பாரதீயம், பண் அமைதி, பண்வரி விளக்கம், பாட்டும் பண்ணும், இசைக் கூறு, பாடற் பண்டு, தாளவகையோத்து, தாளசமுத்திரம், கருவி இலக்கணம், ஆளத்தி அமைப்பு முதலியன. அவையும் இன்று இருந்தால்...?

இதைப் படிக்கும் தமிழ் மக்கள், தமது முன் னோர்கள் துருவி ஆராய்ந்து கண்டுபிடித்து எடுத்து வகைப்படுத்தி, தொகைப்படுத்தி, முறைப்படுத்தி, பெயர் படுத்தித் தந்துள்ள தமிழிசைச் செல்வத்தைக் கண்டு மகிழ்ந்து, அவர்கட்குக் கலை வணக்கமும், தலை வணக்கமும் செய்தாக வேண்டும்.

இதுகாறுங் கூறியவற்றால் தமிழிசையின் பெருமையை ஒருவாறு அறியலாம். *

# உலக முதலிசை

புலவர் வெற்றியழகன்

*எடுப்பு*

இசையே தமிழிசைதான்
என்று பாடு - உலகில்
இருக்கின்ற இசையெலாம்
இதற்காமோ ஈடு? - இசையே

*உடனெடுப்பு*

இசையார் அனைவரும்
இசைந்திடக் கூறு - தமிழ்
இசையேமுதல் இசையெனில்
மறுப்பவர் யாரு? - இசையே

*முடிப்புகள்*

வித்தாய் விழுந்தது விழுதாய் வளர்ந்தது
முத்தாய்க் கிடைத்தது முழுதும் நிறைந்தது
எத்தர் மறைத்தது ஏட்டில் பதிந்தது
சொத்தாய் இருந்தது சொந்தம் உடையது!
-இசையே

உலக முதல் மாந்தன் உயர்தமிழ் மாந்தனே
உலக முதல்மொழி உயிர்த்தமிழ் மொழியே
உலக முதலிசை உயர்தமிழ் இசையே
உலகெலாம் நிறைந்தது உயர்தமிழ்ப் பண்பே!
- இசையே

# வெண்பனிப் பூக்களே!

திருமதி. புவனேஸ்வரி சபாரட்னம், இலண்டன்

வானத்து மல்லிகைத் தோட்டத்தை
உலுப்பி விட்டது யாரோ!
வானத்துத் தேவதை வாய்திறந்து
சிரிப்புதிர்க்க,
மோனத்தில் மிதந்துவரும்
வெண்பனித் துகள்களே! - நீங்கள்
ஆனந்தமாக அன்னை பூமியின் மடியில்
உறைந்து கிடக்கும் அழகுதான் எத்தனை!
இருள் சூழ்ந்த என்நேரத்து வானில்
அக்கினிப் பூக்களாய்த்
தினம் தினம் உதிரும் துப்பாக்கிச் சன்னத்தால்
உறைந்து கிடக்கும் உயிர்கள் தாம் எத்தனை!
வெண் பனிப்பூக்களே! களங்கமற்ற அன்னைப்
பூமியின் அங்கங்களை அங்கங்கே
இரத்தக்கறை கொண்டு செந்நிறமாக்கும்
அரக்கர்களைக் கண்டு நீயும் உறைந்து விட்டாயா?

# நோய்களை மட்டுப்படுத்தும் இராகங்கள்

**வைத்திய கலாநிதி சி. ஞானச்செல்வன்**

இசை ஒழுங்குபடுத்தப்பட்ட ஓசை. ஆத்மாவோடு பேசுகிற பாஷை.

இசை என்பது எமது வாழ்வில் பின்னிப் பிணைந்தது. இசையிலுள்ள ஸ்வரங்களை முதல் முதலில் விநாயகனை அறிமுகப்படுத்தியவர் புரந்தர தாசர் ஆவார். முதல் நாலு ஸ்வரங்கள் உண்டாகின.

ச சர்ப்பம்
ரி ருத்ராவும்
க கங்கை
ம மகேசீரஸ் முக்கன்

இத்துடன் ப-புஸ்பம், த-தமருகம், நி-நிசாகர (சந்திரன்) என்று மூன்றும் சேர்ந்து ஏழு ஸ்வரங்கள் ஆகின. இவற்றில் இருந்து உருவானதுதான் நாம் கேட்டு இரசிக்கும் இசை. இசையை வளர்ப்பதற்குப் புரந்தரதாசரும் சேஸாத்திரிகளும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தனர்.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ். இசையும் ஒரு ஒப்பற்ற கலையாக வளர்ந்து வந்ததாக நாம் புராண இதிகாசங்கள் மூலம் அறிய முடிகின்றது. இசை என்பது ஆன்மாவின் ராகம். தமிழ் இசையைப் பன்னெடுங்காலத்திலிருந்த புலவர்கள் எமக்குத் தந்திருக்கிறார்கள். சங்ககாலத் திற்குப் பிற்பட்ட பல்வேறு காலங்களில் பிற்காலத்தில் வந்த நாயன்மார்களுடைய தேவாரப் பாடலானாலும் இராமலிங்க அடிகளாருடைய பாடலானாலும், திருப்புகழ் ஆனாலும், இவையெல்லாம் அருமைத் தமிழ்க் கருவூலங்களாகத் தமிழ்ச் சோலைகளாகத் தமிழ் இலக்கியப் பெட்டகங்களாக அந்நேரத்தில் இசையோடு கலந்த அமுதங்களாக எமக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழிசையால் இறைவனைப் பாடி, இசையைத் தமிழ் நாட்டில் நிலை நிறுத்திய பெருமையும், தமிழி சையைக் காப்பாற்றிய பெருமையும் திருஞான சம்பந்த ரையே சாரும். அவருடைய 4147 திருப்பாடல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இறையருள் மிகு தேவாரப் பாடல்களின் வலிமையால் நற்றமிழிசையின் வலிமையால், நாட்டு மக்களின் துன்பத்தையும் துயரத்தையும் துடைத்திருப்பதைக் காணலாம்.

திருநாவுக்கரசு நாயனார் அருளிய, தண்டமிழிசைப் பாடல்கள் 3066 ஆகும். அதிலொன்று ''சலம் பூவோடு தூபம் மறந்தறியேன்; தமிழோடிசைப் பாடல் மறந்தறியேன்'' என்பது. இப்பாலைத் திருச்செவி மடுத்த சிவபெருமான், திருநாவுக்கரசருக்கு இருந்த சூலை நோய் போக்குவதற்குச் செய்த அற்புதச்செயலையும் நாம் அறிந்திருக்கின்றோம். சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய 1026 திருமுறைப் பாடல்களும் தமிழிசைப் பாடல்களாகும். அவரைச் சிவபெருமான் ''நீ தமிழிசையால் நம்மைப் பாடுவாயாக!'' என்று கூறியது தமிழிசைக்குக் கிடைத்த பெருமையாகும்.

மணிவாசகர் அருளிய 656 திருவாசகம் அனைத்தும் தேனென இனிக்கும் இசைப் பாடல்கள். இத்தமிழிசைப் பாடல்களைத் தில்லைக் கூத்தன் தன் திருக்கரத்தி னாலே ஏட்டில் எழுதிக்கொண்டான் என்பது வரலாறு. திருவாசகமாம் தமிழிசைப் பாடலன்றோ ஊமைப் பெண்ணைப் பேசவைத்தது.

மேலும் இசை வளர்ச்சிக்குக் காலத்தால் முத்தவர்களான முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக் கவிராயர் ஆகியோர் ஊன்றுகோலாக இருந்தனர். இவர்கள் ஆதி மும்மூர்த்திகள் என மக்களால் அழைக்கப் பட்டனர். இவர்களின் பின்னர் மும்மூர்த்திகளான தியாக ராஜ சுவாமிகள், சியாமாசாஸ்திரியார், முத்துசாமி தீட்சிதர் பல்லாயிரம் பாடல்களை இயற்றி இசையை வளர்த்து வந்தனர். இவர்கள் பேணித் தந்த இசையைப் பல இசைக்கலைஞர்கள் தமது இனிய குரலால் பாடி எமக்கு மனமகிழ்ச்சியையும், ஆன்ம திருப்தியையும் தந்துள்ளார்கள். இவர்கள் ஆண்டுதோறும் நடாத்தும் விழா இசைவிழா என்ற பெயரில் நடைபெற்று வருகின்றது. இதில் ஒரு அம்சம் தான் இலண்டன் வாழ் தமிழர்களின் மத்தியில் இரண்டாவது தடவையாக நடைபெற வுள்ள இசைவிழா.

இவ்விசை விழா இலண்டன் கர்னாடக இசைக் கல்லூரியின் சார்பில் இதனை வைத்திய கலாநிதி சி. நவரத்தினம் அவர்களின் பெரும் முயற்சியினால் வருகின்ற எப்பிரல் 27, 28, 29 ஆகிய தினங்களில் மூன்று இடங்களில் நடைபெற ஒழுங்கு செய்துள்ளார்கள். இந்த மகத்தான இசை விழா மிகச் சிறப்புடன் நடைபெற இலண்டன் வாழ் தமிழ் மக்கள் தங்கள் ஆதரவை நல்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்விசை விழா சிறப்புடன் நடைபெற சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவ ரீதியாக, பலவித நோய்களுக்குக் குறிப்பிட்ட சில இராகங்கள் நிவாரணமளிப்பதாக ஆராய்ச்சியின் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, இரத்த அழுத்தத்திற்கு ஆனந்த பைரவி என்ற இராகம் நிவாரணமளிக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் சிறு வயதிலிருந்து நான் கேட்டு இரசித்த சில இராகங்களையும், பாடல்களையும் கூற விரும்புகின்றேன்.

ஆகபோதி இராகம் - சேவிக்க வேண்டுமையா -

காபி இராகம் - என்ன தவம் செய்தேன், யசோதா......

தேஸ் இராகம் துன்பம் நேர்கையில் யாழெடுத்து...

பக்தமீரா - காற்றினிலே வரும் கீதம்...

இந்த இசைவிழா இலண்டன் வாழ் தமிழர்களுக்கு, எம் கலைஞர்களையும் இந்தியாவிலிருந்து வரும் கலைஞர்களையும் நேரடியாகப் பார்த்து, கேட்டு, இரசிக்க ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ✱

# பஞ்சமரபில் ஆளத்தி பற்றிய குறிப்புகள்

முனைவர் திருமதி. பிரமிளா குருமூர்த்தி, தலைவர், இந்திய இசைத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

சங்க கால இலக்கண நூல்களாக உரையாசிரியர்கள் காட்டும் மேற்கோள்களினாலும், அவர்கள் தரும் குறிப்புகளினாலும் அறியப்படும் நூல்களுள் பஞ்சமரபு ஒன்று. இந்நூலையும், இந்நூலின் ஆசிரியரையும் நமக்கு அறிமுகம் செய்து வைத்தவர் அடியார்க்கு நல்லார் ஆவார். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுத உதவியாகக் கிடைத்த இசை நாடக இலக்கணங்களைக் கூறுமிடத்து அறிவனார் செய்த பஞ்சமரபைக் குறிப்பிடுகிறார். அவரே சிலப்பதிகாரம் கடலாடு காதை உரையில் பஞ்ச மரபின் வகையொழிபு மரபு கூறும் பகுதியில் உள்ள "செப்பரிய சிந்து என்னும் வெண்பாவை எடுத்துக்காட்டி பஞ்சமரபுடைய அறிவனார் என்னும் ஆசிரியர் என்க", எனக் கூறினார்.

இந்நூலிற்கு பஞ்சமரபு என்னும் பெயர் அமைந்த காரணம். இது இசை, முழவு, தாளம், கூத்து, அவிநயம் ஆகிய ஐந்து மரபுகளை உள்ளடக்கியதால் ஆகும்.

இந்நூலில் அரிய பல செய்திகள் காணக்கிடக்கின்றன. இன்று ஆலாபனை என்று நாம் கடைப்பிடிக்கும் மரபினை, பஞ்சமரபு ஆளத்தி என்ற பெயரால் விளக்குகின்றது.

பண்களைக் கொண்டு ஆலாபனை செய்வது பற்றிக் கண்ட மரபில் காணலாம். 43-ஆவது பாடலில்

மகரத்தி னொற்றாற் சுருதி விரவும்
பகரிற் குறினெடிலாற் பார்த்து - நிகரில்லாத்
தென்னா தெனாவென்று பாடுவரே லாளத்தி
மன்னாவிச் சொல்லின் வகை. *(பஞ்சமரபு ; 43)*

மகரத்தின் ஒற்றால் சுருதி விரவும் என்பது மகரத்தின் ஒற்றினாலே நாதத்தை உச்சரித்துக் கொள்க என்றவாறு, பகரிற் குறில் நெடிலால் பார்த்து என்பது முன் சொன்ன தொழில் செய்யும் இடத்துக் குற்றெழுத்தாலும், நெட்டெழுத்தாலும் செய்யப்படும். அவை அச்சு, பாரணை என்று அழைக்கப்படும். அச்சுக் கெழுவாய் குற்றெழுத்து, பாரணைக் கெழுவாய் நெட்டெழுத்து. அச்சு தாளத்துடன் நிகழும். பாரணை கூத்துடன் நிகழும்.

ஆளத்தி செய்யுமிடத்து தென்னா, தெனா என்று பாடப்படும். ஆளத்தி, காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணாளத்தி என்று மூன்று வகைப்படும். அவற்றுள் காட்டாளத்தி ஆவது அச்சுடன் நிகழும், நிறவாளத்தி நிறம் குலையாமல் பாரணையுடன் நிகழும், பண்ணாளத்தி என்பது பண்ணையே கருதி வைக்கப்படும்.

குன்றாக் குறிலைந்தும் கோடா நெடிலைந்தும்
நின்றார்ந்த மந்நகரந் தவ்வோடு - நன்றாக
நீளத்தா லெட்டு நிதானத்தா னின்றியங்க
வாளத்தி யாமென் றறி. *(பஞ்ச மரபு : 44)*

குன்றாக் குறிலைந்தும் கோடா நெடிலைந்தும் என்பது குற்றெழுத்தைந்தினாலும், நெட்டெழுத்தைந்தினாலும் ஆளத்தி செய்யப்படும்.

நின்றார்ந்த மந்நகரத் தவ்வோடு என்பது மெய்யெழுத்து பதினெட்டனுள் மவ்வினமும், நவ்வினமும், தவ்வினமுமாக இம்மூன்றெழுத்தினமுமாம், அல்லன மற்ற எழுத்துகள் ஆளத்திக்கு வரப்பெறா என்றவாறு.

இன்றும் ஆலாபனை செய்யும்போது த, ந ஆகிய எழுத்துகள் பயன்படுகின்றன என்பதை நினைவிற்கொள்ளலாம்.

காட்டாளத்தி தாளத்துடன் நிகழும் என்று கருதப் பெறுகிறது. இது இன்றைய தானம் பாடுவதற்கு ஒப்பாகக் கொள்ளலாம். இராக ஆலாபனையைவிடத் தானம் பாடும் பொழுது தாளத்தின் பங்கு கூடுதலாக உள்ளதை உணரலாம்.

நிறவாளத்தி கூத்துடன் நிகழும் என்று எண்ணும் போது நிறம் என்பது உணர்வுகளுக்கேற்பப் பாடப்படுவதைக் குறிக்கும் எனலாம். நாட்டிய நாடகங்களில் சுவைகளுக்கேற்பப் பாடல்களுக்கு முன்பாக ஆலாபனை நிகழ்த்தப் பெறும். பண்ணாளத்தி என்று சொல்லும்போது பண்களில் பல்வேறு நிலைகளை அறிந்து அவற்றின் அழகுகளை உணர்ந்து விரிவாக நிகழ்த்துவதாகும்.

ஆளத்தி செய்வதற்கு அவசியமாக உள்ள பண்ணின் பெயர்க் காரணத்தைப் பஞ்சமரபின் 50- ஆவது பாடல் விளக்குகின்றது.

பாவோ டிணைதல் இசைஎன்றார் பண்என்றார்
தோவாப் பெருந்தானம் எட்டானும்
பாவா எடுத்தல் முதலாய் இருநான்கும் பண்ணில்
படுத்தமையால் பண்என்று பார். *(பஞ்சமரபு : 50)*

பாவோடு இணைந்து பெருந்தானம் எட்டு என்ற தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நாக்கு, அண்ணம் ஆகிய உடல் உறுப்புகளால் ஒலி உண்டாகி எட்டுக் கிறியைகளான எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு முதலியவற்றால் பண்ணப்படுவது பண் என்பதாகும்.

இவ்வகைப் பண்கள் 103 என்பதனையும் 22-ஆவது செய்யுள் கூறும்.

பண்ஓர் பதினேழாம் பண்ணியல்
பத்தேழாம் என்னும் திறம் இரண்டும் பத்தென்ப
நண்ணிய நாலாம் திறத்திறம் ஓர் நான்கும் உளபடவே
பாலாய பண்நூற்றி மூன்று. *(பஞ்சமரபு : 22)*

பண் - 17, பண்ணியற்றிறம் - 70, திறம் - 12, திறத்திறம் 4, ஆக மொத்தம் - 103.

பண் ஏழு நரம்புகள் கொண்டது. பண்ணியற்றிறம் ஆறு நரம்புகள் மற்றும் திறம் பன்னிரண்டு நரம்புகளும், திறத்திறம் நான்கு நரம்புகள் கொண்டதும் ஆகும். பஞ்சமரபில் காணப்பெறும் முக்கிய குறிப்பு சரிகமபதநி என்ற ஏழு எழுத்துகள் பற்றியதானது.

சரிகமபதநி என்னும் சுத்த எழுத்தால்
வரி பரந்த கண் மடவாய் வைக்கத் தெரிவரிய
ஏழிசையும் தோன்றும் இதனுள்ளே பண் பிறக்கும்
சூழ் முதலாய் சுத்தத் துளை. *(பஞ்சமரபு : 28)*

இவ்வாறாக இசைபற்றிய பல்வேறு அரிய செய்திகளைக் கொண்ட நிகரற்ற ஒரு நூலாகப் பஞ்ச மரபு திகழ்கின்றது. இன்று சிறப்பாக இசை நிகழ்வுகளில் இடம் பெறும் இராக ஆலாபன்னையானது பண்டைய தமிழரால் பன்னெடுங் காலத்திற்கு முன்பே வரையறை செய்யப்பட்டு வந்துள்ள மரபினைப் பஞ்சமரபில் காணமுடிகின்றது. ✱

# மனநல வளர்ச்சியில் இசையின் பங்கு

பேராசிரியர் எஸ்.கே. சிவபாலன், அண்ணாமலை பல்கலைக் கழகம்

நுண் கலைகளுள் (Fine Arts) முதன்மையாக விளங்குவது இசைக் கலையாகும். இக்கலை இன்னொலியுடன் தொடர்புடையது. இவ் இன்னொலி மொழியோடு இணையும்போது, செவிக்கு இன்பத்தையும், மனத்திற்கு அமைதியையும் தருவதோடல்லாமல், உடலிற்கு வலுவையும் உரத்தையும் தந்து, நிறைவாக மனிதனை ஆன்ம ஈடேற்றத்திற்கும் இட்டுச் செல்கின்றது எனலாம். இக்கலை எல்லா நாட்டு மக்களும் எக்காலத்திலும் ஒப்புக் கொள்ளும்படியான நியதிகளைக் கொண்டு வளர்ந்த கலையாகும். பொதுவாக இசையில் காணப்படும் ஏழிசை அமைப்புமுறை, எல்லா இசை வகைகளுக்கும் பொதுவானவையாகும். உலகம் ஓர் ஒழுங்கு அமைப்பிற்கு உட்பட்டே இயங்கி வருவது கண்கூடு. இவ்வாறே இசையும் ஓர் ஒழுங்கு முறையில் அமைக்கப்பட்டு விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில் இசைக்கலையோடு தொடர்புடைய மனிதனும், ஓர் ஒழுங்கு நியதியில் கட்டுப்பட்டு வாழும்போதுதான், அவனது வாழ்வும் உயருவதோடு, சிறப்பும் அடைகிறது. மேலும் படித்தவரும் பாமரரும் ஒரு சேர இரசித்து மகிழும் தன்மையில் இசைக்கலை அமைந்து விளங்குவதும், இதன் மற்றோர் சிறப்பாகும்.

எமது நாட்டு இசை மரபானது மனிதனது தொடக்க வளர்ச்சியுடன் தொடங்கி, அவனது இறுதி நிலையுடன் இரண்டறக் கலந்து விளங்குகின்றது. அதாவது குழந்தையின் தாலாட்டாகத் தொடங்கி நிறைவில் ஒப்பாரியாக நிறைவடைகின்றது. இதற்கிடையே அவனது ஒவ்வொரு நிகழ்வுகளிலும் இசை ஒன்றி இருப்பதும், நம் இசையின் தனிச்சிறப்பாகும். பொதுவாகவே இசை என்பது மனித மனநலத்தை மேம்படுத்தும் ஒரு கருவி என்றே கூறலாம். இராவணன் இசை மீட்டி இறைவனைக் கவர்ந்ததும், அடியார்கள் இசைபாடி நோய் தீர்த்ததும் ஐந்தறிவுக்குக் குறைந்த விலங்குகளும் இசைக்கு மயங்குகின்றது என்பதைச் சங்க இலக்கியங்களிலிருந்து கிடைக்கப்பெறும் சான்றுகளும், இசையின் மேன்மைக்குக் கிடைக்கப் பெறும் அகப்புறச் சான்றுகளாகும். எனவே, மனத்திற்கும், உடலிற்கும் ஒருசேர நன்மை பயக்கும் கலை நம் இசைக்கலை என்று கூறுவோமெனில் அது மிகையன்று.

தற்கால உளவியல் அறிஞர்களில் பெரும்பான்மையானவர்கள், உளவியல் என்பது மனித நடத்தை பற்றிய அறிவியல் என்பர். எனவே, மனித நடத்தையை மேம்படுத்தும் சாதனமாக, இசைக்கலையையும் நாம் கருதலாம். இதில் இசை என்பது வெறும் பாடப் பொருளின் தேர்ச்சி மட்டுமன்று. அறிவு வளர்ச்சி, மன வளர்ச்சி, ஞாபக சக்தி, செயல்திறன் வளர்ச்சி, உள ஒருமைப்பாட்டுத்திறன், பக்தி உணர்வு போன்றவற்றுடன் தொடர்புடையதாகும். மேலும் இசையைக் கற்பதனால் ஒருவர்க்கு அன்பு, அடக்கம், நல்லொழுக்கம், பக்தி போன்றவை ஏற்படுவதுடன் ஒருவரின் உடலமைப்பிலும், அதாவது முகவசீகரம், கவர்ச்சி போன்றவையும் விருத்தியாகிறது. அல்லாமலும் தூய அறிவியலோடு இசையைப் பயின்று, பாடிக் கேட்டால், உள்ளத்திற்கு மன அமைதியையும், மன நிறைவையும் தருவதுடன், மூச்சுப் பைகள் வலுவடைந்து உடல் நலம் பெருகவும் வழிவகுக்கின்றது எனலாம்.

## இசை ஆர்வத்தை வளர்த்தல்

இயல்பாகவே வீடுகளில் குழந்தைகள் பிறக்கும்போது, ஓர் இசைச் சூழ்நிலை உருவாகுவதைக் காணலாம். குழந்தையை தொட்டிலில் இட்டு ஆட்டும்போதே, இயற்கையாக ஒரு தாலாட்டுப் பாடலும் தாயின் வாயிலிருந்து பிறக்கும். இதைக் கேட்டுக் குழந்தை அமைதியுறுவது இயற்கையாகும். மேலும் இயல்பாகவே குழந்தை அழும்போது, நாம் நல்ல இசை ஒலியை ஏற்படுத்தினால் உடனே குழந்தை அழுகைச் சத்தத்தை நிறுத்தி உற்றுநோக்குவதை நாம் கவனிக்கலாம். குழந்தைகளுக்கு நல்ல இசைச் சூழ்நிலையை உருவாக்குதலே, அவர்கள் இசையில் நாட்டம் கொள்ளச் செய்யும். நல்ல இசையைக் கேட்கச் செய்வதன் மூலமும், கோயில் வழிபாட்டுடன், வீட்டில் பஜனை போன்றவை நடத்தி, அவற்றில் ஈடுபட வைப்பதும், அவர்களுக்கு இசை ஆர்வம் ஏற்பட வழிவகுக்கும்.

மேலும் தற்காலத்தே, விளையாட்டு மூலமும் இசை கற்பித்தல், நல்ல பயனை அளிக்கும். குழந்தைகளுக்கு மனச்சோர்வு ஏற்படாமல் இருப்பதற்கு இது ஒரு சிறந்த வழியாகும். இதனாலேதான் விளையாட்டு மூலம் இசை கற்பித்தல் முறை (Playway Methods of Music Teaching) மான்ரிசோரி (Montesori) அமைப்பிலும் ஏற்கப்பட்டுக் கற்பிக்கப்படுகிறது. இசைக்கோலம், கும்மி, கோலாட்டம், பின்னல் கோலாட்டம் போன்றவையும் இவற்றுள் அடங்கும்.

## மனநல வளர்ச்சியில் இசையின் பங்கு

மனநல விருத்திக்கு இசை ஆற்றும் பங்கை நோக்கும்போது, இசை இங்கு ஒரு மருந்தாகவே எண்ணப்படுகிறது. ஒருவர் இசையைக் கற்கும்போது ஐம்புலனறிவு விரிவடைகிறது. இதனால் அவரின் முழு ஆளுமையும் வளர்கிறது. மேலும் உற்றுநோக்கும் தன்மையும் ஆழ்ந்து சிந்திக்கும் திறனும் பெருகுகிறது. கற்பனா சக்தி வளர்கின்றது. பொறுமையைக் கடைப்பிடிக்கும் பயிற்சி ஏற்படுகின்றது. புத்தகப் படிப்பினால்

ஏற்படும் மனக் கசப்பு நீங்கி மேலும் புத்துணர்ச்சியுடன் பாடங்களைப் பயில வழி வகுக்கின்றது. மேலும் ஒருவர் இசையில் தேர்ந்து ஓர் உயர்ந்த நிலையில் வந்ததும், தன் முயற்சியின் வெற்றிகண்டு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதனால் தன்னம்பிக்கை உண்டாகிறது. மேலும் அறிவியல் பாடங்களைக் கற்றுத் தேறுவதற்கும், இசை ஒரு உந்துசக்தியாக விளங்குகின்றது. நியூட்ரன், ஆர்க்கிமிடிஸ் போன்ற விஞ்ஞானிகள் சிறந்த இசைக் கலைஞர்களாக விளங்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இசையின் மூலம், மனவளர்ச்சி குன்றிய வர்களையும் மேம்படுத்தலாம். தற்காலத்தே மன வளர்ச்சி குன்றியவர்களுக்காக நடத்தப்பெறும் பள்ளி களில், தனிப்பாடல், குழுப்பாடல், வண்ணம் தீட்டுதல், சித்திரம் வரைதல் போன்றவையும் கற்பிக்கப்படுகின் றன. மேலும் முதியோர் இல்லங்களிலும் இசை நிகழ்ச்சி கள் நடத்துவதன் மூலமும், அவர்களுக்கு மன அமைதி யையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தலாம். இன்றைய வேகமான உலகில் மாணவர்களை வேகமாகச் சீரழிக்கப் பலவகையான சாதனங்கள் பல்கிப் பெருகியுள்ளன. இவற்றில் போதைப் பொருள் முதன்மை வகிக்கின்றது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் மனநிலை சரியில்லாத வர்களாகவும், சோம்பேறிகளாகவும் சமூகத்திற்கு ஒரு சுமையாகவும் காணப்படுகிறார்கள். இவ்வாறு தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையானவர்களுக்கும், மனநிலை சரியில்லாதவர்களுக்கும், இசை மருத்துவ முறையில் (Music Theraphy) சிகிச்சை அளித்தல் நலம் கொடுக்கும். நம் நாட்டில் இம்முறை நன்கு வளர்ச்சி யடையவில்லை. இது பற்றிய ஆய்வுகள் பெருகினால் இதன் மூலம் மக்கள் பயன் பெற வாய்ப்பு ஏற்படும்.

இசை மருவத்துவத்திற்குச் சான்றுகள் நம் நாயன் மார்கள் பாடிய அருட்பாடல்களிலேயே உள்ளது. இசை யின் மூலம் நோய்கள் தீர்த்தமையும், வேண்டியன கிடைக்கப் பெற்றமையும் அவர்கள் பாடிய பாடல்கள் மூலம் நாம் அறியலாம். சங்க இலக்கியங்களிலும் இசை யின் மூலமே மதம் கொண்ட யானையை அடக்கி யமையும், வழிப்பறிக் கள்வர்களை மயக்கியமையும் குறிப்பிடப்பட்டுள்ளன. இசையோடு பக்தியையும் குழைத்துச் சாதனையுடன் செயல்பட்டால் இன்றும் இது சாத்தியமேயாகும். *


ஸ்ரீமதி யோகா தில்லை நாதன்
15 ஆவது ஆண்டாக நடத்தும்

**"கானக் குயில் 2007"**

ஜூன் 30 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு

Loan Hall, Bedford Way, Russel Square, London WCI இல் நடைபெறவுள்ளது.

விவரங்களுக்கு :
Q Kaanakkuyil, P.O. Box 318,
New Malden KT3 3WT 0208 390 5823


# தமிழிசைத் தேன்துளி

## சுவாமி விபுலானந்தர் அவர்கள்

'தமிழர் மிக்க புராதன மக்கள், இயேசுநாதர் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, தமிழர் எகிப்து, கிரீஸ் முதலிய அயல்நாடுகளுடன் வர்த்தகம் நடத்தி வந்தனர். இந்தியாவின் பல பாகங்களிலும் வசித்து வந்தனர். குமரிக்குத் தெற்கே தமிழர் வசித்து வந்த பெரும்பாகத்தைக் கடல் கொண்டது. அக்காலத் திலும் தமிழர் இசை உன்னத நிலையிலிருந்தது.

கலையுணர்ச்சி மிக்க பாணர்கள் கலையைத் தொழிலாகக் கொண்டு சங்க காலத்தே வாழ்ந்த பெரு மக்களாவர், அவர்கள் தத்தம் மனைவிகளுடனும் யாழ் களுடனும் ஒரு குறுநில மன்னரது சபையிலிருந்து மற்றொரு குறுநில மன்னரிடம் செல்லுவார்கள். அம் மன்னர்களை மகிழ்வித்தும், பரிசில் பெறுவார்கள். பாணனது மனைவி பெயர் பாடினி. இவள் நடனமாடி மகிழ்விப்பாள். பின்னர் நாட்டியம் விறலியர், கூத்தர் கலையாயிற்று.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஏழிசையுள் தாரம் என்பது சமஸ்கிருதச் சொல்லன்று. சமஸ்கிருதத்திலுள்ள தாரம் என்பதற்கு வேறு பொருள் உண்டு. புராதனத் தமிழ்ச் சுரங்கள் என்னவென்பதையும், அவைகளுக்குத் தற்போதுள்ள சுரங்களுக்குமுள்ள சம்பந்தம் என்னவென்பதையும் விவாதிக்கும் முன், நாம் 7 சுரங்களின் தோற்றத்தைப் பற்றியும் பாணன் தனது யாழை எம்முறையில் வாசித் தானென்பதையும் கவனிக்க வேண்டும்.

முதலில் தோன்றிய ஸ்வரம் தாரமென்பதாகும். இந்த சுரங்கள் எவ்விதம் தோன்றினவென்பது கீழ்க் காணும் பாடலால் அறியலாகும்.

**"தாரத்துட் டோன்று முழையுட் டோன்று**
**மோருங் குரல் குரலினுட் டோன்றிச் - சேருமிளி**
**யுட்டோன்றுந் துத்தத் துட்டோன்றும் விளரியும்**
**கைக்கிளை தோன்றும் பிறப்பு"**

தாரத்திலிருந்து உழையும், உழையிலிருந்து குரலும், குரலிலிருந்து இளியும், இளியிலிருந்து துத்தமும், துத்தத்திலிருந்து விளரியும், விளரியிலிருந்து கைக்கிளை யும் தோன்றியது. தமிழ்ப் பாணன் ஒவ்வொரு சுரத்தை யும் இதர சுரங்களோடு கூட்டி வாசிக்க ஆரம்பித்தான். ஒரு சுரத்தையும் அதன் பஞ்சமத்தையும் கூட்டி வாசித்த போது இனிமையான நாதம் ஏற்பட்டதைக் கண்டான். ஒரு தந்தியால் ஒரு சுரம் ஏற்பட்டால் அதன் மூன்றில் இரண்டு பாகம் அந்தச் சுரத்தில் பஞ்சமத்தையும், அரைப் பாகம் உச்ச ஸ்தாயியில் எட்டாவது ஸ்வரத்தையும் தோற்றுவிக்குமென்பதைப் பாணன் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டானென்று தெரிகிறது. இந்த விடயங் களை அடிப்படையாகக் கொண்டு இசைப்புலவனும், இசைக்கருவி செய்வோரும் சங்கீத சாத்திரமொன்றைப் படைத்தனர்.' அவற்றிலிருந்து தமிழிசையின் சிறப்பை யும், நுட்பத்தையும் அறியலாம்.

# ABBY EXCHANGE LIMITED

**The value of your money**

**That's Abby Money**

உங்கள் உறவுகளிற்கு உரிய
நேரத்தில் உகந்த இடத்தில்
பணமாற்றீடு செய்திட நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்....

தொடர்புகட்கு: **M.SRI**
**0780 122 7110**

இங்கிருந்து இந்தியாவிற்கு உல்லாச பயணம் செல்லும் எம்மவருக்கு அதிநவீன வசதிகளுடன் கூடிய எமது Luxury Apartment வாடகைக்கு விடப்படும்

உங்களுடைய பிள்ளைகளின் திருமணத்தை இந்தியாவில் சிறப்பாக செய்ய வேண்டுமா? கவலை வேண்டாம். திருமண மண்டம் தொடக்கம் திருமண உணவு பரிமாறுதல் வரை எல்லா ஒழுங்குகளும் தரமான முறையில் செய்து தரப்படும்

இந்தியாவில் உள்ள பல இடங்களுக்கு செல்ல வேண்டுமா அதிநவீன, A/Cயுடன் கூடிய சொகுசு வாகனங்களை நாம் ஒழுங்கு செய்து தருவோம்.

928 Garratt Lane
Tooting Broadway, London
SW17 0ND
Tel: 020 8672 0266 / 020 8672 7743
Fax: 020 8488 3114

367 London Road
Croydon
CR0 3PB
Tel: 020 8689 7555

# SINDHU MAHAL



உங்கள் நாவிற்கு நற்சுவைதரும்
தரமான உடனுக்குடன் தயாரித்த
தாயக உணவு வகைகளையும்
குடும்பத்துடன் வந்து சுவைத்து மகிழ
நீங்கள் நாட வேண்டிய இடம்

## சிந்து மஹால் உணவகம்

### இதோ எமது சிறப்பு உணவு வகைகள்

*Sindhu Special Briyani, Ceylon Style Briyani, Sindhu Special Kotthu Roti, Mix Masala Dosai, Sindhu Special Puttu Kotthu.*



அத்துடன் உங்கள் **திருமணம், பிறந்தநாள்** மற்றும் **பூப்புனித நீராட்டுவிழா அரங்கேற்றம்** போன்ற மங்களகரமான நிகழ்வுகளிற்கான உணவு வகைகளும், பலகார வகைகளும் செய்துகொடுப்பதுடன், உணவு அளவிற்கேற்ப இலவச விநியோகமும் செய்யப்படும்.

உங்கள் குதூகல நிகழ்விற்கான 70 இருக்கைகொண்ட **Party Hall** இலவச பாவனைக்குத்தருகிறோம்


100 இடியப்பம் 8 பவுண்கள் மட்டுமே

## சிந்து மஹால்

Finest Sri Lankan & South Indian Cuisine
274 Barking Road, Eastham, London E6 3BA
Tel: 020 8471 6226

# S. Satha & Co Solicitors

**we are always at your service**



- Injunction
- Family Law
- Immigration
- Criminal Law
- Conveyancing
- Legal Aid Work

Criminal Defence Service

Community Legal Service

Specialist Help Point Immigration Crime

**Tel : 020 8471 9484**
**Fax: 020 8471 9485**

**Emergency No 07956 288 671**

376-378 High Street North, Manor Park, London E12 6PH

**Dx. 133012 UPTON PARK 2**

# priya *Restaurant*

**FULLY LICENSED & AIR CONDITIONED**

Contemperory Sri Lankan & South Indian Restaurant



**We do outdoor Catering**
**please Contact on**

# 020 8520 5552

விசேட விலைக்களிவில் திருமண பிறந்த நாள் வைபவங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு தொடர்பு கொள்ளுங்கள்

BIRIYANI & CURRYS



Rice flavoured with saffron cooked with a mix of vegetables in a delicate blend of herbs and spices.

VEG KORMA



Mixed vegetables cooked with coconut.

DOSAI



Crepes made from a fermented batter of rice and urid(lentil)dhal served with Sambar (a thick stew of lentils with vegetables and seas ned with exotic spices) and two chutneys

FISH FRY



Fish Fried with Spices and Masala

209 High St. North
Eastham
London E6 1JG
020 8471 5552
(Close to Underground Station)

256, Hoe Street
Walthamstow
London E17 3AX

Authentic Sri Lankan & South Indian cuisine
prepared by famous Experienced Chefs from India

# சங்கத் தமிழர் இசையில் யாழ்

திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம், இலண்டன்

**உ**லகமெலாம் பரந்து வாழும் இன்றைய தமிழன் தலைநிமிர்ந்து 'நான் தமிழன்' என்று பெருமிதமாகச் சொல்லி மகிழ்தற்காகச் சங்கத்தமிழர் சான்றோர் விட்டுச்சென்ற 'நிலவறை நிதியமே' சங்கத்தமிழ் நூல்கள் என்றால் அது மிகையாகாது. நிலவறையிலும் சென்று பார்ப்போமானால் இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம், மருத்துவம், கட்டடம், போர், தாவரவியல், வாழ்வியல் எனக் கலைச் செல்வங்கள் மண்டிக்கிடப்பதைக் காணலாம்.

எம் மூதாதையர் தேடிவைத்துச் சென்ற கலைச் செல்வங்களை மாற்றானுக்கு இரவல் கொடுத்து மறந்ததோடு, களவு கொடுத்தும் இருக்கின்றோம். இன்று அவை மாற்றுடை உடுத்தியும், மறுபெயர் பூண்டும் எம்மிடமே திரும்பி வருகின்றன. எமது முன்னோரின் சொத்துகள் என்று அறிய முடியாதவர்களாக, மாற்றானின் கலைத்திறம் அவை என அதிசயிக்கிறோம். இந்நிலை எமக்கு ஏன் வந்தது என்பதைக் கலித்தொகையில் பாலை பாடிய பெருங்கடுங்கோ கேட்கும் கேள்விகளால் உணரலாம்.

**'வீழுநாக் கிரைச்சியாய் விரல்கவர் பிசைக்குங்கோல்**
**ஏழும் தம் பயன்கெட இடைநின்ற நரம்பறூஉம்**
**யாழினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ'**

*(கலி 8-9-11)*

**ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை**
**யாழுளே பிறப்பினும் யாழ்க்கவை தாம் என் செய்யும்**

*(கலி 9-19-19)*

யாழ் வாசிக்கும் போது இடை நரம்பு ஒன்று அறுந்தால் ஏழு நரம்புகளும் பயனற்றுப் போகும், அத்தகைய யாழிலும் பயனில்லாத பொருளையும் விரும்புவார்களா? ஏழு நரம்புகளால் யாழினுள் உண்டாகும் இனிய இசையானது பாடுபவர்க்கு அல்லாமல் யாழுக்கு என்ன பயனைக் கொடுக்கும்?

மனித சிந்தனையைச் செதுக்கச் செய்யும் அற்புதமான கேள்விகள் இவை. இக்கேள்விகள் எடுத்தாளப்பட்ட காரணங்கள் வேறாயினும், இன்றைய தமிழர்களாகிய எம்மை நோக்கிக் கேட்கப்பட்ட கேள்விகளாகக் கொள்ளலே மிகப் பொருந்தும்.

நாம் பொருள், பொருள் என்று பகட்டுக்கு மயங்கி அல்லும் பகலும் உழைத்து எம்மையே அழிக்கின்றோம். பொருளை விரும்பினோம். வள்ளுவன் சொன்ன செல்வங்களுள் தலையாய செவிச்செல்வத்தை அள்ளி வழங்கும் இன்தமிழிசையைப் பாடாது புறக்கணித்தோம். ஆதலால் தமிழிசையையும் யாழையும் இழந்து நின்று, இன்றைய கர்நாடக இசைக்குத் தமிழிசையே மூலம் என்பதையும் ஆய்ந்துணராது இருக்கின்றோம்.

தமிழ்மொழி என்று தோன்றியதோ அன்றே தமிழிசையும் தோன்றிவிட்டது. தமிழ் தன் எழுத்தின் நீட்சியிலே இசை அமைதியை வெளிப்படுத்தும் அ, ஆ... ஆகும்போது இசை தோன்றிவிட்டது. அதாவது குற்றெழுத்து நெட்டெழுத்தாக மாறுகையில் ஒரு மாத்திரை இரண்டு மாத்திரையாகக் கலாப்பிரமாணம் கொள்ளும் பொழுது இசை பிறக்கின்றது. இந்தக் கலா அளவு தமிழிசைக்கு ஏற்ற தாளத்தையும் தருகின்றது.

இத்தகைய ஓர் அரிய மொழியை உருவாக்க எத்தனை ஆயிர வருடங்களாக அந்தச் சமுதாயம் இசையிலே மூழ்கித் திளைத்துப் பண்பட்டிருக்க வேண்டும்? இதனை

**'அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிய இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்'**

*(தொல் 1-33)*

எனத் தமிழ் இலக்கண ஆசிரியரான தொல்காப்பியர் உறுதி செய்துள்ளார். அவரும் தமக்கு முன் வாழ்ந்த யாழ்நரம்பு நூல் புலவர்கள் கூறுவதாகச் சொல்வதால் சங்க காலத்திற்கு முன்பே தமிழிசை தோன்றி யாழ் இலக்கண நூல்களும் உருவாகிவிட்டன என்பதை அறியலாம்.

தான் பாடிய ஒவ்வொரு தேவாரப் பதிகத்திலும் எட்டாவது தேவாரத்தில் இராவணனைப் பற்றிக் கூறும் திருஞானசம்பந்தர்

**'ஏழிசை யாழ் இராவணனே'** *(ப. திருமுறை 3-117-8)*

**'விரலினாலே நீடி யாழ் பாடவே**
**கருக்கு வாள் அருள் செய்தான்'** *(ப. திருமுறை 3-24-8)*

என்றெல்லாம் இராவணன் விரலால் யாழ் மீட்டிப் பாடியதைக் காட்டி இதிகாச காலத்திலும் யாழிசை இருந்ததைச் சுட்டுகிறார்.

சங்கத்தமிழ் நூல்களிலே இசையமைக்கப்பட்ட நூல் பரிபாடலாகும். அது பழந்தமிழ் இசைக்கருவிகள் பற்றிப் பல செய்திகளைத் தருகின்றது. சங்கப் புலவர்கள் இசையமைப்பாளர் ஆக இருந்தமையும் ஒரு இசையமைப்பாளர் பாடலுக்கு வேறு ஒரு சங்கப்புலவர் இசையமைத்ததையும் எமக்குக் காட்டுகிறது. சங்கத் தமிழர்கள் யாழிசையுடன் சேர்ந்து பாடியதை

**'சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்**
**காரெதிர் கானம் பாடினேம் ஆக'** *(புறம் 144-2-3)*

புரியுறு நரம்பும் இயலும் புணர்ந்து *(பரி 18-51)*

எனச் சங்கத் தமிழ் நூல்கள் எடுத்தியம்புகின்றன. யாழி சைக்கு அடிநிலை ஒலியாக (ஆதார சுருதியாக) குழல் இருந்ததைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ

**'நரம்பின் தீங்குரல் நிறுக்குங் குழல் போல'**

*(கலி 33-22)*

எனச் செப்ப, மையோடக் கோவனார், யாழிசையும் பாட்டிசையும் ஒன்று சேர சுருதியாகக் குழல் அமைந்த தைக் 'குழல் அளந்து நிற்ப' எனக் கூறுவதோடு சங்க கால நடன அரங்கையே எமக்குப் படம் பிடித்து வைத்து உள்ளார்.

**'புரிநரம்ப இன்கொளைப் புகல் பாலை ஏழும்**
**எழுப்புணர் யாழும் இசையும் கூடக்**
**குழலளந்து நிற்ப முடிவெழுந்து ஆர்ப்ப**
**மன்மகளிர் சென்னியர் ஆடல் தொடங்க'**

*(பரி 7-77-80)*

இளங்கோவடிகளும் அரங்கேற்று காதையில் மாதவியின் நடனத்தை

**'குழல் வழி நின்றது யாழே'** *(சிலம்பு 3-139)*

என்று தொடங்கியே காட்டுவதும் இங்கு நோக்கத்தக்கது.

**'கவின்முகை கட்டவிழ்ப்ப தும்பி கட்டியாழின்**
**புரிநெகிழ்ப்பார் போன்றன கை'** *(பரி 18-36-37)*

காந்தள் மொட்டுகள் யாழின் புரிநெகிழ்ப்பார் கை போன்றிருந்தன என்று கூறும் இப்பரிபாடல் வரிகள் கைகளால் யாழ் நரம்பை நெகிழ வைத்துச் சுருதி சேர்த்ததைப் பதிவு செய்துள்ளன.

**'வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்து'** *(பொருநர் 23)*

யாழ் நரம்பைச் சீர்செய்து சுருதி கூட்டிய செய்தியை முடத்தாமக் கண்ணியார் தந்திருக்கின்றார். இத்தொடரில் யாழுக்குரிய இசைக் காரணங்கள் எட்டில், நான்கைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது சுட்டு விரலால் நரம்பை வாரியும், சுட்டு விரலாலும் பெருவிரலாலும் நரம்பை வடித்தும், நரம்புகளை உந்தியும், உறழ்ந்தும் சுருதி சேர்த்த முறையைக் கூறியுள்ளார்.

இசைக் கருவிகளுக்குச் சுருதி சேர்க்க மிக மிக நுட்பமாக ஒலியுணர்வு வேண்டும். அதாவது நுண் சுரங் களில் ஒலி வேறுபாட்டை உணர்வதற்குக் கூர்மையான செவிப்புலன் வேண்டும். சங்கத் தமிழர்களும் யாழின் சுர வேறுபாட்டைக் கேட்டு சுருதி சேர்த்ததை

**'கைவைத் திமிர்பு குழல் காண்குவோரும்**
**யாழின் இளி குரல் சமங்கொள்வோரும்**

*(பரி 19-41-42)*

என்னும் நப்பண்ணனார் வாக்கை இளங்கோவடிகளும் சிலப்பதிகாரத்தில்

**''ஏற்றிய குரல் இளி என்று இரு நரம்பின்**
**ஒப்பக்கேட்கும் உணர்வின் ஆகி''**

*(சிலம்பு 3-59-60)*

என வழிமொழிகின்றார். இதனைப் பழந்தமிழர் பண்ணல் என அழைத்தனர். செவியை யாழ் நரம்புடன் ஒன்ற வைத்து, நரம்பை மீட்டித் திவவினால் (நரம்பைத் தளர்த்தவும், இறுக்கவும் உதவும் உறுப்பு) சுருதி கூட்டி யாழிசைத்துப் பாடிய நயனுடைய நெஞ்சினரை நக்கீரர் வரைந்துள்ளார்.

**'செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்**
**நல்யாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்**
**மென்மொழி மேலவர் இன் நரம்பு உளர**
**நோய் இன்று இயன்ற யாக்கையர்**

*(திருமுரு 140-143)*

சுருதி சுத்தமான யாழிசையைக் கேட்டுக் கேட்டு சங்கத் தமிழர்கள் இன்பம் நிறைந்த நெஞ்சினராய் மென் மையாகப் பேசும் உயர் குணம் நிறைந்தவராய் நோயற்ற உடலோடும் வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். இது அவர் களது மேம்பட்ட வாழ்வியலைக் காட்டுவதோடு நோயற்ற வாழ்வுக்கு மருந்தாகத் தமிழிசை இருந்ததை யும் உணர்த்துகின்றது.

நரம்புகளின் சுருதியானது வெப்பநிலைகளின் மாற்றத்தால் மாறக் கூடியது. சுருதி சேர்க்கப்பட்ட யாழின் சுருதி மாறாதிருக்க உடல்வெப்ப நிலையோடு அதற்குச் சுருதி கூட்டி மார்போடு அணைத்தவாறு அதனை இசைத்தார்கள். இந்த அறிவியற் கருத்தை நெடுநல் வாடை தருகின்றது.

**'தண்மையின் திரிந்த இன்குரல் தீம் தொடை**
**கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ**
**கருக்கோட்டுச் சீறியாழ் பண்ணு முறை நிறுப்ப'**

*(நெடுதல் 68-70)*

பண் என்பது பாடலொடு பொருந்துவதாக இருக்க வேண்டும். இது வள்ளுவர் முடிவு.

**'பண் என்னாம் பாடற்கு இயைபின்றேல்'** *(குறள் 573)*

காரைக்கால் அம்மையாரும்

**'தத்தம் கைக்கிளை விளரி தாரம்**
**உழை இளி ஓசை பண் கெழுமப் பாடி'**

*(ப. திருமறை 11-1-9)*

இறைவன் ஆடியதைப் பார்த்து இரசித்துப் பரவசப்படுகின்றார். அம்மையார் வரிசைப்படுத்தும் இந்த ஏழு தமிழிசைச் சுரங்களில் ஓசையை இளங்கோ வடிகள் குரலெனக் குறிப்பிடுகின்றார். இந்த ஏழு சுரங் களை உபயோகித்துச் சங்கத் தமிழிசையில் இருந்துதான் இன்றைய எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்களும் கர்நாடக சங்கீதமும் உருவானது என்பது யாருமே மறுக்க முடியாத உண்மையாகும்.

பழந்தமிழர் பண்ணமைத்த பாடல்களையே பாடி னார்கள். அவர்களுக்கு இராகம் என்ற சொல்லே தெரி யாது என்றும் 'சதுர்த்தண்டிப் பிரகாசிகா' என்ற நூலை எழுதிய வேங்கடமகியே எழுபத்திரண்டு மேளகர்த் தாவை உருவாக்கி இராகம் என்ற சொல்லை உப

யோகித்தார் என்றும் கூறுவது மிக மிகத் தவறான கருத்தாகும். வேங்கடமகிக்கு ஆயிர வருடங்களுக்கு முன் வாழ்ந்த திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில்,

**'அந்தளி ராகம் போலும் வடிவர் ஆரூர னாரே'**

*(ப. திருமுறை 4-53-5)*

என்று இராகம் என்ற சொல்லை பதிவு செய்து வைத் திருக்கின்றார்.

சங்கத் தமிழர்கள் யாழில் ஒரே பண்ணை முறை யாக நிறுத்தி இசைத்ததோடு பண்ணுப் பெயர்த்தும் (பண்ணை மாற்றியும்) இசைத்திருக்கின்றார்கள்.

**'தீந்தொடை நரம்பின் வாலை வல்லோன்**
**பையுள் உறுப்பின் பண்ணுப் பெயர்த்தாங்கு'**

*(பதிற்று 65-14-15)*

ஆம்பல், செவ்வழி ஆகிய பண்களைக் கோவ லர்கள் (இடையர்கள்) இசைத்தார்கள். அது உயிருக்கும் இசையாக இருந்தது.,

**'ஆ பெயர் கோவலர் ஆம்பலொடு அளைஇ**
**பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப**
**ஆருயிர் அணங்குத் தெள்ளிசை'**

*(அகம் 24-12-14)*

சங்ககாலத்தில் யாழிசை நகரங்களிலோ, பணக் காரிடமோ, அரங்குகளிலோ, இசைகற்றவரிடமோ முடங்கிக் கிடக்கவில்லை. கோவலரிடமும், பாவலரிடமும், சிற் றூரிலும், பேரூரிலும் விரவிக் கிடந்தது.

**'கைவார் நரம்பின் பாணர் கோக்கிய**
**நிரம்பாவியல்பிற் கரம்பைச் சீறார்'** *(புறம் 302-6-7)*

நாம் வாழ்ந்த நிலப்பண்போடு ஒன்றியும் காலங் களுக்குத் தகுந்தவாறும், மனநிலைக்கு ஏற்றவாறும் பண்ணமைத்து ஆண்களும், பெண்களும், வில்யாழ், பேரியாழ் என வகை, வகையான யாழ்களில் பண்களை இசைத்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

**'வண்டுபடு கூந்தல் முடிபுனை மகளிர்**
**தொடைபடு பேரியாழ் பாலை பண்ணி'**

*(பதிற்று 46-4-5)*

**நைவளம் பழுதிய நம் தெரிபாலை**
**கைவல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க.**

*(சிறுபா 36-37)*

**வில்யாழ் இசைக்கும் விரல் எறி குறிஞ்சி**

*(பெரும்பா 182)*

**தெறல் அருங் கடவுள் முன்னர்ச் சீறியாழ்**
**நரம்பு இசைத் தன்ன** *(நற் 189-3-4)*
**படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்பு** *(நற் 139-4)*

**விளரி ஒறுதரும் தீந்தொடை நினையா** *(புறம் 260-2)*
**'சீர் இனிது கொண்டு நரம்பு இனிது இயக்கி**
**யாழோர் மருதம் பண்ண'** *(மதுரை 657-658)*

பண்ணமைந்த யாழிசை தெய்வ வழிபாட்டிலும், அறத்திலும், மறத்திலும், இன்பத்திலும் சங்கத் தமிழ ருக்குத் துணை நின்றது. அவர்களின் வீரவரலாற்றைக் கூறி எமக்கு அஞ்சா நெஞ்சமும், மான உணர்வும், நாட்டுப்பற்றும் தருவது புறநானூறு. அது தமிழரிசை யினுள் யாழிசை வீரருக்கு வீரம் சேர்த்ததைப் பகரும்.

போர் மடிந்து வீரர்கள் வெற்றியோடு வீடு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நகரமே மகிழ்ச்சி யில் திளைக்கின்றது. ஆனால் இறந்தவர்கள் எத்தனை பேர்? கையிழந்து, குற்றுயிராய் வருபவர் எத்தனை பேர்? பெண்களின் மனநிலை வீட்டுக்கு வீடு வேறு படுகின்றது.

'அன்பான தோழியே! இவன் நம் வேந்தனுக்கு உற்ற துன்பம் தீர்த்த பெருந்தகை வீரநடை நடந்து வரும் இவன் போரில் காயப்பட்டுள்ளான். இரவ இலையும், வேப்பிலையும் வீட்டிலே செருகி யாழொடு பல வாத்தியங்களை இசைத்து இவனைக் காப்போம் வா! எனத் தலைவி அழைப்பதாகப் புறநானூற்றில் அரிசில் கிழார் ஒரு காட்சியைக் காட்டுகிறார்.

**'தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ**
**வாங்கு மருப்பு யாழொடு பல்லியம் கறங்க**
**............ நெடுந்தகைப் புண்ணே'** *(புறம் 281)*

மூவேந்தர்களையே சீறியாழ் வாசித்து விறலியர் பின்வர ஆடிப்பாடிச் சென்று பாரியிடம் அவனது நாட்டைப் பெறுமாறு கூறும் கபிலரின் ஆற்றலையும், யாழின் பெருமையையும் புறநானூறு பொதிந்து வைத்து உள்ளது.

**தாளின் கொள்ளலிர் வாளின் தாரலன்**
**யான் அறிகுவன் அது கொள்ளும் ஆறே**
**சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி**
**விரையொலி கூந்தல் விறலியர் பின்வர**
**ஆடினர் பாடினீர் செலினே**
**நாடும் குன்றும் ஒருங்கு ஈயுமே'** *(புறம் 109-13-18)*

இவை யாவற்றிற்கும் ஒரு படி மேலே சென்று

**'மேலோர் உறையுளும் வேண்டுநர் யார்**
**ஒருதிறம் பாணர் தீங்குரல் எழ'** *(பரி 17-8-9)*

ஒரு பக்கம் பாணாது யாழின் இனிமையான இசை எழுந்தால் தேவ உலகவாழ்வு யாருக்கு வேண்டு மெனக் கேட்டுச் சங்கத் தமிழரிசையில் யாழின் மேம் பாட்டை மிளிரச் செய்திருக்கின்றார் நல்லழிசியார்.

சங்கத் தமிழ்ச் சான்றோர்கள் பெருமிதமாகச் சொல்லி மகிழ்ந்த யாழிசையைத் தந்த யாழையும் தமிழி சையையும் பேணாது மறந்த நாமும் தமிழர்களா? ❋

# இலண்டன் கர்நாடக இசை விழா 2007

பிரித்தானியாவின் தலைநகர் இலண்டன் மாநகரில் கர்நாடக இசைவிழா 2007 வரும் ஏப்பிரல் திங்கள் 27, 28, 29 நாள்களில் இலண்டன் கர்நாடக இசைக் கல்லூரியின் ஆதரவில் நடைபெறவுள்ளது. மிகச் சிறந்த மருத்துவரும், இசைப்பிரிய ரும், சுடரொளி இதழின் காப்பாளருமான வைத்திய கலாநிதி சி. நவரத்தினம் அவர்களின் ஏற்பாட்டில் இவ்விசை விழா ஏற்பாடாகியுள்ளது. இவ்விதழின் பின் அட்டையில் கண்டுள்ள நிகழ்ச்சி நிரலின்படி நிகழ்வுகள் அரங்கேறும். விழா ஏற்பாட் டாளரையும் இதில் பங்கேற்கும் கலைஞர்களையும், சுடரொளி பாராட்டுகிறது. இசை விழா வெற்றி பெற வாழ்த்துகிறது.

**வைத்திய கலாநிதி சி. நவரத்தினம்**

பெயரில் மட்டுமல்ல, உலகத் தமிழர்களின் உள்ளங் களிலெல்லாம் சிம்மாசனமிட்டு நவரத்தினமாகவே இவர் விளங்குகின்றார். குறளடி போல் அடக்கமும் குன்றாத கருத்து களில் நாலடி போல் பெருக்கமும் கொண்டவர்! இலண்டனில் மருத்துவத் துறையில் கொடிகட்டிப் பறந்தாலும் இவர் உள்ளத் திலும் உதட்டிலும் தமிழே குடியிருந்து வருகிறது.

தமிழிசையில் மிகவும் ஈடுபாடு கொண்ட இவர் தமிழ் எங்கே இசைத்தாலும் இசைத்தேன் பருக வண்டாகப் பறப்பது வாடிக்கை. ஆண்டுதோறும் தமிழகத்தில் நடந்துவரும் இசை விழாக்களில் கலந்து, கண்டு, மகிழ்ந்து இங்குள்ள இசைக் கலைஞர்களை இலண்டனுக்கே அழைத்துச் சென்று போற்றும் இவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இசைப் புலமை மிக்க இவர் இலண்டனில் ஆண்டு தோறும் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் இசை விழாக்களை நடாத்தி முத்தமிழன்னைக்கு மகுடம் சூட்டுகிறார். இவர் இலண்டன் சுடரொளி இதழின் காப்பாளர் மட்டுமல்ல; தமிழ் இசை, தமிழ்க் கலை, தமிழ்ப் பண்பாடு, தமிழ் உணர்வு, தமிழர் மறம், இவைகட்கும் இவரே காப்பாளர்!

இவருடைய முயற்சியில் இலண்டனில் நடைபெறும் இசைவிழா வெற்றி பெறவும், தொடர்ந்து இசைவிழாவை நடத்திவரும் வைத்திய கலாநிதி நவரத்தினம் அவர்கள் வாழ் வாங்கு வாழ, வளம் பெற இலண்டன் சுடரொளி வாழ்த்துகிறது.

**பூஷணி கல்யாணராமன்**

சங்கீத வித்வான் பூஷணி கல்யாணராமன் நாதமே வேதமெனக் கொண்ட கலைக் குடும்பத்தில் பிறந்தவர். கன பரிமாணம் மிக்க சாரீரமும் நல்ல இசைப் பிரயோகமும் வாய்க்கப் பெற்றவர். அவரது இசை வாழ்வுக்கு அத்திவார மிட்டவர் அவரது தந்தையார் சங்கீதபூஷணம் குலசேகரம்; மெருகிடச் செய்தவர் அவரது கணவர் கல்யாணராமன்.

தேவாரம், திருப்புகழ், திருவெம்பாவை, திருப்பாவை போன்ற பக்தி இசையிலும் தேர்ச்சி பெற்று நிற்கின்றமையால் பூஷணி அவர்கள் தமிழகத்தில் பல்வேறு அரங்குகளில் மாத்திர மல்லாது அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா என தமிழர் வாழிடங்கள் எங்கனும் தன் கம்பீர குரலிசையால் ஏகோபித்த பாராட்டுகள், கௌரவங்கள், விருதுகள் பெற்றும் பிரகாசிக்கின்றார்.

இந்திய, இலங்கை வானொலி, தொலைக்காட்சி ஆகியவை இவரை முதல்தர வித்தகியாக அடையாளம் கண்டன. யாழ் பல் கலையும் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியும் கலாசேத்ராவும் மாணவர்க்கு இவர் இசை பயிற்றுவிக்கும் கூடங்களாயின. இசை விமர்சகர் சுப்புடுவின் பாராட்டு விமர்சனங்களால் புகழ் ஈட்டியவர். தமிழக ஆளுநர் பாத்திமா பீவி அவர்களால் தமிழக முதல்வர் கலைஞர் முன்னிலையில் 'கலைமாமணி' விருது வழங்கப் பெற்றவர்.

காலஞ்சென்ற தம் கணவர் 'கல்யாணராமன் அறக் கட்டளை' வழி இசைப் பள்ளியைக் கட்டியெழுப்புவதே தம் கனவு என்கிறார். இக்கனவு மெய்ப்பட வாழ்த்துவோம்.

**பாம்பே ஜெயஸ்ரீ இராம்நாத்**

பாரம்பரியம் மிகுந்த இசைக் குடும்பத்தில் தோன்றிய பாம்பே ஜெயஸ்ரீ இராம்நாத் நான்காவது தலைமுறையாக இசைத் தொண்டாற்றி வருகிறார். புகழ்மிக்க இசைக் கலைஞர் களான இலால்குடி ஜெயராமன், டி.ஆர். பாலாமணி, ஜி.என். தண்டபாணி முதலானவர்களைக் குருவாகக் கொண்டு இசை பயின்றவர், இலால்குடியின் இசை மரபைப் பின்பற்றித் தமக்கென தனிப்பாணியை உருவாக்கிக் கொண்டு 20 ஆண்டு களுக்கும் மேலாக இசைப் பயணம் மேற்கொண்டு வருபவர். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதி காரத்தை நாட்டிய நாடகமாக அமைத்து அரங்கேற்றியும் பல இசை ஆல்பங்களை உருவாக்கியும் புகழ் சேர்த்தவர்.

இந்தியாவின் பல மாநிலங்களிலும் பல அயல்நாடு களிலும் இந்திய இசையைப் பரப்பி வருபவர். தென்னாப் பிரிக்காவின் டர்பன் நகரிலுள்ள ஒபரா ஹவுசில் கர்நாடக இசையை முதன்முதலாக ஒலிக்கச் செய்த பெருமைக்குரிய வர். ரஷ்யா, பின்லாந்து, ஹெல்சிங்கி முதலான நாடுகளில் இசை நிகழ்ச்சிகள் நடத்தியவர்.

இசைத் துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்டவர். பல நாடுகளில் நடைபெற்ற இசை மாநாடுகளில் பங்கேற்று உலக இசை குறித்து ஆய்வுக் கட்டுரைகளைப் படைத்தவர். திரைப்படத் துறையிலும் கால் பதித்து 'வசீகரா' பாடலின் மூலம் புகழ்பெற்று பிலிம்பேர் விருதையும் பெற்றுள்ளவர். சங்கீத சூடாமணி, நாதபூஷணம் முதலான விருதுகளையும் பெற்றுள்ளவர்.


**சிவசக்தி சிவநேசன்**

1984 ஆம் ஆண்டு தொடக்கம் இலண்டன் பாரதீய வித்ய பவனில் இசை ஆசிரியையாகக் கடமை புரிந்து கொண் டிருக்கும் சிவசக்தி சிவநேசன் அவர்கள், இராமநாதன் அக் கடமியில் சங்கீத இரத்தினம் டிப்ளோமா பட்டமும், தமிழ்நாடு அரசாங்க இசைக் கல்லூரியில் சங்கீத விதூசி பட்டமும் பெற்றவர். வேம்படி மகளிர் கல்லூரியில் இசை ஆசிரியராக வும், யாழ் பல்கலைக் கழகத்தில் இசை விரிவுரையாளராகவும் கடமை புரிந்த சிவசக்தி, இதுவரையில் 20 இறுவெட்டுகளை வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணம் என். சண்முகரத்தினம், வீரமணி ஐயா போன்ற பிரபல இசைக் கலைஞர்களிடம் இசை, நடனத்தைப் பயின்ற சிவசக்தி அவர்கள், 300க்கும் மேற்பட்ட நடன அரங்கேற்றங்கள் வாயிலாகத் தனது இசைப் புலமையை வெளிப்படுத்தியுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் இணுவில் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயாவிடம் இசையையும் நடனத்தையும் கற்றுக் கொண்டவர். அவர் விட்டுச்சென்ற பணிகளை முன்னெடுத்துச் செல்லும் விசுவாசமிக்க கலைஞராவர். *

## மலேசியா தலைநகர் கோலாலம்பூரில்

# முதலாவது உலக சித்தர் நெறி மாநாடு 2007



மலேசிய ஸ்ரீ அகத்திய ஞான பீடம் ஏற்பாட்டில் வருகிற 2007 ஆம் வருடம் மே மாதம் 25, 26, 27 ஆகிய மூன்று நாள்கள் மலேசியா தலைநகர் கோலாலம்பூரிலுள்ள மலாயப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. ஸ்ரீ அகத்திய ஞான பீடத் தலைவரும் முதலாவது உலக சித்தர் நெறி மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுத் தலைவருமான அருட்செல்வர் அப்னா நாகப்பன் அவர்கள் இம்மாநாட்டு ஏற்பாடுகள் பற்றிக் கூறியதாவது :

இம்மாநாட்டினை மலேசியப் பொதுப்பணித் துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் தொடங்கி வைக்க, தமிழ்நாட்டின் தஞ்சைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சி. சுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்க, மாநாட்டின் புரவலரான தமிழ் நாட்டைச் சேர்ந்த ஸ்ரீ அகத்தியர் ஞானபீடம் தங்கராசன் அடிகளார், சத்தியத்தின் சக்தி நிலையச் சங்கத் தலைவர் மதிவாணன் அவர்களும் சிறப்புரை ஆற்றவுள்ளனர். இம்மாநாட்டில் வடலூர் வள்ளல் வழி ஞானப்பெருமகனார் ஊரன் அடிகள், சுவாமி ஓங்காரநந்தா, கொல்லி மலை சுவாமி தர்மலிங்கம், சுவாமி ரமண குருஜி, கமலக்கண்ணன் போன்ற ஆன்மீகப் பெரியோர் களின் அருளாசியும், சித்தர் ஆய்வு மையம் பேராசிரி யர் அரங்க ராமலிங்கம், பேராசிரியர் கணபதி போன் றோர்கள் சிறப்புரை ஆற்ற இருக்கின்றனர்.

சித்தர் நெறி அறிந்த நற்சிந்தனையாளர்களின் கட்டுரைகளைத் தாங்கிய மாநாட்டு மலரும் வெளியீடு காணவுள்ளது. வானவியல், சித்தர்களின் கண்டுபிடிப்புகளுக்கான அறிவியல் விளக்கம், மூலிகை மருந்துகள், நோய் தீர்க்கும் ஆசன வகைகள், யோகா மற்றும் பிராணாயாமம், இயற்கை வைத்தியம், சித்த வைத்தியம், மூலிகைகள், ஆத்ம ஞானம் முதலானவை குறித்த ஆய்வுக் கட்டுரைகள் இம் மலரில் இடம் பெற்றுள்ளது. பேராசிரியர் முனைவர் மு. இராசேந்திரன், விரிவுரையாளர் கோவி. சிவபாலன், ஜி.எம். சுப்பிரமணியம், அருள் செல்வர் அப்னா நாகப்பன் ஆகியோர் அடங்கிய குழு இம் மலர் தயாரிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது.



அப்னா நாகப்பன்

மாநாட்டில் கலந்து கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள பேராளர்கள் முன்கூட்டியே ஏற்பாட்டுக் குழுவினரிடம் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். பேராளர் கட்டணம் மலேசிய வெள்ளி (RM) 100.00 தங்கும் விடுதி 3 நாள்கள் கட்டணம் மலேசிய வெள்ளி (RM) 50.00, மொத்தக் கட்டணம் மலேசிய வெள்ளி (RM) 150.00

**மாநாட்டின் செயலகம் :**

**மலேசிய ஸ்ரீ அகத்திய ஞான பீடம்**

Pertubuhan Kerohanian Sri Agastiar Nyaana Peedam
Malaysia 11C, Wisma Keringkat 2,
Lorong Batu Caves 2,
68100 Batu Caves, Selangor, Malaysia.


தமிழகத் தொடர்பாளர் :

**தவயோகி தங்கராசர் அடிகளார்**

ஸ்ரீஅகத்தியர் ஞானபீடம்
தூரிப்பாலம், கல்லாறு, மேட்டுப்பாளையம் - 641 305.
செல் : 98420 27383, 98425 50987

கனடா எழுத்தாளர் திரு. எஸ்.எஸ். துரை அவர்களின் ''வானொலி நாடகம்'' நூல் இரண்டாம் முறையாக இலண்டனில் வெளியீடு கண்டபோது, பங்கேற்ற பிரமுகர்கள்.





எட்மென்டனிலுள்ள தமிழ் நிவாரண நிலையம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் நிலையச் செயலாளர் திரு. பரஞ்சோதி தலைமையேற்க, இலங்கை எழுத்தாளர் கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன் ''தமிழ் வெளியீடுகள்'' பற்றி உரை நிகழ்த்துகிறார்.



# வானொலி மாமா
# அமரர் வில்லிபுரம் இராசையா

## கலைவாணன்

### வானொலி மாமா, இலக்கியவாதி எனப் பாராட்டப்படும் அமரர் வ. இராசையா உறவுகளுக்கு அப்பால் உண்மையைத் தேடுவதற்கு கற்றுக்கொடுத்த சான்றோன்

**உ**ண்மையைத் தேடுவதற்குத் திடசங்கற்பம் கொண்ட மனிதன் இறப்பதில்லை. அவனது தேடல் பசி ஒரு தனிப்பேறு. அவன் உடல் தீயுடன் சங்கமமாக, உயிரானது இறவா நிலைபெற்ற உண்மையுடனும், அதனைத் தேடும் பசி கொண்ட பிறரிடமும் ஒன்றி விடுகிறது. இவ்வாறுதான் கர்மவீரரென்றும், சிறுவர் இலக்கியக்கர்த்தா என்றும் வானொலி மாமா என்றும் வானொலி அண்ணா என்றும் படைப்பாளி என்றும் எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், அவர்தம் மாணவர்கள் போன்றோரால் இன்று பாராட்டப்படும் அமரர் வில்லி புரம் இராசையா அவர்களின் உயிர் எம்முள் ஒன்றி விட்டதென்று கூறலாம்.

மனிதன் ஒரு தடவையே பிறக்கிறான்; ஒரு தடவையே மரணிக்கின்றான். இந்த இடைவெளிக்குள் அவன் சரியாக.....மனிதனாக..... பயனுள்ள வாழ்வு வாழ்ந்திடவேண்டும். இவ்வாறு கூறுவதில் பெருமைப் பட்டவரான யாழ்ப்பாணம் திருநெல்வேலி வல்லிபுரம் இராசையா அவர்கள் 22-11-1919 இல் பிறந்து 17-02-2007 இல் அமரராகும் வரையும் அவ்வாறே வாழ்ந்த ஒரு மகான் ஆவார். தாயை விடவும், தாய் மொழியை விடவும், தாய்நாட்டை விடவும் உண்மை பெரியது என்ற கருத்தை டாக்டர் மு.வ. அழுத்திக் கூறி வந்தார். அதனை அன்றாட வாழ்வில் உணர்த்திக் காட்டி வாழ்ந்து வந்தவர் வ.இ. அவர்கள். தனது குடும்பம், தான் வாழ்ந்த சமூகம், மனிதகுலம் என்பனவற்றிற்குத் தன்னால் ஆற்ற முடிந்த அத்தனை பங்களிப்புகளையும் வழங்கிக் கனிந்த பழமாக உதிர்ந்து பெப்ரவரி 17 ஆம் நாள் மறைந்தார்.

அமரர் இராசையா மாஸ்டரின் முகத்தைச் சில நிமிடங்கள் உற்றுப் பார்க்க முடிந்தால் பார்ப்பவர்களுக்கு ஒரு மொட்டவிழ்க்கும் புதுமலர் தெரியும், கள்ளமும் கபடமுமற்ற குழந்தையுள்ளம் தெரியும். நெஞ்சுறுதியும் துடிப்பும் தெரியும், கண்டிப்பும் எச்சரிக்கையுணர்வும் தெரியும், அன்பு தெரியும், கருணை தெரியும், தெளிந்த அறிவு நிலை பளிச்சிட்டுத் தெரியும். இவற்றைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபடும் ஒருவர் மனிதனுக் குரிய ஆளுமைப் பண்புக் கூறுகள் பலவற்றையும் அவற்றினூடாக ஒரு சான்றோரையும் கண்டிருப்பார் என்றால் மிகையாகாது.

அமரர் வ.இ. திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளரான இளமுருகனார், பண்டிதர் மகாலிங்கம், வீ. செல்வநாயகம் போன்றோரிடம் கற்றுத் தேறிய பின் 1942இல் கொழும்பில் 'வீரகேசரி'யில் சில காலம் ஒப்புநோக்காளராகவும் மருதானை சாஹிராக கல்லூரியில் சிறிது காலமும் சேவை செய்த பின் கொட்டாஞ்சேனை சாந்த பெனடிக்ற் கல்லூரியில் ஆசிரியராக இணைந்தார். 34 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார். சமூக உணர்வும், மனிதநேயமுமுள்ள ஆசிரியப் பரம்பரையொன்றினால் உருவாக்கப்பட்ட வ.இ.வும் மிகவும் பிரபலமாக விளங்கும் புத்திஜீவிகள் பரம்பரையொன்றினையே உருவாக்கி விட்டுச் சென்றார்.

எழுத்தாளர் வேல் அமுதனின் சிந்தனைக் கருவில் உருவாகிய தமிழ் கலைஞர் வட்டம் என்ற 'தகவம்' இராசையா மாஸ்டரின் ஆளுமையில் நிழல் தேடி வந்ததிலிருந்து அதனை அவர் அணைத்து, உருவாக்கி, வளர்த்து, பேணி, உயர்த்தி முதுகெலும்பாக நின்று நிறுத்திவைத்தார். இலக்கியவாதிகள் அதனால் ஊக்கம் பெற்றனர். பாரபட்சம் என்ற கதைக்கே இடமின்றி வீரகேசரி, தினகரன், சிரித்திரன், ஈழநாடு, மல்லிகை போன்ற ஏடுகளில் வெளியான தரமான சிறுதைகள் தகவம் அமைப்பின் பரிசுகளைப் பெற்றன. தகவம் பரிசுக் கதைகள் தொகுதி-1, தொகுதி-2 என நூலுருவமாக இவைவெளிவந்தன. சுருங்கக் கூறின் இராசையா மாஸ்டர் தகவத்தின் முதுகெலும்பாகவும், மூளையாகவும் விளங்கினார் எனலாம்.

பரிபூரணமும் பயனுமுள்ள வாழ்க்கையை 86 ஆண்டுகள் நடத்தி முடித்து மறைந்த இராசையா மாஸ்டர் அவர்களுக்குச் சிறிதும் பிடிக்காத ஒரு விடயம் வசனங்களில் எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள் இருப்பதுதான். நான் 'பகுத்தறிவு' மாத சஞ்சிகையை நடத்தி வந்தபோது சரி, 'அஞ்சல் ஒலி' தொழிற்சங்கப் பத்திரிகை, மற்றும் அரசியற் பத்திரிகையொன்றில் ஈடுபட்டிருந்தபோதுகளில் மட்டுமன்றிக் கொழும்பில் தொடங்கப்பட்ட சுடர்ஒளி தினசரியின் ஆசிரியர் பீடத்தில் சேவையாற்றிய போதும் இறுதியாக 'இலண்டன் தமிழ் உலகம்', மாத சஞ்சிகையின் பிரதான பொறுப்பில் இருந்தபோதும், அவ்வெளியீடுகளை ஊன்றி வாசித்து, குறிப்பிட்ட தவறுகளை சுட்டிக்காட்டி வந்தார். வெளியீடு ஒன்றை வ.இ. வாசித்து, முடித்துவிட்டாரென்றால் அது ஆய்வுகள் முன் வைப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்று விட்டது, என்று திருப்தியடையலாம். இங்கே கவனிக்கப் படவேண்டிய முக்கிய விடயம் அவர் திருத்தவேண்டியவற்றைத் திருத்துவதோடு நின்றுவிடவில்லை. கட்டுரைகள் சில அவரின் கொள்கைகளுக்கு உடன்பாடில்லாத நிலையிலும் அவற்றின் பின்புலத்தைப் பகைமைக் கண் ணோட்டத்தில் பார்க்காது அவற்றிலிருந்து பயனுள்ள வற்றை எடுத்துக் கொள்ளவும், தமிழ் மொழி நடையைத் திருத்தவும் தவறிவிடவில்லை.

ஈழத்தின் தமிழ்ப் பத்திரிகைத் துறை வரலாற்றின் முதல் முன்னோடியான ஈழகேசரியில் இளைஞர் பகுதியில் அமரர் இராசையா மாஸ்டர் எழுதி முத்திரை பதித்

திருந்தார். எழுபதுகளில் ஆங்கிலப் பத்திரிகை நிறுவனம் ஒன்று தமிழ்த் தினசரியை ஆரம்பித்தது. அதன் பெயரைத் தெரிவுசெய்து (ஈழமணி) பாராட்டைப் பெற்றவர் மாஸ்டர்.

34 ஆண்டுகள் தான் கற்பித்த சாந்த பெனடிக்ற் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம் இவரை அமைப்பாளராகக் கொண்டு வளர்ச்சியும் புகழும் பெற்றது.

இவரது சொந்த ஆக்கங்களில் நூலுருவில் வெளிப்பட்டவை சண்டியன் ஓநாய், சந்தனக் கிண்ணம், என்னும் சிறுவர் கவிதை நூல்களும் 'குறள்வழி வாழ்வு' என்ற கட்டுரை நூலுமாகும். 'குறள்வழி வாழ்வு' நூலில் வெளியான கட்டுரைகள் கனடாவில் அன்புநெறி' சஞ்சிகையில் தொடர்ச்சியாக வெளிவந்தவையாகும்.

கொழும்பில் இயங்கிவரும் விபவி கலாசார மையம் நடாத்திய இலக்கிய ஆய்வுகளில் அமரர் இராசையா பெரும்பங்கீடுபாட்டினைக் காட்டிவந்துள்ளார். இது தமிழ் இலக்கிய உலகினரால் பெரும் பாராட்டிற்குரியதாயுள்ளது.

1960ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் இரண்டு தசாப்த காலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்று இப்போது அழைக்கப்படும் இலங்கை வானொலியில் சிறுவர் நிகழ்ச்சிகளை நடாத்தி வந்திருந்தார். 'வானொலி மாமா'வாகவும் 'வானொலி அண்ணா'வாகவும் பல சமூகக் கருத்துகளை ஆய்வுசெய்து இளைஞர்கள் மனங்களில் விதைத்து வந்தார். பெரும் புகழும் ஈட்டினார். இவரது நாடகங்களில் பங்கு பற்றி பின் நாளில் பெரும் புகழ் பெற்றவர்கள் வரிசையில் திருவாளர்கள் பீ.எச். அப்துல் ஹமீத், போல் அன்ரனி, எம்.கே. ராகுலன், கே. சந்திரசேகரன், வேதநாயகம் ரெஜினோல்ட், வேதநாயகம் ரொபேட் ஆகியோர் உள்ளனர். தினக்குரல் வாரவெளியீட்டின் சிறுவர் பகுதியையும் சில வருடங்கள் அமரர் வ. இராசையா அலங்கரித்தார்.

ஒரு மனிதனை இன்னுமொரு மனிதன் கை கூப்பி வணங்குவதை இழிவு என்று பெரும்பாலும் கருதும் வழக்கம் உண்டு. ஆனால் இது தொடர்பாக வ.இ. எதிர்பார்க்கமுடியாத கருத்தைக் கொண்டிருந்தார். மனிதனை இன்னொரு மனிதன் வணங்குவதில்லை. மனிதனுள் அடங்கியிருக்கும் ஞானத்திற்கும், ஆளுமைக்குமே அந்த வணக்கம் என்பதே அவர் கருத்தாகும்.

வ.இ. விடமிருந்த நல்லியல்புகளைப் பின்வருமாறு கூறலாம். சமூக உணர்வு, மனிதநேயம், அன்பு, பாசம், தன்னடக்கம், கடும் நிதானம், கண்டிப்பான நடத்தை, அமைதி, பழகுவதில் இனிமை, தெளிந்த அறிவு, பேச்சில் மென்மை, எவரும் எனக்கு எதிரியில்லை என்றும் பார்வை, குறைந்தவர்களிடமும் கேட்டு அறியக் கூசாத தன்மை, உறுதியான மனநிலைப்பாடு, பல்துறை ஆற்றல், நேர்த்தியான நடத்தை, பிறரின் தனித்திறமைகளை இலகுவில் இனங்கண்டறிதல், திடீர்ச் செய்திகளுக்குப் பதற்றம் அடையாமை, உண்மை மீது உறுதியான நம்பிக்கை.

**வ.இ. வரவேற்றவை** - இலக்கிய ரசனை, விமர்சனம், படைப்பு, சுத்தம், நேர்த்தி பேணல், இலக்கணப் பிழையற்ற தமிழ் வசனம், உளவியல் ஆய்வு, விஞ்ஞான விளக்கம், நகைச்சுவை, கடும் உழைப்பு, நியாயமான எதனையும் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளல், முற்போக்குச் சிந்தனை, சமூகத்தில் அடித்தள மாற்றம், தனிநபருடன் பேசுவதாயின் விடயத்தையும், பயன்படுத்த வேண்டிய சொற்களையும், முன்கூட்டியே தயாரித்தல், அந்தஸ்துக்கும் உறவுகளுக்கும், அப்பால் திறமைகளை வரவேற்றல், வாழ்வியல் சடங்குகள் மதநம்பிக்கைகளுடன் தொடர்பு படாது தமிழ் முறைகளுக்குள் வரவேண்டும் என்ற கொள்கை.

**வ.இ. வெறுத்தவை** - திருமணத்துக்குச் சீதனம் நிபந்தனையாக்கப்படுவது, சாதி மத பாகுபாடு, சமூகச் சீர்கேடுகள் மதச் சடங்குகள், தன்னை உயர்திரு என்றோ பண்டிதர் என்றோ விளித்தல், மதுபாவனை, புகைத்தல், கடன் வாங்குதல், கொடுத்தல், ஆடம்பரம், பதவி ஆசை, பழையனவற்றை அப்படியே பின்பற்றுதல், மறுபிறவியில் நம்பிக்கை, தற்புகழ்ச்சி, வெற்றுச் சம்பிரதாயம், கொடுமைகள், அவற்றை அங்கீகரிப்பவர்கள், வசதி வாய்ப்புக்காகக் கொள்கைகளைக் கைவிடுதல், கிடைக்கும் வாய்ப்புகளை அப்படியே ஏற்றுக்கொள்ளுதல், சுயவிளம்பரம் நாடுதல், குளறுபடிகளில் சம்பந்தப்படுதல், ஏய்ப்பு நடத்தைகள், ஒருவர் இல்லாத சந்தர்ப்பத்தில் அவரை விமர்சித்தல், எவரையும் எதற்காகவும் சிபாரிசு செய்தல், சலுகை கேட்பது, நெருக்கமானவர், உறவினர் என்பதால் ஒவ்வாத கருத்துகளுக்கு இடங் கொடுப்பது. இவருக்கு இறுதிவரை இல்லாதிருந்தது எதிரிகள் தாம்.

## வ.இ. நடத்திய தொடர் போராட்டங்கள்

அரச பெயர்ப்பலகைகளில் சரியான தமிழ் இடம் பெற வைத்தல் - உ-ம் ; அரசமரக்கூட்டுத்தாபனம், என்றே முன்னர்க் காணப்பட்ட பெயர்ப்பலகை 'அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அரச பத்திரங்களில் 'சாதி' என்ற சொல்லை அகற்றியமை - உ-ம்: பிறப்பு, இறப்பு, விவாகப் பத்திரங்கள். சுமார் 30 அல்லது 40 வருடங்களுக்கு முன் பிறப்பு, இறப்பு, விவாகம் சான்றுப் பத்திரங்களில் 'சாதி' என்ற சொல் அச்சிடப்பட்டிருக்கும். அதிகாரிகளும் தொழில், இனம் என்று வியாக்கியானம் செய்யாமல் குறிப்பிட்டவரின் 'சாதி'யைக் குறிப்பிட்டு வந்தனர். இவர் இடைவிடாது மேற்கொண்ட முயற்சி இறுதியில் பயன் அளித்தது.

ஒன்றுபட்ட தலைமை தமிழர்களுக்கு அவசியம் - உ-ம்: 1960-65 தேர்தல்களின் போது, அவரால் அறியப்பட்டிருந்த முன்னோடி இளைஞர்களுக்குக் கொழும்பிலிருந்து அஞ்சல் அட்டைகள் வந்தன. 'தமிழர் ஒரே குரலில் பேசவேண்டும் இதற்கு இளைஞர்களாகிய நீங்கள் பாடுபட வேண்டும், என்று எழுதப் பட்டிருந்தது. இளைஞர்களும் அதனை ஏற்று நடந்தமை குறிப்பிடத்தக்கது.

மனிதனின் உளவியல்புகளை முடிந்தவரை கற்றுக்கொண்டும், அவற்றின் சீரமைவுகளைத் தனது மதிப்பீட்டுத் தளமாக வைத்துக் கொண்டும், மனிதனைத் தேடும் மனிதனாக எம் மத்தியில் தன்னை மறைத்துக் கொண்டும் வாழ்ந்து மறைந்த அமரர் வல்லிபுரம் இராசையா அவர்கள்,

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு*

என்பதை வள்ளுவரிலும் மேலாக வலியுறுத்திய சான்றோன். ❋

# இலண்டனில் இலட்சியத் தம்பதிகளின் திருமணம்



தாம் படித்த கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வரும் ஒரு இளைஞர் திரு. சுதாகரன், கொம்மாந்துறை கம்பர்மலை கல்லூரியின் வளர்ச்சிக்கு 7 ஆண்டுகளாகத் தொடர்ந்து 'பூபாள ராகங்கள்' என்ற நிகழ்ச்சியை நடத்தும் மூலதாரியாகச் செயற்பட்டு வெற்றி கண்டவர். அதேபோன்று தன் இல்லற வாழ்க்கைக்கும் ஒரு கலை உள்ளம் கொண்ட இலட்சிய நங்கையை அண்மையில் திருமணம் செய்து கொண்டார். தமிழ்ப் பண்பாடு மிகுந்த திருமணமாக அமைந்திருந்தது. பல அறிஞர் பெருமக்கள் தம்பதிகளை வாழ்த்தினார்கள்.

இலட்சியத் தம்பதிகளாக இல்லறம் புகுந்திருக்கும் திரு. மகாலிங்கம் சுதாகரன் செல்வி துஷித்தா ஆகியோரின் வாழ்க்கைப் பயணத்தோடு சமூகப் பணிகளையும் தொடர புதுமணத் தம்பதிகளைச் சுடரொளி வெளியீட்டுக் கழகம் வாழ்த்துகிறது.

# ஈழத் தமிழர்களின் உண்மைக் கதைகள் - கட்டுரைப் போட்டி

நோர்வேயிலிருந்து வெளிவருகின்ற 'சர்வதேசத் தமிழர்' இதழின் ஏற்பாட்டில் "ஈழத் தமிழர்களின் உண்மைக் கதைகள்" என்னும் தலைப்பில் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்திப் பரிசளிக்கவிருக்கின்றனர். அகதிகள், விதவையர், ஆதரவற்றவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு உள்ளவர்கள், சிறை சென்றவர்கள், புலம் பெயர்ந்தோர் முதலான ஈழத்தமிழர்கள் தம் அனுபவங்களை எழுதி அனுப்பலாம். சிறந்த படைப்புகளுக்குப் பரிசுத் தொகையும் உண்டு. ஏற்கக்கூடிய படைப்புகளை நூலாகப் பதிப்பிக்கும் திட்டமும் உள்ளது.

| | |
|---|---|
| முதல் பரிசு | 100 அமெரிக்க டாலர்கள் |
| 2 ஆம் பரிசு | 70 அமெரிக்க டாலர்கள் |
| 3 ஆம் பரிசு | 50 அமெரிக்க டாலர்கள் |
| 10 ஆறுதல் பரிசுகள் | தலா 30 அமெரிக்க டாலர்கள் |


வரலாற்று ஆவணமாகத் திகழவிருக்கின்ற இத் தொகுப்பு நூலில் உண்மைச் சம்பவங்களை மட்டும் உறுதிசெய்து அனுப்பி வையுங்கள். கட்டுரைகள் எம்மை அடைய இறுதிநாள் : 31-5-2007

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி :
N.S. Pirabu, Editor, Sarvadesa Tamilar,
Lymgu 3B, 3042, Dramman, No**
Email : shanmugapirabumalliah@hotmail.com
Tel/fax : 0047 32813416


# தந்தை செல்வா

## ஓர் அரசியல் வாழ்க்கைச் சரிதை

**நூல் ஆசிரியர் திரு. த. சபாரத்தினம்**




மொத்தம் 362 பக்கங்களைக் கொண்ட நூல் 20 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியல் செல்நெறியைத் தீர்மானித்த மிகச் சிலரான அரசியல் தலைவர்களும் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கு மறுதலிக்க முடியாத ஓரிடமுண்டு. இவரது முழுமையான அரசியல் ஆளுமையினை வெளிக்கொணரும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் எல்லோரும் படிக்கவேண்டிய நூல். இந்நூலினை அஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ள கீழுள்ள படிவத்தை நிரப்பி அனுப்புக.

Name :

Address :

Pin Code :

Telephone :

Email :

இப்படிவத்துடன் £ 7.50க்கு "Chuderoli Publication Society" என்ற பெயருக்குக் காசோலை/மணி ஆர்டரைக் கீழுள்ள முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

Chuderoli Publication Society
15 Rutland Road, London E7 8PQ
மேலதிக விவரங்களுக்கு 0208 552 6992

# வர்த்தகப் பெருமகன் வேலணை நா. வீரசிங்கம்

# தமிழ், கலைப் பணிகள்

தமது இளம் வயதில் கொண்டிருந்த தமிழ், கலை தொடர்பான ஆவல்களை வர்த்தகத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த காலத்திலும் மறவாது தமிழுணர்வோடு நிறைவு செய்துவந்தவர். இவர் வேலணை வீரசிங்கம் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுபவர். புன்சிரிப்புடன் எல்லோருடனும் அன்பாகப் பழகும் பண்பாளர்.

இவர் யாழ்ப்பாணம் வேலணையில் சோள வத்தை என்ற கிராமத்தில் 1938இல் நாகமணி ஆச்சி முத்து தம்பதியினரின் புத்திரராவார். இவர் கொழும்பில் ஆ.ச. சங்கரபிள்ளை வர்த்தக நிலையத்தில் பணியாற் றிய காலத்திலிருந்து இவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் ஒரு தொழில் அதிபராக வளரக்கூடிய வல்லமையும் திறமையும் அவரிடம் அன்றே காணப் பட்டது. அவ்வாறு ஒரு தொழில் அதிபராக வளர்ந்தார். அதன்மூலம் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு நற்பணிகள் பல செய்தார்.

'பிரவுன்சன் இன்டஸ்ரீஸ்' என்ற தொழில் நிறு வனத்தின் மூலம் இவரது பெயர் எங்கும் பரவத் தொடங்கியது. புத்தக வெளியீடுகள், ஒலிப்பேழை வெளியீடுகள் போன்ற தமிழ் விழாக்கள் பலவற்றிலும் பங்கு கொண்டு ஆதரவு வழங்கினார்.

இவர் தனித்தமிழ் இயக்கச்செயற்பாடுகளுட னும் ஈடுபாடு கொண்டவர். வேலணையாகிய தமது ஊரில் வாலிப சங்கம் அமைத்துத் திருவாளர்கள் எஸ்.பி.சாமி, பொன். தியாகராசா போன்றோரின் உதவியுடன் தமிழ் இலக்கிய விழாக்கள் பலவற்றை நிகழ்த்தியவர். 1964 ஆம் ஆண்டு 'தாய்நாடு' எனும் மாத சஞ்சிகை ஒன்றை வெளியிட்டு யாழ்தாசன் என்ற புனைபெயரில் பல ஆக்கங்களைத் தந்தவர். 1960-1961 களில் வெளிவந்த 'இனமுழக்கம்', 'தென்மராட்சி', 'பகுத்தறிவு' முதலிய வெளியீடுகளுக்குப் பொறுப் பாசிரியராக இருந்ததுடன் 'மறைமலை அடிகள் மலர்', 'அறிஞர் அண்ணா பிறந்தநாள் மலர்' முதலிய அறிஞர் களின் நினைவு மலர்களை வெளியிட்டு விழாக்கள் பல வற்றை நடாத்தியவர். 'முகிலன் கவிதைகள்' மண்டூர் அசோகாவின் 'கொன்றைப் பூக்கள்' அ.பொ. செல்லை யானின் 'காலத்தின் விதி' 'யார் கொலைகாரன்' ஜீவ நாவுக்கரசரின் 'சூழ்வினைச் சிலம்பு', திலைச்சிவன் கவிதைகள்' வரணபூரானின் 'இரைதேடும் பறவைகள்' ஓவியமாமணி வீ.கே.யின் நினைவு நூல் போன்ற வெளியீடுகளுக்குச் செய்த உதவி அழியாப் பெருமை யுடையது. 'யாழ்கலை அரங்கம்' கலைக் கழகத்தை அமைத்து அதன் செயலாளராகவிருந்து பணி செய்தவர். கலைஞரின் 'நச்சுக்கோப்பை', . நடமாடியின் 'சங்கிலி யன்', அ.பொ.செ.யின் 'ஒன்றே குலம்', வரணியூரானின் 'புளுகர் பொன்னையா', டாக்டர் கோவூரின் 'நம்பிக்கை' முதலிய நாடகங்களை மேடையேற்றினார். தொழிலதி பராகவிருந்து 25க்கு மேற்பட்ட உணவுத் தேவைக்கான உற்பத்திப் பொருள்களை உருவாக்கிப் பலருக்குத் தொழில் வாய்ப்பையும் ஏற்படுத்தியவர்.

தமிழகத்தில் பெரியார் நூற்றாண்டு மாநாட்டில் 'பெரியார் பெருந்தொண்டன்' என்ற பட்டமும் இலங்கைத் தேசிய இலக்கியப் பேரவையினால் 'புத்தகப் புரவலர்' என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். வாழ் வில் நடைமுறையில் தமிழர்களின் மொழி, கலை, கலாச் சார நிகழ்ச்சிகளுக்குப் பாரிய பங்களிப்புச் செய்து வரு பவர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பல பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருபவர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 30 வருடங்களுக்கு மேலாக ஆயுட் கால உறுப்பினராக இருந்ததோடு இச்சங்கத்தின் ஓம் பசைட் சபை என்று சொல்லப்படுகின்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையில் துணைத் தலைவராகவும் உள்ளார்.


நடைமுறைத் தமிழ் இயக்கத்தலைவர் திரு. க. இளையதம்பி அவர்களுடன் மிக நெருக்கமாக விருந்தவர். மறைமலையடிகளுக்கு விழா எடுப்பதில் இருவரும் தீவிரமாக ஈடுபட்டு வந்ததை நான் அறிவேன். இருவரும் வர்த்தகத் துறையிலுள்ளவர்கள். அமரர் திரு. க. இளையதம்பி அவர்கள் ராஜாகோப ரேசனில் மனேச்சராகப் பணியாற்றியவர். இருவரும் வர்த்தகத் துறையில் தம் தொழிலை மேற்கொண்டாலும் தமிழுணர்வு மிக்கவர்களாக வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள். அவ்வாறு அவர்கள் வாழ்வதற்கு அவர்கள் பிறந்த மண்வாசனையோடு அவர்களுக்குக் கிடைத்த வாழ்க்கைத் துணைவிகளின் பங்களிப்பும் மகத்தானதாக அமைந்துவிட்டது.

திரு. வீரசிங்கம் அவர்களும் நடைமுறைத் தமிழ் இயக்கத் தலைவர் திரு. இளையதம்பி அவர்களும் பல தமிழ் வெளியீடுகளிலும் விழாக்களிலும் ஈடுபட்டு வந்த வர்கள். எல்லாம் தமிழ் என்பதில் இருவரிடையேயும் ஒருமைப்பாடு இருந்தது. மறைந்த திரு. இளையதம்பி அவர்கள் தமிழ் இனத்திற்கு மகத்தான பல பணிகள் செய்தவர். வர்த்தகர்களாக வாழ்ந்த இருவரும் தமிழ் இனத்திற்கு ஆற்றிய பணிகள் பாராட்டுக்குரியதே.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் ஸ்தாபகர் களில் ஒருவர். இவர் அன்று நாவலருக்குச் சிலை வைக்கவேண்டுமென்று தீவிரமாக ஈடுபட்டிராவிடில் அப்பணி சிறப்பாக நடந்திராது. மகாதேவ சுவாமி அவர் களுக்குச் சிறப்பு மலர் வெளியிட்ட பெருமை திரு. இளையதம்பி அவர்களுக்கு உண்டு. தமிழ்ப் பேறிஞர் பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்களுடன் இணைந்து 'எல்லாம் தமிழ்' இயக்கத்தைத் தீவிரமாக நடத்தியவர். அதற்குப் பக்கபலமாக இருந்தவர் திரு. வீரசிங்கம் அவர்கள்.

*

# திருக்குறளில் கேள்வியால் ஒரு வேள்வி - நூல் வெளியீடு



அண்மையில் இலண்டன் பாரதீய வித்யபவன் மண்டபத்தில் நடைபெற்ற திருக்குறளில் கேள்வியால் ஒரு வேள்வி-நூல் வெளியீட்டு விழா ஓர் முக்கியத்துவும் வாய்ந்த நிகழ்வாக அமைந்திருந்தது.

பேராசிரியரும் ஆங்கில மொழியில் கவிதைகள் கட்டுரைகள் எழுதி வருபவருமான திரு. கோபன் மகாதேவா அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இவ் விழாவில் தமிழுலக புத்திஜீவிகளிடையே நன்கறியப் பெற்ற கலாநிதி ஜோன்மார் அவர்கள் நூலைப்பற்றிய தமது கருத்துகளை எடுத்துரைத்தார்.

பழம்பெரும் நூலான திருக்குறள் எவ்வாறு மக்களால் போற்றப்படுகிறதோ அவ்வாறே இம்முது பெருமறிஞர் ஜோன்மார் அவர்களும் தமிழ்மொழி இலக்கியம் சம்பந்தப்பட்ட துறைகளில் பெரிதும் மதிக்கப் படுபவர். திருமதி. தமிழரசி சிவபாதசுந்தரத்தின் திருக் குறளில் கேள்வியால் ஒரு வேள்வி என்ற நூலினை ஜோன்மார் அவர்கள் மிக விரிவாக ஆராய்ந்து ஆற்றிய உரையைக் கேட்டபொழுது உலகத் தமிழராய்ச்சி மகாநாட்டில் இவரும் இவரை ஒத்தவர்களும் ஆற்றிய உரைகளே ஞாபகத்திற்கு வந்தன. சங்க இலக்கியங் களிலும் விசேடமாகத் திருக்குறளிலும் ஈடுபாடு கொண்டுள்ள இவரும் இவர்தம் மனைவியாரும் நூலாசிரியையான தமிழரசியுடனும் அவரது குடும்பத் தினருடனும் நண்பர்களாக இருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது.

இலண்டனில் நடைபெறும் நூல் வெளியீட்டு விழாக்களில் பொதுவாகப் பேச்சாளர்கள் ஒருவரை யொருவர் மாறிப் புகழ்ந்து தள்ளுவதும், நூலாசிரியரை உலகத்தரத்தை எட்டியவராகக் கூறி உச்சிகுளிர வைப்ப தும், மிகவும் எரிச்சல் ஊட்டும் நிகழ்வாக அமையும். இவ்வகை நிகழ்வு தமிழரசியின் நூல் வெளியீட்டு விழாவில் இடம் பெறாதது மிகவும் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் சபையினருக்குத் தந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

திரு. கோபன் மகாதேவாவின் தலைமையுரை திருமதி. புனிதவதி பாலசுந்தரத்தின் வெளியீட்டுரை ஆகிய இரு உரைகளும் ஜோன்மார் அவர்களின் உரைக்கு ஈடுகொடுக்கும்படியாக சிறப்பாக அமைந்திருந்தன.


கேள்வி - பதில் மூலமாகத் திருக்குறளை இளம் பிராயத்தினருக்கு இந்நூல் மூலம் விளங்க வைத்துள்ள தமிழரசியின் முயற்சி பாராட்டத்தக்கது. இப்பாராட்டு தலில் இலண்டனில் வாழ்ந்த இன்னொரு மூதறிஞர் கலாநிதி மத்தூர் கிருஷ்ணமூர்த்தியும் இணைந்து நூலிற்கு வாழ்த்துரையினையும் வழங்கியுள்ளார்.

தமிழரசியின் மகளான ஆரணி சிவபாத சுந்தரத்தின் பரதநாட்டிய நிகழ்வு இளம் மாணவிகளின் திருக்குறள் சம்பந்தப்பட்ட நாடகம், நூல் வெளியீட்டு விழாவிற்கு வந்தோரை மிகவும் பரவசப்படுத்தின என்பதை இங்குக் குறிப்பிடல் வேண்டும்.

இந்நூலை உருவாக்குவதற்கு உதவியாக தமிழரசி யின் மகன் வாகீசன், ராஜாஜி, திரு. சே. மோகனசுந்தரம், திரு. திருமதி. முருகானந்தா, வின்சென்ட் சுந்தரராஜ் ஆகியோருடன் நூலை எழுதி முடிக்க சதா அன்புத் தொல்லை கொடுத்த பிரபல பாடகி திருமதி சிவசக்தி சிவனேசனும் இருந்துள்ளார்கள். இவர்கள் எல்லோ ருக்கும் பாராட்டுகள்.

திருக்குறளில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்த தம் தந்தையார் காலஞ்சென்ற பண்டிதர் இந்நூலைக் கடும் முயற்சி மூலம் உருவாக்கியிருக்கிறார். புலம் பெயர்ந்த இளைஞர்களுக்கு இந்நூல் மிகவும் பயனுள்ள தாக அமையுமென்பதில் சந்தேகமில்லை. ✱

-கோகுலன்



இலண்டனுக்கு வருகை தந்திருந்த இலங்கை முஸ்லிம் எழுத்தாளரும் பிரசுரகர்த்தாவுமான கலாபூஷணம் பீ.எம். புன்னியமீன், சுடரொளி அலுவலக நூலகத்தில்

# ஓர் எழுத்தாளனின் தடங்கல்

எழுத்துலகில் பிரவேசிப்பவர்கள் பல்வேறு சோதனைகளுக்கு ஆட்பட வேண்டியவர்கள் ஆவர். அவற்றையெல்லாம் எதிர்கொண்டு வருபவரே சிறந்த எழுத்தாளனாக முன்னேற முடியும்.

பெயர்பெற்ற எழுத்தாளர்களின் வரலாற்றைப் பார்த்தால் அவர்கள் எதிர்கொண்ட தடைகள் பல. ஆனாலும், எழுத்தை இலட்சியமாகக் கொண்டவன் தடைகளையும் பொருட்படுத்தி, பேனா முனையை ஆழமாக இழுத்துச் செல்வர். இத்தகைய எழுத்தாளர்களே தன்னம்பிக்கையுடன் எழுத்துப் பணியை முன்னெடுப்பர்.

ஓர் எழுத்தாளர் எழுதுவதற்கு எடுக்கும் நேரம், எழுதிய பின் அதைப் பிரசுரிக்க எடுக்கும் முயற்சி, அதுவும் வெற்றி பெறாவிடில் ஏற்படும் மனத்தாங்கல் இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு தொடர்ந்து எழுதுபவர் பிரசுரமாகத் தமது படைப்புகளை நூலாக்க எடுக்கும் முயற்சி அதனால் ஏற்படும் பணநெருக்கடி அதையும் தாண்டி நூலாக்கிய பின் அதை முறையாக வெளியீடு செய்வதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் எத்தனை? அவ்வாறு பல சிரமத்தின் மத்தியில் புலம்பெயர் எழுத்தாளர் ஒருவர் தமது நூலைப் புலம்பெயர் நாடு ஒன்றில் வெளியிட சகல ஏற்பாடும் செய்து அழைப்புகள் அனுப்பப்பட்ட பின்னர் அவர் உடல் நிலை பாதித்து அந்த விழாவை இரத்து செய்யும் போது எவ்வாறு அந்த எழுத்தாளன் பாதிக்கப்படுகின்றார் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் சிக்குண்ட கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா அவர்கள்.

டென்மார்க்கில் வாழ்ந்து வரும் இவர் ஒரு சிறந்த கவிஞர். பல கவிதைகள் படைத்தவர். அவர் அண்மையில் இலண்டனில் வெளியிடவிருந்த நூல் 'நெஞ்சத்து நெருப்பு' என்னும் கவிதை நூல். இந்நூலை இலண்டனில் வெளியிடுவதற்கான ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு சனவரி மாதத்தில் இலண்டன் வந்து இலக்கிய நண்பர்களைச் சந்தித்து வெளியீட்டு விழாவிற்கான அடித்தளமமைத்துச் சென்றார்.

டென்மார்க்கில் இருந்து கொண்டு கவிஞர் க. இராஜமனோகரன் மூலம் ஏப்பிரல் 28ஆம் திகதி இலண்டனில் வெளியீட்டு விழா நடத்துவதற்கு நிகழ்ச்சி நிரல் எல்லாம் தயாரித்து அனுப்பப்பட்ட பின்னர் இவரது மருத்துவர் இவரது உடலைப் பரிசோதித்த பின்னர் இதய அறுவை சிகிச்சை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்பதை அறிவித்தார். அதுவும் ஏப்பிரல் 20ஆம் திகதி எனவும் குறிப்பிட்டுவிட்டார்.

இந்த நிலையில் விரிவான ஏற்பாடு செய்த நூல் வெளியீட்டு விழாவை இரத்து செய்யவேண்டிய தடங்கல் இந்த எழுத்தாளனுக்கு ஏற்பட்டுவிட்டது.

அவரைத் தொலைபேசி வழி ஆறுதலாக 'எல்லாம் நன்மைக்கே. இதய அறுவைச் சிகிச்சை இன்று ஒரு சர்வ சாதாரண விடயம். ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை. சுகத்தின் பின்னர் நூல் வெளியீட்டு விழா மிகச்சிறப்பாக நடைபெறும்' என்று கூறினேன். அவர் நற்சுகத்துடன் அவர் திட்டமிட்ட கவிதை நூல் விழா சாலச்சிறப்புடன் நடத்த ஆண்டவன் திருவருள் பாலிப்பார் என்று வாழ்த்தினேன். அவர் வெளியிடவிருந்த நூலிலிருந்து ஒரு கவிதை வாசகர் சுவைப்பதற்காக இங்கே தரப்படுகின்றது.

*ஐ.தி. சம்பந்தன்*

## நெஞ்சத்து நெருப்பு

பூமிப் பந்தின் கீழ்ப்பரப்பில்
கடல் சூழ்ந்த நிலப்பரப்பில்
மாங்காய் வடிவத்தில்
ஒரு அழகான தேசம்
இனவாதத் தீயால் நீண்ட நாளாய்
எரிந்து கொண்டே இருக்கிறது.

தேசம் வாழ் மக்களோ
குருதிச் சேற்றில் குப்புற விழுந்து
மரண ஓலம் ஒலிக்கிறார்கள்
ஆனால் அரசியல் வாதிகளோ அதைத்
தேசிய கீதமாகக் கேட்டு மகிழ்ந்தபடி
தேசியக்கொடியை ஏலத்தில் விற்றுக்
கட்சிக் கொடிக்குச் சாயம் பூசுகின்றார்
பதவிக்காக முட்டி மோதுகின்றார்

அரசியல் வங்குரோதத்தனத்தால்
பதவியில் ஏற்பட்ட மாயவெறியால்
கொள்கைகளற்ற அரசியல் குண்டர்களால்
கூட்டுக்கொள்கை ஆக்கப்பட்ட இனவாதம்
அரசோச்சும் நாடாய் இத்தேசம் மாறி
வெற்றி வேண்டும் என்றால்
வெட்டிக் கொல்லு மனிதர்களை என்று
பிரகடனப்படுத்தப்பட்ட புத்தனின் தேசமாய்...

ஏய் அரசியல் வாதிகளே!
உங்களை நீங்கள் உணர்ந்துகொள்ளுங்கள்
உண்மை அரசியலைத் தெரிந்து கொள்ளுங்கள்
மீண்டும் மீண்டும்
துருப்பிடித்த துப்பாக்கியைத் தூசுதட்டச்செய்யாதீர்கள்
தொலைத்துவிட்ட தோட்டாக்களைத் தேடவைக்காதீர்கள்
எடுக்கப்பட்ட கண்ணிவெடிகளை
மீண்டும் புதைக்கச் செய்யாதீர்கள்
உங்களால் தொலைக்கப்பட்ட புத்தனின்
போதனைப் புத்தகத்தைத் தேடி எடுங்கள்
மதத்தால் வெறிகொண்டு அழிவைத் தேடும் அயல்
தேசங்களைப் புத்திக்குப் பாடமாய் எடுங்கள்...!
விக்ரோறியா நந்தவனத்துப் பூச்சிகளெல்லாம்
அழுகின்றனவாம்
தேன் குடிக்கும் வண்டுகளைக் காணவில்லை என்று
இனவாதவிசம் கலந்த பூக்களென்று
வெறுத்துவிட்டனவாம்
மனிதம் பிறந்தது வாழ்வதற்கு, சாதிப்பதற்கு...
நாயின் மடியில் அமைதியாய் படுத்துறங்குது பூனை

ஆறறிவு மனிதா நீ ஏன் இன்னும் ஐந்துக்குள் நிற்கின்றாய்!
உன் ஆறுக்கு வேலைகொடு
பகுத்தறிவைப் பயன்படுத்து!
இனவாத அரசியலை எரித்துவிடு!
புனிதப் பணியை அரசியலாக்கு
மனிதர்களை மனிதர்களாய் வாழவிடுங்கள்
இல்லை என்றால்! இல்லை என்றால்!
இல்லை என்றால்...

*

# தமிழையும் சைவத்தையும் வளர்த்த காரை நகர்!

செல்வி சுபாஜினி

*(சுவிஸ் நாட்டில் நடைபெற்ற காரை நலம்புரி சங்க ஆண்டுவிழா நிகழ்வில் காரைநகர் களபூமியைச் சேர்ந்த திரு. திருமதி சற்குணம் குடும்பத்தினரின் மகள் செல்வி சுபாஜினி ஆற்றிய உரை).*




எமது தாயக மண் காரைநகர். எமது தாய் தந்தையர் பிறந்த பெருமைக்குரிய ஊர் காரைநகர், அது எமது தாயகம். போர்ச்சூழலால் எமது தாய் தந்தையர் சுவிஸ் நாட்டுக்கு வந்ததால் நான் இந்த மண்ணில் பிறந்தாலும் எனது நாயகம் காரை நகரே. எனவே, அந்தப் பெருமைக்குரிய காரைநகர் பற்றி இவ் விழாவில் பேசுவதையிட்டுப் பெருமை அடைகின்றேன்.

தமிழீழத்தில் யாழ்ப்பாண நகருக்கு மேற்கே சிறப்புற்று விளங்கும் ஊர் காரைநகராகும். காரைநகர் நாலா பக்கமும் கடலால் சூழப்பட்ட அழகிய கிராமம். பொன்னாலைப் பாலம் என்ற நீண்டபாலம் காரை நகரையும் யாழ்ப்பாணத்தையும் இணைத்து நிற்கிறது.

காரைநகர் சைவமும் தமிழும் வளர்த்த புண்ணிய பூமியாகும். பல கல்விமான்களையும், அறிஞர்களையும், வர்த்தகர்களையும், விவசாயிகளையும், கடற்றொழிலாளர்களையும் உருவாக்கிய பூமி.

1928ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த மகாத்மா காந்தி அடிகள் காரைநகர் சைவமகாசபை அளித்த வரவேற்பில் கலந்து கொண்டதன் மூலம் அப்பெரியாரின் பாதம் காரைநகரில் பதிந்த பெருமையுண்டு.

பண்டிதர் அருளம்பரனார், கார்த்திகேயப் புலவர், வித்துவான் சபாரத்தினம், மூதறிஞர் சிவத்திரு. வைத்தீஸ்வரக் குருக்கள், கல்விமான் என். சபாரத்தினம் போன்ற பலர் காரைநகரில் வாழ்ந்து தமிழை வளர்த்தவர்கள். தமிழுக்குப் பெருமை தேடியவர்கள்.

கசுனாபீஷ், கோவளம் வெளிச்சவீடு, துறைமுகம், ஒல்லாந்தர் கோட்டை, ஈழத்துச் சிதம்பரம் ஆகியன காரைநகரை அழகு செய்கின்றன. மேலும் காரைநகரில் அமைந்துள்ள இரு கல்லூரிகள், 12 தமிழ்ப் பாடசாலைகள், 30க்கு மேற்பட்ட சிறிய, பெரிய ஆலயங்கள் கல்வியையும் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் அமைப்புகளாக விளங்குகின்றன.

இந்தக் கலாச்சாரப் பாரம்பரியத்தில் வளர்ந்த காரைமக்கள் எங்குச் சென்றாலும் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பவர்களாகவும் தமிழ்த் தேசியத்தை நேசிப்பவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

இன்று காரைநகர் ஒரு தனி அரசாங்க பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நீண்ட காலமாகக் காரைமக்கள் மேற்கொண்ட இம்முயற்சியை நிறைவேற்றிக்கொடுத்த பெருமை முன்னாள் இந்து சமய விவகார அமைச்சர் திரு. தியாகராச மகேஸ்வரன் அவர்களுக்கே உரியது.

42 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்த காரைநகரில் இன்று 7000க்கு மேற்பட்ட மக்களே வாழ்ந்து வருவதாக அறியக்கிடக்கிறது. தமிழர் தாயகம் சுதந்திர பூமியானதும் எல்லோரும் அங்கு மீண்டும் குடியேறிக் காரைநகரை வளப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட காரை நகரை அபிவிருத்தி செய்வதற்குப் புலம் பெயர்ந்து வாழும் காரை மக்களும் காரை அமைப்புகளும் முன்வர வேண்டும். பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் மறவாது வாழ்வோமாக. ✱


# தமிழிசைத் தேன்துளி திரு. தனிநாயக அடிகள்

'தமிழ் மக்கள் பண்டு இசைத்துறையில் அடைந்த முன்னேற்றத்தைப் பற்றி இதுகாறும் போதிய ஆராய்ச்சிகள் நடைபெறவில்லை. சிலப்பதிகாரமும் அதன் உரை நூல்களும் பெரிய இசைக் களஞ்சியம் போலப் பல உண்மைகளைத் தன்னகத்தே அடக்கிக் கொண்டுள்ளன. ஓர்பீயஸ் (Orpheus) எனும் கிரேக்கர் தம் யாழை வாசித்த பொழுது கொடிய விலங்குகளும் அவ்விசையில் ஈடுபட்டன என்றும், பாறைகளும் நெகிழ்ந்தன என்றும் மேல் நாட்டில் பல கதைகள் வழங்கி வருகின்றன. அங்குக் கூறும் கதைக்கு ஈடாக நம் இலக்கியத்தில் பல கதைகளைக் காட்டலாம். யானை இசைக்கு வணங்கும் என்பதைக் கலித்தொகையும், மதங்கொண்ட யானை உயிரை அழித்துத் திரிந்தக்கால், உதயணன் யாழ் வாசித்து அதனை அடக்கித் தனக்கு ஏவல் செய்யுமாறு செய்தான் என்று பெரும் கதையும், பாலை யாழின் இசையைக் கேட்ட கொடிய கள்வர், தம் கையிலுள்ள கொலைக் கருவிகளை எறிந்து விட்டுத் தம் தீய செயல்களை மறந்து இன்புற்றனர் என்பதைப் பொருநராற்றுப் படையில் காண்கின்றோம். தினைக் கொல்லையைக் காக்கும் ஒரு பெண் பரண் மேல் நின்று குறிஞ்சிப் பண்ணைப் பாடிக் கொண்டிருந்த போது, கதிரை உண்ண வந்த யானை அவ்விசையில் மயங்கிப் பசியை மறந்து உறங்கி நின்றதாக அகநானூறு கூறுகின்றது. கொடிய புலியால் தாக்குண்ட தம் கணவரின் புண்களை ஆற்றுவிக்கும் கொடிச்சியர், பாட்டுப் பாடி அவர்தம் துன்பத்தைக் குறைப்பாராம். இவையாவும் தமிழிசையின் மாண்பை உணர்த்துவனவாகும். தமிழிசையின் வல்லமைக்கும், தமிழரின் இசையீடுபாட்டிற்கும் இதனினும் வேறு சான்றும் வேண்டுமோ? தமிழ் நாட்டில் தமிழ் மாணவர் அனைவர்க்கும் கல்விக் கழகங்களில் தமிழிசை பயிற்றுவிக்கும் நாள் விரைவில் வரவேண்டும்' என்கிறார்.

# Degree in his hands at 18, now he eyes a master's

**By Ho Ar Li**

## 19 year old has offers from two UK universities to do master's finance



B. "RAKESH" Sundara balan is a teen in a hurry.

Last year, at age 18, he became the youngest person in Singa pore to pass the Asso- ciation of Chartered Certified Accountants (ACCA) exams, a globally recognised qualification for accountants.

He also bagged a degree in applied accounting from Britain's Oxford Brookes University before going on to ace Maths, Physics and Economics in his A levels.

The former Temasek Junior College (TJC) student even found time to captain the school cricket team.

The 19 year old, known to his friends as Rakesh, moved here from India with his parents when he was seven. They returned to India in 1999.

He did his O levels in the Seychelles before coming back to Singapore with his parents the next year.

Instead of enrolling for an A-level course, he did a full-time advancced diploma in accounting at the Singapore Accountancy Academy (SAA).

After obtaining his diploma, he signed up for the Acca programme, which gave him the option of pursuing a degree from Oxford Brookes at the same time.

He did not need A levels, but he applied for a place at TJC anyway.

"I did it out of interest. I like subjects like physics and maths," he said.

Over the past two years, he had hardly any free time. On weekdays, he went to school at 7 a.m. finished his clases by 4 p.m. then rushed to the SAA's Alijuned premises for classes that sometimes stretched till midnight.

His weekends were often taken up cricket training at the National Stadium.

The longest holiday he had was the two weeks last June, he said, but even then he spent most of it studying for college exams.

"If you have free time, you might have a lot of choices and not know what to do with it. Because I had no time, all I could do was study," he said.

The teenagar, now interning at KPMG, one of the big four audit firms, could have put his ACCA exams on hold, but he considered them his priority.

The exams, which consisted of 14 papers on topics like business taxation and financial reporting, took him 1 1/2 years to finish.

It did have an impact on his college studies though, and he found himself scoring Cs and Ds for exams.

But having completed a degree and the ACCA last June, Rakesh went all out for the A level exams.


"For me, everything was in the last five months. I was able to catch up as it was easier to remember things I just learnt," he said.

Now, depending on whether he gets determent for his national service, he is eyding a master's degree in finance and already has offers from two British universities.

His father, Mr. Somasundaram Bala sundaram, 51, is a Singapore citizen and runs an import and export business. His mother Jayalakshmi helps with the business.

TJC principal Loke-Yeo Teck Young said Rakesh could have slacked off after getting his degree, but continued his studies with "focus and drive. He has once again made his parents proud," she said. ✱

## கலைத்துறை வாழ்க்கையில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்கிறார் திரு. சி. துரைராசா ஜே.பி. அவர்கள்



போலிகண்டி வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சி. துரைராசா அவர்கள் தற்போது திருக்கோணமலையில் வசித்து வருகின்றார். சுமார் 50 ஆண்டுகளாகப் பல்வேறு துறைகளில் எழுத்தாளனாக, நடிகனாக, கவிஞனாக, பொது அமைப்புகளில் சமூகத் தொண்டனாகக் கால் பதித்துக் கொண்ட திரு. துரைராசா அவர்கள் கலைத்துறையில் இவ்வாண்டு 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறார். அவரது கலைத்துறைப் பணிகள் மேன்மேலும் வளர சுடரொளி'யின் சார்பில் வாழ்த்துகிறோம்.

# தமிழ் ஓலைகள் 2007 வெளிவந்துவிட்டது

பிரித்தானியிலிருந்து வெளியாகும் தமிழ் ஓலைகள் 14 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. வெளியீட்டாளர்கள் அறிவித்தபடி தமிழ்ஓலைகள் 14 ஆவது வெளியீடு தமிழ்ப் புத்தாண்டு அன்று இலண டனில் எல்லா இடங்களிலும் விநியோகிக்கப்பட்டன. தமிழ்ப் புதுவருடத் தினத்தையொட்டி ஆலயங்கள் வர்த்தக நிலையங்கள், பொது இடங்களுக்குச் செல்லும் மக்கள் தங்கள் கரங்களில் தமிழ்த் தகவல் ஓலை களைப் பெற்றுச்செல்லும் வாய்ப்பினைப் பெற்றிருந் தனர். இது இவர்களுக்குப் புதுவருடப் பரிசாகவும் அமைந்துவிட்டது.

பெருந்தொகையான செலவில் தயாரிக்கப் படும் தமிழ் ஓலைகள் 670 பக்கங்களைக் கொண்ட தகவல் ஏடாகும். இப்பெறுமதிவாய்ந்த நூலை 25,000 க்கு மேல் அச்சிட்டு மக்களுக்கு இலவசமாக விநியோ கிப்பது இலகுவான காரியமல்ல. தமிழ் வர்த்தகப் பெருமக்கள் அவர்களது நிறுவனங்களின் விளம்பரங் களை வழங்கி ஆதரவளிப்பதனாலேயே வெளியீட் டாளர்கள் இப்பணியைத் திறம்படச் செய்கிறார்கள். தமிழ் ஓலைகளின் வெற்றிக்குத் தமிழ் வர்த்தகப் பெரு மக்களின் பங்களிப்பும் காத்திரமானது. அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

உள்ளே நுழைந்தால் வர்த்தக நிலையங்கள், ஆலயங்கள், சட்டத்தரணி நிறுவனங்கள், பொது அமைப்புகள், ஊடகங்கள், தமிழ்ப் பாடசாலைகள், கலைஞர்கள் ஆகிய பல்வேறு தகவல்களுடன் தமிழ் ஓலைகள் 14ஆவது வெளியீடு வெளிவந்திருக்கிறது.

ஆண்டுதோறும் பல்வேறு பரிமாண வளர்ச்சி யுடன் வெளிவரும் தமிழ் ஓலைகள் அடுத்துவரவுள்ள 15ஆவது வெளியீடு மேலும் பல்வேறு தகவல் களுடன் வெளிவரவுள்ளதாக அறிவித்துள்ளனர். அதில் இடம்பெற வேண்டிய தகவல்களை அனுப்பி வைக்குமாறு வெளியீட்டாளர் கோரியுள்ளனர்.

தொடர்புகளுக்கு : Tamil Pages Ltd. 52, Kingsley Road, Wimbledon, London SW19 8 HF

அன்னை ஜெயலட்சுமி அம்மாள் கல்வி அறக்கட்டளை

# உலக மகளிர் தின விழா!

## பொன்பாலசுந்தரம் பங்கேற்பு!

உலக மகளிர் தின விழா 11-3-07 அன்று சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் அன்னை ஜெயலட்சுமி அம்மாள் கல்வி அறக்கட்டளைத் தலைவர் அரிமா வைர சேகர் ஏற்பாட்டில் நடை பெற்றது. தமிழ் ஈழத்தின் பிரபல எழுத்தாளரும், இலண்டன் சுடரொளி இதழின் சிரேட்ட ஆலோ சகரும் தற்போது இலண்டனில் வசித்து வருபவரு மான பொன் பாலசுந்தரம் சிறப்பு அழைப்பாளராக இவ்விழாவில் பங்கேற்று உரையாற்றினார்.

சென்னை மாநகராட்சியின் மேயர் மா. சுப்பிர மணியன் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார். மேனாள் மேலவை உறுப்பினர் புலவர் அறிவுடை நம்பி முன்னிலையில், அரிமா வைரசேகர் தலைமையில் மெய்யம்மை முருகப்பன், முனைவர் பர்வீன் சுல்தானா, முனைவர் ஆதிலட்சுமி குருமூர்த்தி, முனைவர் ரேவதி ராபர்ட், லேடீஸ் ஸ்பெஷல் ஆசிரியர் கிரிஜா ராகவன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். சிறப்பு விருந்தினர்களாகத் திரைப்பட இயக்குநர் செல்வி புவனா, திரைப்பட நடிகர் பரத் ஆகியோர் பங்கேற்றனர்.

கவிமாமணி சீத்தா அன்புச் செல்வி தலைமை யேற்க கவிஞர் இராஜேஸ்வரி கல்லாடன் முன்னிலை யில் 'பெண்ணே நீ!' எனும் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. கண்கவர் கலை நிகழ்ச்சிகளுடன் விழா நிறைவுற்றது.




# அமரர் கவிஞர் அதலை இராமன் நினைவு போற்றும் விழா

உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் அமரர் கவிஞர் அதலை இராமன் நினைவைப் போற்றும் விழா நடைபெற்றது. செயலர் கவிஞர் இரா. இரவி வர வேற்றார். பேராசிரியர் எ.எம். ஜேம்ஸ் தலைமை வகித்தார். தென்மண்டல அமைப்பாளர் திருச்சி சந்தர், காவல்துறைத் துணை கண்காணிப்பாளர் பேனா மனோ கரன் முன்னிலை உரையாற்றினார்கள். சிவயோகம் ஆசிரியர் இலண்டன் பொன் பாலசுந்தரம் கவிஞர் அதலை இராமன் படத்திற்கு மாலை அணிவித்து அவரது கவித்திறமை பற்றிச் சிறப்புரையாற்றினார். கவிஞர்கள் மூரா, ஓரி ஆனந்தன், இரா. கல்யாண சுந்தரம், சமுத்திர மணாளன், இரா. கணேசன், முத்துக் கிருஷ்ணன், ஜோதி மகாலிங்கம், கலைத் தாமரை, மன்னர் இராமசாமி ஆகியோர் கவிஞர் அதலை இராம னின் நற்பண்புகளையும் மரபுக் கவித்திறமையையும் பாராட்டிப் பேசினார்கள். கவிஞரின் குடும்பத்தினர் கௌரவிக்கப்பட்டனர். விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் திக்கரை முருகன் கோவில் சார்பில் சிறந்த மதிய உணவு வழங்கினார்கள். கலாம் கே.ஆர். சுப்பிரமணியம் நன்றி கூறினார். கனகமகால் கார்த்தி கேயன் தன்னம்பிக்கை வாசகர் வட்டத் தலைவர், இராஜ ராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ் சினிமாவின் வரலாறு

வி. செல்வராசு, வுட்சேர்ச், கென்ற்

*திரு. வில்லியம் செல்வராசா தென் தமிழீழம் கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது புலம்பெயர்ந்து இலண்டனில் வசிக்கின்றார். அவர் மிக இளம் வயதிலிருந்து சினிமாத் துறையில் ஈடுபாடு கொண்டவர். வயது முதிர்ந்த நிலையிலும் சினிமாப் பாடல்களைக் கச்சிதமாகப் பாடுகின்றார். இலண்டன் தீபம் தொலைக்காட்சியில் இவர் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. சினிமா வரலாற்றை இவர் தனது பாணியில் தருகின்றார். - ஆசிரியர்*



என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து என் ஞாபகத்தில் பதிந்திருந்த வற்றை எழுதுகிறேன். பழைய சினிமா புத்தகங்கள் எதுவும் என்னிடம் இல்லை. எனக்கு 6 வயதாய் இருக்கும்போதே சினிமாவில் நாட்டம் வந்தது. காரணம் அக்காலத்தில் டி.வி, ரேடியோ எதுவும் இல்லை. ஓரளவு பாத் தெரிந்த சிறுவர்களே அப்போது வாழ்ந்த தமிழருக்குப் பொழுது போக்குக்காகப் பாடல்கள் படிக்க வேண்டும். சில பணக்கார வீடுகளில் கிராமபோன் (Gramaphone) H.M.V., Columbia இருக்கும். திரு. டி.எஸ். கந்தையா (தலைமை ஆசிரியர்) Colombia Gramaphone வாங்கித் தந்தார். 1939இல் இதை வீட்டுக்குக் கொண்டு வந்தபோது எல்லா records-ம் சங்கீதம் (தரன்னன்னா) என்று தொடங்கும் பாடல்கள் தான் வந்தன. அக்கால பாகவதர்கள் கிட்டப்பா, முசிறி சுப்பிரமணிய ஐயர், பாபநாசம் சிவன் பின்னர் டி.கே. பட்டம்மாள், எம்.எஸ். சுப்புலெட்சுமி, யு.ஆர். ஜீவ ரத்தினம் ஹொன்னப்பா பாகவதர், அதன்பின்னர்த் தண்டபாணி தேசிகர், எம்.கே. தியாகராஜ பாகவதர், பி.யு. சின்னப்பா போன்றோரின் பாடல்கள் recordஇல் வந்தன. சினிமா படங்கள் சத்தம் இல்லாதவை (ஊமை) முதலில் வந்தன. (ஆங்கிலப் படங்களான சார்லி சாப்ளின் படங்கள் உட்பட), இந்தியாவில் முதன்முதல் எல்லிஸ் ஆர். டங்கன் என்னும் பிரித்தானியர் தமிழ்ப் படங்கள் இயக்க ஆரம் பித்தார். அவரின் உதவியாளராகப் பயின்ற கே. சுப்பிர மணியம் ஆரம்ப காலத்தில் தமிழ்ப் படங்களின் இயக்குநராக இருந்தார். அக்காலத்தில் பாடல் இயற்று வது, இசை அமைப்பது, பாடுவது எல்லாமே ஒருவராக இருந்து ஆரம்பித்தவர் பாபநாசம் சிவன் என்பவரா வார். அக்காலத்தில் படத்தில் நடிப்பவர்களே பாடவும் வேண்டும். பாபநாசம் சிவன் நடித்த ''பக்த குசேலா'' குபேர குசேலா ஆகிய இரு படங்களும் நான் சிறு வயதில் பார்த்தவை. அப்போது தியேட்டர்கள் கிடை யாது. எனது சொந்த ஊரான கல்முனைக்குக் கூடாரங் கள் போட்டுத் தொடர்ந்து 3 மாதம் காட்டுவார்கள்.

தமிழ் சினிமா கதைகளும் அக்காலத் தமிழ் இலக்கிய கதைகளான மனோன்மணி, சகுந்தலை, சாவித்திரி-சத்தியவான், கிருஷ்ண லீலா, ராமாயணம், மஹா பாரதம், நந்தனார், சிந்தாமணி, கண்ணகி, சேர சோழ பாண்டிய மன்னரின் கதைகள், ஜோன் கவாஸ்-மின்ராடியா நடித்த வனராஜ கார்சான் (தமிழில் டப் செய்தது). சதி-லீலாவதி போன்ற படங்கள்தாம் ஆரம் பத்தில் 1931இல் வந்தன. அக்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்த நாடகச் சபாக்களில் நடித்துக் கொண்டிருந்தவர் களையே படத்திலும் நடிக்கத் தருணம் கொடுத்தார்கள். ஒரு வருடத்துக்கு ஒன்று அல்லது இரண்டு தமிழ்ப் படங்கள்தாம் வெளியாகும். எம்.கே.டி. பாகவதர், பி.யு. சின்னப்பா, நாகையா, (ஏன் சிவாஜி கணேசன் கூட), பாலையா, நம்பியார், எம்.ஜி.ஆர்., எம்.என். ராஜம், ஜி.என். பாலசுப்பிரமணியம், எம்.எஸ். சுப்புலெட்சுமி இப்படிப் பலர் அக்காலத்தில் நாடகம் நடத்தும் டி.கே.எஸ். சகோதரர், என்.எஸ்.கே. சபா இப்படியான நாடக மன்றங்களில் நடித்துச் சினிமாவில் சேர்ந்தவர்கள் தாம். சமூகக் கதைகளான நாம் இருவர், வாழ்க்கை, சம்சாரம், ஜீவித நௌகா, எஸ்.எஸ். கொக்கோ நடித்த மின்னல்கொடி, டி.கே. ருக்கமணி நடித்த வீரமணி, திவான் பகதூர், பொன்முடி, ராஜகுமாரி, கணவனே கண்கண்ட தெய்வம், பெண் இப்படிப் பல. எம்.ஜி.ஆர் சிவாஜிகணேசன் காலத்தில் பல படங்கள் வரத் தொடங் கின. ''பராசக்தி' உட்பட. அக்காலத்தில் எம்.கே.டி. பாக வதர், பி.யு. சின்னப்பா, டி.ஆர். மஹாலிங்கம், எம்.எஸ். சுப்புலெட்சுமி, என்.சி. வசந்த கோகிலம், யு.ஆர். ஜீவரெத்தினம், கே.பி. சுந்தராம்பாள் இவர்கள் நடித்துப் பாடினார்கள். இரவல் குரல் முறை வந்த பின் திருச்சி, லோகநாதன், கண்டசாலா, ஏ.எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், பி.பீ. ஸ்ரீனிவாசன், கே.ஜே. ஜேசுதாஸ், ஜிக்கி, பி. லீலா, ஜமுனாராணி, சுசீலா, எல்.ஆர். ஈஸ்வரி, எஸ். ஜானகி இப்படிப் பல சிறந்த பாடகர் தோன்றினார்கள். இப்போது வாரத்துக்கு 100 படங்கள் வருவதால் கலை, மலை ஏறிப் பணம் உழைப்பதுதான் முக்கியமாக இருப்பதால் இக்காலச் சந்ததி தமிழரின் கலைமறந்து, கலாச்சாரம் மறந்து 'டப்பா' கலாச்சாரத்தில் இன்பம் கண்டு ரசிக்கிறார்கள் போல் தெரிகிறது. சமுத்திரம் போல் விரிவான தலையங்கம் ஆகையால் அடுத்த இதழில் சந்திப்போம். *

(தொடரும்)

# மதுரைக்குப் பெருமை சேர்க்கும் கவிஞர் இரா. இரவி

மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை சுற்றுலாத் துறையில் பணிபுரிந்து வருபவர் கவிஞர் இரா. இரவி. இவர் தமிழ் ஹைக்கூ கவிதைக்கான முதல் இணையத் தளத்தை www.kavimalar.com என்ற பெயரில் தொடங்கி உள்ளார். இவரது 6 (ஆறு) கவிதை நூல்களின் ஹைக்கூ கவிதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட ஹைக்கூ கவிதைகளும் மதுரை இலக்கிய விழா புகைப் படங்களும் தெரியும் ஒப்பற்ற இணையத்தளமாகத் திகழ்கின்றது. இந்த இணையத்தின் இடது ஓரத்தில் (CQ Counter) உள்ளது. அதில் இணையத்தைப் பார்த்தவர்கள் பற்றிய புள்ளி விவரம் உள்ளது. 1,10,000 பேருக்கு மேல் பார்த்து உள்ளனர். இதில் பிற தமிழ் இணைய தளங்களின் 300 முகவரிகள் உள்ளன. விருந்தினர் புத்தகம் (Guest Book) உள்ளது. கவிமலர் டாட்காம் இணையத் தளத்தை கண்டு களித்தவர்கள் உடனடியாகத் தங்களின் கருத்துகளைப் பதிவு செய்யலாம். அவர்களது இணையத் தளத்திற்கும் இலவச இணைப்பு உள்ளது. நடிகர் சிவக்குமார் அவர்களின் மகன் நடிகர் சூர்யா விருந்தினர் புத்தகத்தில் பாராட்டிக் கருத்தினைப் பதிவு செய்துள்ளார். அவரது இணையத் தளத்திற்கும் இலவச இணைப்பு உள்ளது. பிரபல தமிழ் இணையங்கள் அனைத்திலும் கவிமலர் டாட்காம் இணையத்தளத்திற்கு இணைப்புத் தந்து உள்ளனர். உலக அளவில் பல நாடு களில் இருந்து தமிழர்கள் பார்த்துப் பாராட்டி உள்ளனர். ஹைக்கூ கவிதைகள் மட்டுமன்றிக் கவியரங்கக் கவிதை களையும் இணையத்தளத்தில் வைத்துள்ளார். குடியரசு தலைவர் அப்துல் கலாம் பற்றியும், அக்கினிச் சிறகுகள் நூல் பற்றிய விமர்சனக் கவிதையும், கவியரசு கண்ண தாசன் பற்றியும் பல்வேறு கவிதைகள் உள்ளன. கவிஞர் இரா. இரவியின் ஹைக்கூ கவிதைகள் திருச்சி. பாரதி தாசன் பல்கலைக் கழகத்தின் பாடநூலில் இடம் பெற்று உள்ளது. விஞ்ஞானி நெல்லை சு. முத்து பத்தாயிரம் தமிழ் ஹைக்கூ நூலில் நூற்றிற்கு மேலான ஹைக்கூ மேற்கோள் காட்டி உள்ளார். கோடைப் பண்பலை வானொலியின் நேரடி ஒலிபரப்பில் 23-3-2006 அன்று பங்குபெற்று ஹைக்கூ கவிதை பற்றியும் இணையத் தளம் பற்றியும் உரையாடி உள்ளார். இவரது ஹைக்கூ கவிதைகளைச் சென்னை இலயோலா கல்லூரி மாணவர் திரு. ராமக்குமார் ஆய்வு செய்து ஆய்வேடு சமர்ப்பித்துள்ளார். மதுரை காமராசர் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் ஆய்வு செய்து வருகின்றனர். 29-6-2005 அன்று குடியரசு தலைவர் மேதகு அப்துல் கலாம் அவர்களை நேரடியாகத் திருச்சியில் சந்தித்து அவரது பாராட்டையும் பெற்றுள்ளார். கவிஞர் இரா. இரவி அவர்களின் ஹைக்கூ கவிதைகளை ஹிந்தியிலும் இணைய தளத்தில் காணலாம். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரைக்கு www.Kavimalar.com இணையத் தளத்தின் மூலம் பெருமை சேர்த்து வருகிறார்.


Shahzads Solicitors & Estate Agents

271, Hoe Street, Walthamstow, London E17 9PT

**Former THANA & CO Solicitors**

முன்னைய Thana & Co Solicitors சட்ட நிறுவனம் தற்போது Shahzads Solicitors & Estate Agents என்ற நிறுவனத்துடன் இணைந்து மேற்கண்ட முகவரியில் இயங்குகிறது

Property Sales & Conveyancing under One Roof

- அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள்
- மேல் முறையீடுகள்
- சகலவிதமான விசா நீட்டிப்பு விண்ணப்பங்கள்
- 10/14 வருட நீண்ட கால விண்ணப்பங்கள்

Contact Mr. Thana

0208521·4686 / 07976660635



RAGU TRAVELS

A worldwide travel Agents

for reliable, friendly and efficient service of competitive rates



- Air Tickets
- Travel Insurance
- Transportation
- Visa arrangement for India
- Ragu Estate Agents
- Property Management
- Lettings and Sales,
- Mortgages

CALL RAGU

0208 586 2323 / 0208 471 9100

258 High Street North, Manor Park, E12 6SB

Tel: 0208 471 4454; Fax : 0208 586 2489

# பாரதப் போரில் தமிழரின் பங்கு

வே. விவேகானந்தன், மலேசியா

எங்கோ இடிமுழக்கம் கேட்கிறது என்று வாளா விருப்பது தமிழர்களின் மரபு அன்று.

எங்கோ குருச்சேத்திரத்தில் போர் நடக்கிறது என்று தமிழ் மன்னர்கள் வாளாவிருந்துவிடவில்லை. போர்க்களம் புகுந்து இரு திறத்தார்க்கும் உணவு அளித்தான் சேர மன்னன் என்கிறது சங்க இலக்கியம். ஆனால், வில்லிபுத்தூராரின் பாரதமோ, நீதியின் பக்கம் அதாவது பாண்டவர்களின் பக்கம் நின்று போரிட்டனர் தமிழ் மன்னர்கள் என்கிறது.

பாண்டவர்கள் பக்கம் நின்று போர் செய்த சோழ மன்னன், மகத நாட்டு அரசன் சாதேவனைக் கொன்றான். சித்திரவாகன பாண்டியன் அசுவத்தாமனோடு போர் செய்து, கடைசியில் அசுவத்தாமனால் கொல்லப் படுகிறான். அப்போது அசுவத்தாமனின் எதிரில் சோழன் தோன்றி அவனை இகழ்ந்துரைத்து அவனுடன் போரிடுகிறான். சோழனின் வேலால் அசுவத்தாமன் கலங்கி விழ, மற்ற மன்னர்கள் பலர் வந்து சோழனுடன் போரிடுகின்றனர். அவர்களில் பலரையும் சோழன் வீழ்த்திவிட, சோழனின் வீரத்தை அசுவத்தாமனும் சகுனியும் புகழ்ந்தவாறு அங்கிருந்து ஓடிவிடுகின்றனர் என்று பதினேழாம் போர்ச் சருக்கத்தில் சுமார் முப்பது கவிகளில் வருணிக்கிறார் நூலாசிரியர்.

எனினும் தோற்றோடிய அசுவத்தாமன் சிவபெருமானைத் தியானித்து சிவனிடம் ஆயுதம் பெற்று இரவில் பாசறைக்குள் புகுந்து சோழனையும் அவனுடைய சேனைகளையும் அழித்துவிடுகிறான் என்று பதினெட்டாம் போர்ச் சருக்கம் கூறுகிறது.

பாண்டிய, சோழ மன்னர்களைப் பெருமைப் படுத்துவதற்காக அவர்கள் பாரதப் போரில் கலந்து கொண்டதாகக் கூறும் வில்லிபுத்தூரார், அவர்கள் கடைசி வரை போர் செய்து கௌரவப் படையினரைக் கொன்று பாண்டவர்களின் வெற்றிக்குத் துணை நின்றார்கள் என்று கூறுவதற்குத் துணியவில்லை. பாரதக் கதையின் நாயகர்களான வடபுலத்து மன்னர்களுக்கு அது இழுக்காகும் எனக் கருதினார் போலும்!

பக்திக்கு வரம்பாகிய பார்த்தன் அதாவது அருச்சுனன் பல தீர்த்தங்களில் ஆடி, தென்திசை நோக்கி வந்து திருவேங்கடத்தை அடைந்து பின்னர்க் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருக்கோவிலூர், திருவெண்ணெய் நல்லூர், திருவதிகை, சிதம்பரம், திருவரங்கம் முதலிய தலங்களில் வழிபாடு செய்து மதுரை சேர்ந்தான் என்று ஆதிபருவம் தீர்த்த யாத்திரைச் சருக்கத்தில் காண்கிறோம். மதுரையில் பாண்டிய மன்னன் சித்திரவாகனைச் சந்தித்துப் பின்னர் அம்மன்னன் மகள் சித்திராங்கதையைச் சோலையில் தனியாகக் கண்டு காதல் வயப்பட்டு அவளைக் காந்தருவ மணம் புரிந்தான் அருச்சுனன் என்கிறார் வில்லிபுத்தூரார்.

ஆனால், பாரதப் போரில் தமிழ் மன்னர்கள் பங்கு பற்றியதாகவோ, அருச்சுனன் பாண்டிய மகளை மணந்ததாகவோ வேறு தமிழ் இலக்கியங்களில் காண முடியவில்லை.

எனினும், வில்லிபாரதத்திற்குச் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு, கி.பி 1115 ஆம் ஆண்டு வாக்கில் இயற்றப்பட்ட கலிங்கத்துப் பரணியில், பாரதப் போருக்கு ஒரு சோழ மன்னன் இறுதிவரை உதவி புரிந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

''இராச பாரம்பரியம்'' என்னும் ''திருமுடிவு அடைவு'' படலத்தில் சோழ அரசர்களின் பரம்பரை வரலாறு கூறப்படுகிறது. அதில் ''தாங்கள் பாரதம் முடிப்பளவும் நின்று தருமன், தன் கடற்படை தனக்கு உதவி செய்த அவனும்'' என்னும் வரிகள் வருகின்றன. ''பாண்டவர்கள் பாரதப் போர் முடிக்கும் வரையிலும், தருமனின் கடல் போன்ற பெரிய படைக்கு உதவி செய்தான் ஒரு சோழன்'' என்பது பொருள்.

**''தூங்கு மூன்று எயில் எறிந்த அவனும் திரள்மணிச்
சுடர் விமானமது வான்மிசை ஊர்ந்த அவனும்
தாங்கள் பாரதம் முடிப்பளவும் நின்று தருமன்
தன்கடற்படை தனக்கு உதவி செய்த அவனும்''**

(கலிங்கத்துப்பரணி இராசபாரம்பரியம் : 17)

சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியின் திருமுடி அடைவு என்னும் படலத்தின் பல பாடல்களைப் பிற்காலத்தில் யாரோ ஒருவர் இடைச்செருகலாகச் சேர்த்து, அதன் தலைப்பையும் இராசபாரம்பரியம் என்று மாற்றியிருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. ஏனென்றால், ''அப்ரமேயம் எனும் மெய்ப்ரியகதாக உடனே'' என்பன போன்ற சொற்றொடர்கள் வருகின்றன. இதுபோன்ற திரிபடையாத வடமொழிச் சொல்லாட்சியைக் கலிங்கத்துப் பரணியில் வேறெங்கும் காண முடியவில்லை. கவிதை நடையும் மாறுபடுகின்றது.

*''மழலைத் திருமொழியில் சில வடுகும் சில தமிழும்,
குழறித்தரு கருநாடியர் குறுகிக் கடைதிறமின்''*

என்று மலையிலிருந்து விழுந்து சலசலத்து ஓடும் அருவி போல் பரணிப் பாடல்கள் ஒலிக்கையில், இந்தப்

பகுதியில் மட்டும் பல அடிகள் சுழித்து நிலைகுத்து கின்றன.

மேலும் இந்தப் படலத்தில் கரிகாற்சோழன் வடக்கே படையெடுத்துச் சென்று இமயத்தின் மீது புலிக்கொடியாகிய தனது சின்னத்தைப் பொறித்து நின்றபோது, முக்காலமும் உணர்ந்தருளும் நாரதன் என்னும் வேதமுனிவன் அங்கு வந்து ''முன்பு வியாச முனிவன் பாரதக் கதையைச் சொல்லச் சொல்ல விநாயகன் தன் இடப்பக்கத் தந்தத்தை எழுத்தாணியாகக் கொண்டு மேரு மலையில் அக்கதையை எழுதினான். அந்தப் பாரதக் கதைக்கு இணையான சோழர் வரலாற்றை நான் கூறுகிறேன். அதை நீ இந்த இமயமலையில் எழுது'' என்று கூறுகிறான்.

**கமலயோனி முதலாக வரும் உங்கள் மரபில்**
**காவன் மன்னர்கள் ஆகிவருகின்ற முறையால்**
**அமலவேதம் இதுதான் இதில் ஆரண நிலத்து**
**அமலனே அபயன் ஆக உறுக என்றருளியே**

செந்தாமரையைப் பிறப்பிடமாகக் கொண்ட நான்முகனை முதல்வனாகக் கொண்டு தோன்றி வரும் உங்கள் மரபில், வழிவழியாக உலகத்தைக் காத்துவரும் உங்கள் மன்னர்களின் வரலாறும் குற்றமில்லாத வேதமே ஆகும். பழைய வேதத்தின் பொருளாக நிற்கும் திருமாலே இனி அபயன் என்னும் முதற் குலோத்துங்க சோழனாக வந்து பிறப்பான் என்று நாரதன் கரிகாலனிடம் கூறினான்.

திருமாலின் அவதாரம் என்று மகாபாரதத்தில் சொல்லப்பட்ட கண்ணபிரானைக் கடவுளாக வழிபடுகை யில், திருமாலின் மற்றோர் அவதாரமாகக் கலிங்கத்துப் பரணியில் சொல்லப்பட்ட முதற் குலோத்துங்க சோழனைக் கடவுளாக வழிபடாதது ஏன்? இது சிந்தனையைக் கிளறுகின்றது.

பாரதப் போரில் ஈடுபட்ட சேனைகளுக்குச் சேரன் உணவளித்தான் என்னும் சேதியை மறுப்பவர் களும் உளர்.

**ஓரைவர் ஈரைம்பதின்மர் உடன்றெழுந்த**
**போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த**
**சேரன் பொறையன் மலையன் திறம்பாடி**
**கார்செய் குழலாட ஆடோமோ ஊசல்**

என்று சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்தில் வாழ்த்துக் காதையில் ஊசல் வரியாக வருகின்றன. ஐவரும் நூற்று வரும் தம்முள் வெகுண்டெழுந்து நடத்திய போரில், பெருஞ்சோறாகிய மிகுதியான உணவை வரையாது கொடுத்த சேரனை வாழ்த்தி முகில் போன்ற கூந்தல் அலையும்படி ஊசலாடுவோம் என்று பாடுகின்றனர். பாரதப் போரில் ஈடுபட்டவர்களுக்குச் சேர மன்னன் உணவளித்தான் என்கிறது சிலப்பதிகாரம்.

புறநானூற்றில் ''மண் திணிந்த நிலனும்...'' என்று தொடங்கும் பாடலில்,

*வான வரம்பனை நீயோ பெரும,*
*அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ*
*நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை*
*ஈரைம் பதின்மரும் பொருது களத்து ஒழியப்*
*பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்.*

என்னும் அடிகள் வருகின்றன. சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை வாழ்த்தி முரஞ்சியூர் முடிநாக ராயர் என்னும் புலவர் பாடியது இது. குதிரைகளை யுடைய ஐவருடன் சினந்து நூற்றுவர் போர் புரிந்த போது, போர்க் களத்தின்கண் அவர்களுக்கு மிகுதியாகப் பெருஞ்சோறு வரையாது கொடுத்த மன்னா, பால் புளித்தாலும் பகல் இருண்டாலும் நெறி தவறாது ஆட்சி புரியும் நீ, இமயம் போலும் பொதியம் போலும் வாழ்க என்று வாழ்த்துகின்றார்.

எனினும், சில தமிழறிஞர்கள் இதற்கு வேறுவித மாகப் பொருள் கொண்டனர். பாண்டவர்களும் கௌரவர்களும், போர் செய்து பின்னர்த் துறக்கம் எய்திய பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, அவர்களுக் காகத் தர்ப்பணம் என்னும் பிண்டப்பலி வழங்கி ஆங்குளோர்க்குப் பெருஞ்சோறு வழங்கினான் உதியன் சேரலாதன் என்று பொருள் கூறுகின்றனர். ஏனெனில் உதியன் சேரலாதன் கடைச்சங்க காலத்தைச் சேர்ந்தவன். பாரதப் போர் நிகழ்ந்த காலத்தைச் சேர்ந்தவன் அல்லன் என்பது அவர்கள் வாதம். துரை அரங்கசாமி என்னும் தமிழறிஞர் முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இதே கருத்தை வலியுறுத்தும் ஓர் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்துப் பேசினார்.

பாரதப் போர் இற்றைக்குச் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்ததாகக் கணிக்கப் படுகிறது. அந்தக் காலத்தில் இருந்த ஓர் உதியன் சேரலாதன் பாரதப் போர் வீரர்களுக்குப் பெருஞ்சோறு அளித்தான் என்றும், பின் நாளில் சேரமரபில் வந்த அதே பெயரைக் கொண்ட சேர மன்னன் மீதும் அச்சிறப்பை ஏற்றிப் புலவர்கள் பாடினர் என்றும் கொள்வதே சரியாக இருக்கும். மகாபாரதம் ஏதோ நேற்று நடந்தது போல் அதன் நிகழ்வுகளை நாள் தோறும் பேசி வந்த ஒரு நாட்டில் பழங்கால உரை சிரியர்கள் அப்பாடல்களுக்குத் தவறாகப் பொருள் எழுதியிருக்க முடியாது. மேலும், பல நூற்றாண்டு களுக்கு முன்பு போரில் மாண்ட நூற்றுவர்க்கும் ஐவர்க்கும் நினைவு நாள் நடத்திப் பெருஞ்சோறு அளித்ததை ஒரு பெரிய செயலாகப் பல புலவர்கள் பாடியிருக்க மாட்டார்கள்.

பாண்டவர்கள், கௌரவர்களின் வழித்தோன்றல்கள் யாவரும் போரில் மாண்டு போனமையால் வாரிசு இல்லாமல் இறந்த பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக் கும் பல நூற்றாண்டுகள் கழித்து நினைவு நாள் நடத்திப் பிண்டம் மேய பெருஞ்சோறளித்தான் உதியஞ்சேரல் என்றும் இவர் கூறியிருப்பது பொருந்தாது. ஏனெனில், வடபுலத்து மன்னர்களுக்கு வாரிசு இல்லாவிட்டால்,

அவர்களின் மனைவியர் முனிவர்கள் மூலமாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டனர் என்று பாரதம் கூறுகிறது.

''மழுவெனும் படையி
ராமனால் மன்குல மடிந்துழி அவர் தத்தம்
பழுதின் மங்கையர் முனிவர்
அருளினால் பயந்தனர் மகவென்பர்''

(சம்பவச் சருக்கம் : 5)

எனவே, பாண்டவர், கௌரவர்க்கு நீர்க்கடன் ஆற்றுவதற்கு வழித்தோன்றல்கள் இல்லை எனக் கூறுதல் பொருந்தாது.

மேலும், இரு திறத்தார் பொரும் போர்க் களத்தில், அவர்களில் ஒரு திறத்தார்க்கு மட்டுமே நொதுமலர் ஒருவர் உணவளிக்க இயலுமே தவிர, இரு தரப்பினர்க்கும் உதவ இயலாது என்றும் இந்த ஆய்வாளர் வாதித்தார். இக்கூற்றும் சரி அன்று என்று துணியலாம். ஏனெனில் அந்தக் காலத்தில் இந்துக் களிடையே நிகழ்ந்த போர்கள் கண்டிப்பான நெறிமுறை களுக்கு உட்பட்டு நிகழ்ந்தன. காலையில் சூரியன் உதித்ததும் போர் தொடங்க வேண்டும்; ஆதவன் மறைந்ததும் போர் நிறுத்தப்பட வேண்டும். குதிரை மீது இருப்பவனைத் தேர்மீது இருப்பவன் தாக்க முடியாது என்பன போன்ற பல விதிகள் இருந்தன.

கண்ணபிரானின் தூது தோல்வியுற்றுப் போர் நடப்பதற்கு நாள் குறித்த பிறகு, களப்பலி கொடுப் பதற்கு மிகவும் பொருத்தமான நேரத்தைக் குறித்துத் தருமாறு சோதிடத்தில் வல்லவனான சகாதேவனைத் துரியோதனன் கேட்டுக் கொள்கிறான். தமது ஐந்து எதிரிகளில் ஒருவன் என்றும் பாராமல் துரியோதனன் கேட்டபோது, கிளைஞரை வேறாகக் கருதாத சகா தேவன் அவனுக்கு நாள் குறித்துக் கொடுத்தான். (முகூர்த்த வேள்விச் சருக்கம்: 4) சோதிடக் கலையில் வல்ல ஒருவன் யார் கேட்டாலும் பகைமை கருதாது நாள் கணித்துத் தர வேண்டும் என்னும் நெறி பிறழாது அவன் இவ்வாறு செய்தான் என்பர். களத்தில் இறங்கப் போகும் இரு பகைவர்களே இவ்வாறு இணக்கமாக நடந்து கொள்ள முடியுமென்றால், அவ்விரு திறத்தார்க் கும் நடுநிலையாளர் ஒருவர் உணவளிப்பதும் இயலக் கூடியதே!

அறத்தை நிலைநிறுத்தும் முகத்தான் போர் நிகழ்த்திய இராமனையும் கிருட்டினனையும் முருகனையும் மாவீரர்களாகப் போற்றலாமே தவிர, இன்னமும் கடவுள ராக ஏற்று வழிபடுவது காலத்திற்கு ஏற்புடையதன்று.

ஏராளமாகப் பெருகிவிட்ட பூசாரிகள், புராண, இதிகாச வீரர்களையும் தனித்தனிக் கடவுளராகச் சித்திரித்துத் தங்கள் பிழைப்பு அமோகமாக நடப்பதற்கு வழியமைத்துக் கொண்டனர் என்று கூறப்படுவதே உண்மை! ✱

*நன்றி : இலக்கியச் சுவடுகள்*

# பிரித்தானியாவில் 10 ஆவது சைவ மகாநாடு

பிரித்தானியாவில் சைவத் திருக்கோவிலில் ஒன்றியத்தின் 10 ஆவது சைவ மகாநாடு ஜூலை 14, 15 ஆகிய தினங்களில் மிகச் சிறப்பாக நடைபெறவுள் ளது. லூசியம் சிவன்கோவில் அறக்கட்டளைத் தலைவர் வைத்திய கலாநிதி சின்னத்துரை சோமசேகரம் அவர்கள் சைவ திருக்கோவில் ஒன்றியத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் தலைமையில் 10ஆவது சைவ மகாநாடு நடைபெறவுள்ளது. நல்ல செய்தியாகும். சைவ சமய ஈடுபாடு கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த திரு. சோமசேகரம் இவர்கள் இம் மகாநாட்டைத் திறம்பட நடத்த வேண்டுமென்ற ஆவல் கொண்டிருப் பதாக அறியக்கிடக்கிறது.

அதன் முன்னோடியாக அவர் தமிழ்நாடு சென்று முக்கிய திருத்தலங்களில் வழிபாடு நடத்திவிட்டு சைவா தீனங்களின் ஆசியும் ஆலோசனையும் பெற்று வந்து உள்ளார்.

அதன் பின்னர் சைவ மகாநாட்டை மிகச்சிறப் பாக நடத்த வேண்டுமென்ற உற்சாகம் ஏற்பட்டுள்ளது. சைவ மகாநாட்டு விழாக் குழுவினரும் அதன் செய லாளர் திரு. ரங்கநாதன் அவர்களும் அவ்வாறான சிந்தனையுடன் செயற்படுவதாக அறியக் கிடக்கிறது. சைவத் திருக்கோவில்களின் பணிகளிலும் சைவ மகா நாடுகள் நடத்துவதிலும் மிக அனுபவம் கொண்ட திரு. ரங்கநாதன் அவர்கள் 10ஆவது மகாநாட்டின் செயலாள ராகவிருப்பது சாலப் பொருத்தமானதே. அதேபோன்றே விழாக்குழுவினரும் செயற்பட்டு வருவதாக அறியும் போது 10ஆவது சைவமகாநாடு சிறப்பாக நடைபெறு வதற்கான ஆதரவு பெருகிவருகிறது.

மகாநாட்டிற்கு இலங்கை இந்திய மலேசிய நாட்டுச் சமய அறிஞர்களும் கலந்து உரையாற்ற இருப் பதாக அறியக்கிடக்கிறது. மகாநாட்டையொட்டிச் சிறப்பு மலரும் வெளியிடப்படவுள்ளது.

10ஆவது சைவமகாநாடு சிறப்புடன் நடைபெற வேண்டுமென்பதே பிரித்தானியா வாழ் சைவத் தமிழ் மக்களின் வேணவாவாகும். காலத்தோடு திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டியது மகாநாட்டு ஏற்பாட்டாளர் களின் தலையாய கடமையாகும். **- ஆரூரன்**



திரைப்படப் பாடலாசிரியர் பா. விஜய் - பொன்பாலா

# திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!!

சோம. வள்ளியப்பன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், சென்னை, தமிழ்நாடு

## இலக்கை நிர்ணயிப்போம் வாங்க!

**Whatever human mind can conceive and believe, the mind can achieve - Nepolian Hill**

''எந்த ஒரு விஷயத்தை மனித மனத்தால் உருவாக்கி, உறுதியாக நம்ப முடிகிறதோ அந்த விஷயத்தைச் செய்துமுடிக்க இயலும்'' என்கிறார் நெப்போலியன் ஹில் எனும் அறிஞர்.

ரைட் சகோதர்கள் பறவையைப் போலப் பறக்க முடியும் என யோசித்து அதை ஆழமாக நம்பினார்கள். செயல்படுத்தி வெற்றி கண்டார்கள்.

சாதாரண சோப்புத்தூள் வியாபாரியாக வாழ்க்கையைத் தொடங்கிய ரிலையன்ஸ் நிறுவனத் தலைவர் அம்பானியின் கனவு உலகின் மிகப்பெரிய பெட்ரோ கெமிக்கல் நிறுவனங்களில் ஒன்றாக 20 வருடங்களில் உருவெடுத்தது.

ஹரியானா மாநிலத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்த கபில் தேவ் தான் முதன்முதலாக இந்தியாவிற்கு கிரிக்கெட்டில் உலகக் கோப்பையை வென்று தந்தார்.

கிரேக்க புராணங்களில் பிக்மாலியன் (Pygmalion) என்ற ஒரு சிற்பியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் தன் மனத்தில் உள்ள ஆசையையெல்லாம் கொட்டி ஒரு அழகான பெண்ணின் சிலையைச் செய்தாராம். 'அந்தப் பெண் உயிரோடு வருவாள், அவளை மணம் செய்வேன்' என்று ஆழமாக நம்பினாராம். அந்தப் பெண் சிலை உயிர்பெற்றதாம்.

இலக்கினை அடைய முடியும் என்ற ஆழமான நம்பிக்கை மிகமிக அவசியம். அது இலக்கினை அடைய வைத்துவிடும்.

உலகின் தலைசிறந்த கூடைப்பந்து வீரரான மைக்கல் ஜார்டன் கூறுகிறார்:

''நான் எந்த மாதிரி விளையாட்டு வீரனாக வர வேண்டும் என்றும், நான் எந்த இடத்தைப் பிடிக்க வேண்டும் என்றும் நான் என் மனத்திரையில் உருவாக்கிப் பார்த்தேன். நான் சரியாக எந்த இடத்தை அடைய வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தேன். அதை அடைவதிலேயே கவனம் முழுமையையும் செலுத்தினேன்.''

மைக்கல் ஜார்டன் கூடைப்பந்தில் அடையாத சிகரங்களே இல்லை. தனது இலக்குப் பற்றிய தெளிவும், அதை அடைய முடியும் என்ற தீவிர நம்பிக்கையும் அனைத்துச் செயல்பாடுகளும் அதை ஒட்டியே இருத்தலும் தான் வெற்றி பெறுவதற்கான சூட்சமங்கள்.

ஒவ்வொருவரும் தான் நினைத்ததை அடைய கனவு காணவேண்டும். நவீன இந்தியாவைப் பற்றிப் பண்டிதர் நேரு கனவு கண்டதைப் போல; மைக்கல் ஜார்டனுக்குக் கூடைப்பந்தில் இருந்ததைப் போல, எது வேண்டுமோ அதனை அடைவதாக அடிக்கடி நினைத்தல் வேண்டும். நிச்சயம் அத்தகைய கனவுகள் மெய்ப்படும்.

## சமாதானப்படுத்திக் கொள்ளாதீர்கள்!

ஏன் உலகில் பெரும்பாலோர் சாதாரண சராசரிகளாகவும் சிலர் மட்டுமே வெற்றியாளர்களாகவும் இருக்கிறார்கள்? அவர்களுக்கும் இவர்களுக்கும் என்ன வேறுபாடு?

**''எண்ணிய எண்ணியாங்கு எய்துப**
**எண்ணியர் திண்ணிய ராகப் பெறின்''**

என்கிறது வள்ளுவம். திட்டமிடுபவர் சரியாகச் செய்பவராக இருந்தால், எண்ணியதை எண்ணியபடியே செய்து முடிக்கலாம்; இலக்கினை அடையலாம் என்பதுதான் செய்தி.

## இருகால்களும் இல்லாதவர் செய்த சாதனை

நம்மால் இது முடியாது. ஆ... இதுவா! இது என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது என்று பலவற்றைத் தள்ளிவிடுகிறோம். ஒருமுறை பாரதமிகுமின் நிறுவனத்தில் மனிதவள மேம்பாட்டுத் துறையினால் கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நானும் என்னோடு இன்னும் இருபது நபர்களும் அந்த வகுப்பு எடுக்க வருபவரின் வருகைக்காகக் காத்திருந்தோம். அவர் வரவேண்டிய நேரமாகிவிட்டது. வரவில்லை. வகுப்பினுள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டிருந்தோம். திடீரென்று முன்வரிசையில் இருந்தவர்கள் எழுந்து நின்றனர். ஆசிரியரே வரவில்லை. எதற்காக இவர்கள் எழுந்து நிற்கிறார்கள் என்று புரியவில்லை. எழுந்த அனைவரும் நான்கைந்து வினாடிகளில் அமர்ந்தார்கள். பிறகுதான் கவனித்தேன். இரண்டு கால்களும் தொடை உட்பட சூம்பிப் போயிருந்த ஒரு இளைஞர் கைகளால் நகர்ந்தபடி அறையினுள் வந்திருந்தார் என்பதை அறிந்தேன். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அவர் கைகளைத் தரையில் ஊன்றி, ஒரு எம்பி எம்பி, மேஜை மேல் அமர்ந்துவிட்டார். எங்கள் அனைவர் மனத்திலும் திடீரெனக் குடிகொண்டது பச்சாதாபம். அவர் முகத்திலோ, மலர்ச்சியும், புத்துணர்ச்சியும் மட்டுமே. எதைப்பற்றியும் யோசிக்காது, உடன் கம்ப

யூட்டர் பற்றிய வகுப்பைத் தொடங்கிவிட்டார். ஒரு பத்து நிமிடம் சென்றது. எங்களில் எவருக்கும் அவர் இரண்டு கால்களும் இல்லாதவர் என்ற நினைப்புத் துளியும் இல்லை. அந்த அளவிற்கு வகுப்பினைச் சிறப் பாக எடுத்தார்.

சுய இரக்கமோ, சுய பச்சாதாபமோ இல்லாதது மட்டுமல்ல, தன் குறையைப் பற்றி நினைவு இல்லாத வராகவும் தெரிந்தார். அவர் அதைப் பொருட்படுத்தவே இல்லை.

## இலக்கு / இலட்சியம் நிர்ணயிப்பதில் தயக்கம்

ஆனால், எல்லாம் சரியாக இருந்தும் சிலர் படுகிற வருத்தங்கள், அவநம்பிக்கைகள் அவர்களை முன்னேற விடாது தடுக்கின்றன.

- எனக்கு அதிருஷ்டம் இல்லை.
- எனக்கு நேரம் சரியில்லை.
- கைதூக்கிவிட ஆள் இல்லை.
- பெரிய மனிதர்களைத் தெரியாது.
- எனக்கு வசதியில்லை.
- என்னை அமுக்கப் பார்க்கிறார்கள்.
- பொறாமை நிறைந்த உலகம், வாழவிட மாட்டார்கள்.
- நான் கிராமத்தில் படித்தவன்.
- எனக்கு ஆங்கிலம் வராது / தெரியாது.
- என்ன செய்தும் பயன் இல்லை.

இதுபோன்ற எண்ணங்களை வளர்த்துக் கொள் வதால் சிலர் முன்னேற முயற்சி எடுப்பதே இல்லை. இவை அனைத்தும் பொய் என்று எத்தனை முறை எத்தனை பேரால் இந்த உலகத்தில் நிரூபிக்கப்பட்டு இருக்கிறது!... ஏன் இன்னும் இந்த மனோபாவம்?

நம் இலக்குகளை உயர்ந்தவையாக ஆக்கவிடாது அமுக்கும் இந்த எதிர்மறைச் சிந்தனைகளை (Negative Thinking) ஒழிப்போம்.

முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்' என்பது தமிழில் உள்ள எழுச்சிமிக்க வாக்கியங்களில் ஒன்று. அதனை மனத்தில் கொள்வோம். இந்த நம்பிக்கையால் எத்தனையோ பேர் வெற்றி பெற்றுள்ளார்கள். முயற்சி பல செய்த ஆப்ரகாம் லிங்கனைப் பற்றி முன்பு பார்த் தோம். ரைட் சகோதரர்களைப் பார்த்தோம். தன் வாழ் நாள் முழுவதும் சம்பாதித்ததை நெருப்புக்கு இரை யாக்கிவிட்ட பின்னும் ஃபோனாகிராஃபைக் கண்டு பிடித்த தாமஸ் எடிசனைப் பார்த்தோம்.

## பட்டாம் பூச்சியின் கதை

இறைவன் எல்லா உயிர்களையும் படைத்தான். அவற்றுள் ஒன்று பட்டாம்பூச்சி. பட்டாம்பூச்சி முட்டை யிட்டுக் குஞ்சுபொரிக்கும் இனத்தைச் சார்ந்தது. ஒருநாள் பட்டாம் பூச்சியின் முட்டையிலிருந்த ஒரு பட்டாம் பூச்சிக் குஞ்சு வெளிவர முயற்சி செய்துகொண்டிருந்தது.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு மனிதன், அதற்கு உதவி செய்வதற்காக, அந்த முட்டையின் ஓட்டையினைச் சற்றே பெரிதாக்கினான். முட்டை ஓட்டின் ஓட்டை பெரிதானதால் பட்டாம் பூச்சியும் முட்டையிலிருந்து சுலபமாக வெளிவந்தது. முட்டை யிலிருந்து வெளிவந்ததும் பட்டாம் பூச்சிகளினால் பறக்க இயலும். ஆனால், அந்தப் பட்டாம்பூச்சி பறக்க வில்லை. பலமுறை முயற்சித்தும் இயலவில்லை. தத்தித் தத்தித் தவழ்ந்தே இருந்துவிட்டுப் பறக்க இயலாமல் சிறிது நேரத்தில் உயிரைவிட்டது.

ஏன்? அந்தப் பட்டாம் பூச்சியினால் பறக்க முயலவில்லை?

அதற்கு இறகுகளில் சத்து இல்லை.

ஏன் சத்து இல்லாமல் போனது?

அது தன் முட்டையைவிட்டு வெளிவரும் பொழுது முட்டையை உடைக்க தன் இறகுகளை உப யோகப்படுத்தியிருக்க வேண்டும். அப்படிச் செய்யும் பொழுது அதன் இறகுகளுக்குள் ஒரு வித திரவம் பாய்ந்து, சக்தி ஏற்பட்டிருக்கும். ஆனால் அதனை வேடிக்கை பார்த்தவன் உதவி செய்வதாக நினைத்துக் கொண்டு, முட்டை ஓட்டினை அவன் பொத்துவிட, ஓட்டை பெரிதாகி பட்டாம் பூச்சிக்குத் தானே உள்ளிருந்து ஓட்டினை உடைக்க வாய்ப்பு இல்லாமல் போனது. அது தன் முயற்சியால் உடைக்காததால் அதன் இறகுகளில் சக்தி பிறக்கவில்லை. அது சக்தி மிக்க இறகுகளைப் பெறாததால் அதனால் பறக்க இயலவில்லை.

பட்டாம் பூச்சிக்கு முட்டை ஓட்டை உடைப்பது செய்யமுடியாததன்று. அதை அதுவே செய்தால்தான் பிற்காலத்தில் அதனால் பறக்க இயலும். இது இயற்கை யின் அமைப்பு.

சமீபத்தில் இ.மெயிலில் எனக்கு வந்த ஒரு கதை தான் இது. இதனுடன் அழகான வாசகங்களும் வந்தன.

நான், இறைவனிடம் தைரியத்தைக் கேட்டேன், அவர் தடைகளைக் கொடுத்தார் தாண்டி வர, அன்பினைக் கேட்டேன், அவர் சிரமத்தில் உள்ள மனிதர்களைக் கொடுத்தார் உதவி செய்ய.

பலத்தைக் கேட்டேன், அவர் பிரச்சினைகளைக் கொடுத்தார், தீர்த்து வைக்க, வளம் கேட்டேன் அறிவினைக் கொடுத்தார்.

நான் இறைவனிடம் சலுகைகள் கேட்டேன், அவர் வாய்ப்புகள் கொடுத்தார்.

நான் கேட்டது எதையுமே அவர் கொடுக்க வில்லை. ஆனால், எனக்குத் தேவையானவை அனைத் தையும் பெற்றேன்.

ஆகா! எத்தனை ஆழமான வார்த்தைகள். எந்த விஷயமும் நமக்குத் தானமாக வரக்கூடாது. நாமாக நமக்கு உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

போராட்டங்கள்தாம் வாழ்க்கை, தடைகள் இல்லை யேல் நாம் ஊனப்பட்டுவிடுவோம், மேலே பார்த்த பட்டாம் பூச்சியைப் போல. *

(தொடரும்)

# இலங்கை - இந்தியர் பிரச்சினையும் கடமை தவறும் நடுவணரசும்

## நீதிமான்

'இலங்கைத் தமிழர்', 'ஈழத் தமிழர்', 'யாழ்ப் பாணத் தமிழர்' என்று கேட்டே பழகிவிட்ட நமக்கு, மேலே உள்ள தலைப்புத் திகைப்பை ஏற்படுத்தும். இனி நாம் இப்பிரச்சினையை இந்தக் கண்ணோட்டத்தில் தான் அணுக வேண்டும்.

முதலில் நாம் ஒன்றைத் தெளிவாக்கிட வேண்டும். இலங்கையில் உள்ள தமிழர்கள் யார்? அவர்கள் பாகிஸ் தானைச் சேர்ந்தவர்களோ, பங்களாதேஷைச் சேர்ந்தவர் களோ அல்லர். இந்தியாவின் ஒரு பகுதியாகிய தமிழ் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வாழ்ந்து வருபவர்கள்.

நடுவணரசு நினைத்திருந்தால் இலங்கைப் பிரச் சினையை எப்பொழுதோ முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியும். சில இரண்டாந்தர அரசியல்வாதிகளும், சில அதிகாரிகளுமே இதற்குக் காரணம்.

'வெளிநாட்டு விஷயங்களில் இந்தியா தலை யிடாது' என்பது நடுவணரசின் நிலை. அப்படியானால் பாகிஸ்தான்-பங்களாதேஷ் பிரச்சினையில் இந்தியா தலையிட்டுத் தனி நாடு உருவாகக் காரணமாயிருந்தது மட்டும் எப்படி நியாயம் ஆகும்? ஒருவேளை பாகிஸ் தான் நமது எதிரி நாடு என்பதால் அதற்கு விதி விலக்கோ?

ஆறு வயது சிறுவன் 'பிரின்ஸ்' என்பவன் அறுபது அடி குழியில் விழுந்தபோது இந்தியா முழுவதும் பிரார்த்தனைகள் - அவன் பிழைக்க வேண்டுதல்கள். நமது தேச ஒற்றுமைக்கு இது எடுத்துக்காட்டு. இதில் 'மொழி' பிரச்சினை ஏதும் எழவில்லை.

ஆனால், இலங்கையில் 63 பள்ளிக் குழந்தை களைக் கொன்று குவித்ததே சிங்கள இனவெறி இராணுவம். அங்கே இறந்தவர்கள் யார்? தமிழர்கள் அதாவது இந்தியர்கள் இந்த உணர்வு நடுவணரசுக்கும் இந்திய மக்களுக்கும் ஏற்படாமல் போனது ஏன்? நமது சகோதரர்கள்தாம் அங்கே பாதிக்கப் படுகிறார்கள் என்று மற்ற மாநிலத்தவர்கள் ஏன் குரல் கொடுக்கவில்லை? ஒருவேளை நாமே 'இலங்கைத் தமிழர்' என்று குறுகிய வட்டத்துக்குள்ளேயே இதை அடக்கி விட்டோமா? அப்படியானால் இனிமேல் 'இலங்கை-இந்தியர் பிரச் சினை' என்றே எழுதுவோம் பேசுவோம். அங்குள்ள தமிழர்களை இனிமேல் 'இந்தியர்கள்' என்றே அழைப் போம். அப்போதாவது நடுவணரசுக்கு அந்த உணர்வு வருகிறதா பார்ப்போம்.

இதே இலங்கையில் ஓர் இந்திக்காரரோ, வங்காளியோ பாதிக்கப்பட்டிருந்தால் நடுவணரசு இப்படித் தான் வேடிக்கை பார்த்திருக்குமா?

நாம் நடுவணரசைக் கேட்பது இதுதான் தமிழர்கள் யார்? அவர்களும் இந்தியர்கள்தாமே? அவர்கள் விஷயத்தில் ஏன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்? இலங்கைத் தமிழர் பிரச்சினை என்னும் குறுகிய கண்ணோட்டம் எதற்கு? இலங்கை இந்தியர் என்ற விசாலப் பார்வையில் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தலாமே.

இதையெல்லாம் கேட்டால் இங்குள்ள சிலர் 'தேசத் துரோகி' என்கிறார்கள். எது தேசத் துரோகம்? இந்த மண்ணிலே பிறந்து, வளர்ந்து, படித்து வெளி நாட்டுக்குத் தம் மூளையை அடகு வைத்து, வயிறு ஒன்றே வாழ்க்கை என்று வெளிநாட்டு வேலைக்கு ஓடுகிறார்களே அவர்கள் தேசத்துரோகிகள் இல்லையா?

சில அதிகாரிகள் இலஞ்சம் வாங்கி இந்தியாவின் பொருளாதாரத்தையே சீரழிக்கிறார்களே, அவர்கள் தேசத் துரோகிகள் இல்லையா?

ஒழுங்காக வரி கட்டாமல் வரி ஏய்ப்புச் செய் கிறார்களே, அவர்கள்தாம் தேசத் துரோகிகள்.

நாட்டைப் பற்றிக் கவலைப்படாமல் தேர்தலில் கூட்டு வைப்பதும் பிறகு வெற்றி பெற்று நடுவணரசிடம் சுயநலத்திற்காகக் கோரிக்கை வைப்பதும், அது நிறை வேறவில்லையென்றால் ஆதரவை வாபஸ் பெற்று, இன்னொரு தேர்தலுக்கு வழிவகுத்துப் பல ஆயிரங் கோடி ரூபாயைத் தேர்தலுக்குச் செலவழிக்க வேண்டிய நிலைக்கு நாட்டைத் தள்ளி, இந்தியா வாங்கிய கடன் களைக் கூடத் தரமுடியாத அளவுக்குப் பொருளா தாரத்தைச் சீரழிக்கிறார்களோ சில அரசியல்வாதிகள் அவர்கள் தேசத்துரோகிகள் இல்லையா?

'திராவிட நாடு' கேட்ட பேரறிஞர் அண்ணாதான் சீனா இந்தியா மீது படையெடுத்து வந்தபோது, 'சீன நாகம் சீறுது' என்று பிரிவினைக் கொள்கையைக் கை விட்டு நாட்டைக் காக்க முன்வந்தார் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

நல்ல மொழிப்பற்று உள்ளவன்தான், நல்ல இனப்பற்று உள்ளவனாக இருக்கமுடியும். நல்ல இனப் பற்று உள்ளவன்தான் சிறந்த நாட்டுப் பற்று உள்ள வனாகவும் இருப்பான். நாட்டுப் பற்றில் நாம் யாருக்கும் சளைத்தவர்கள் அல்லர்.

சில அதிமேதாவிகள் 'இங்கிருந்து பிழைக்கப் போனவர்கள் ஏன் தனிநாடு கேட்கவேண்டும்?' என் கிறார்கள். அறிவிலிகளுக்கு அடிப்படை வரலாறு புரியாமல் இல்லை, வேண்டுமென்றே நடிக்கிறார்கள்.

இந்தியாவின் இருபெரும் இதிகாசங்களுள் ஒன்று இராமாயணம். அதில் எதிர்மறை நாயகனாகச் சித்திரிக்கப் பட்டுள்ள இராவணன் தமிழ் அரசனாகச் சித்திரிக்கப் பட்டுள்ளான். அது தமிழர் பூமி என்பதற்கும், அங்குத் தமிழன் கோலோச்சியதற்கும் இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

ஒருவேளை இதைச் சிலர் மறுக்கக் கூடும். அப்படியானால் போற்றத்தக்க இராமாயணம் பொய்யா? வழிபடத்தக்க இராமனும் பொய்யா? இராமனே பொய் என்றானபிறகு அவனுக்குக் கோவில் கட்ட வேண்டும் என்று நாட்டில் குழப்பம் விளைவிக்கிறதே ஒரு கூட்டம். அது எப்படி மெய்யாக இருக்க முடியும்? இராமன் ஈஸ்வரனை வழிபட்டதாகச் சொல்லப்படும் இராமேஸ் வரம் பொய்யா? இப்படி எண்ணற்ற கேள்விகள் எழும்.

இலங்கை முழுவதும் தமிழ்ப் பகுதி. அங்கே சிங்களவர்கள் வந்து குடியேறிய வந்தேறிகள்.

வந்தேறிகள் அங்குள்ள தமிழர்களை அடிமைப் படுத்தி, அவர்களுக்கு உரிய உரிமைகள் மறுக்கப்பட்டு ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டதால்தான் அங்கு உரிமைப்போர் நடக்கிறது.

நமது இந்தியாவில் நமக்கு உரிய உரிமைகள் ஆங்கிலேயர்களால் மறுக்கப்பட்டபோதுதான் இங்கே விடுதலைத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது. அந்தத் தீயில் நம் தவப்புதல்வர்களும் சில ஆங்கிலேயர்களும் உயிரிழந்துள்ளனர். இலங்கையிலும் இதே நிலைதான்.

சிங்களர்க்கு நிகராக அங்குள்ள தமிழர்களுக்கு - மன்னிக்கவும், இந்தியர்களுக்கு உரிமை வழங்கப் பட்டிருந்தால் இந்த உரிமைப் போராட்டமே நடந்திருக் காது. இந்தியர்கள் (தமிழர்கள்) இரண்டாந்தரமாக நடத்தப்படுவதால் உரிமை வேட்கை எரிந்து கொண் டிருக்கிறது.

இந்தியாவில் எந்த மாநிலத்தவரும் பிரதமராக வும் குடியரசு தலைவராகலாம் இங்கே எல்லோரும் சமமாக நடத்தப்படுகிறார்கள்.

ஆனால் இலங்கையில் இதுவரை இந்தியர் (தமிழர்) ஒருவர்கூட அதிபராக வந்ததில்லை. இதற்கு என்ன காரணம்? பெரும் முக்கிய பதவிகளில் சிங்களர் களே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இது எந்த வகையில் நியாயம்?

'பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணவேண்டும்' என்கிறார்கள். எவ்வளவு காலமாகப் பேச்சுவார்த்தை நடத்துவது? இதுவரை நடந்த பேச்சுவார்த்தையில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டது? இதுவரை நடந்த உயிரிழப்புகள் போதாவா? இன்னும் 'பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை' என்று எவ்வளவு காலத்திற்கு இப்பிரச்சி னையை இழுத்துச் செல்வது? இன்னும் எவ்வளவு உயிர்களை இழப்பது?

'இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசின் நிலை எதுவோ அதுவே தமிழக அரசின் நிலை' என்கிறார் நம் தமிழினத் தலைவர்.

'வேடிக்கை' பார்ப்பதுதான் நடுவணரசின் நிலை. இதைத்தான் இதுநாள் வரை செய்து வந்திருக்கிறது. தமிழக அரசும் அப்படித்தான் இருக்கும் என்கிறாரா? தொடர்ந்து நடுவணரசை வலியுறுத்தி இலங்கையில் ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த தமிழக அரசுக்குக் கூடுதல் பொறுப்பு இருக்கிறது. நடுவணரசிடம் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு ஒதுங்கிவிடக்கூடாது.

அண்டை நாட்டு விஷயங்களில் இந்தியா தலை யிடாது என்பது சரியல்ல. 'புகுந்த வீட்டில் ஒரு பெண் சரியாக வாழாமல் கொடுமை அனுபவிக்கிறாள் என்று கேள்விப்படும்போது பெற்றோர்கள் சென்று தட்டிக் கேட்கும் உரிமையும் இருக்கிறது; மீறிப் போனால் காவல் நிலையத்தில் புகார் செய்து தண்டனை வாங்கித் தரக்கூடிய கடமையுமிருக்கிறது.

இதே கடமைதான் இந்திய அரசுக்கும், அவர்கள் விஷயத்தில் இந்தியாவே தலையிடவில்லையென்றால் வேறு யார் தலையிடுவார்?

இந்த நேரத்தில் இன்னொன்றையும் இந்திய அரசு செய்தாக வேண்டும். இந்தியாவுக்கு உரிமையான கச்சைத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்ததன் பலனை இராமேஸ்வரம் மீனவர்கள் அடிக்கடி அனுபவித்து வருகிறார்கள்.

இலங்கைக் கடற்படையினர் அவர்களின் வலை களைப் பிடுங்கிச் செல்வதும், அவர்களைத் தாக்குவதும், சில நேரங்களில் துப்பாக்கிச் சூடு நடத்துவதும் வாடிக்கையாகிவிட்டது. எனவே, கச்சைத் தீவை மீண்டும் இந்தியாவே திருப்பி எடுத்துக்கொள்ள வழிவகை செய்ய வேண்டும். இல்லையேல் தொல்லைகள் தொடரவே செய்யும்.

இந்தியக் கடல் எல்லைக்குள்ளேயே அத்துமீறும் சிங்கள இராணுவம் இலங்கையில் என்னென்ன கொடுமை செய்யும் என்பதை இதயம் உள்ளவர்களால்தான் எண்ணிப் பார்க்க முடியும். இந்திய அரசுக்கு இதயம் இருந்தால் எண்ணிப் பார்க்கட்டும்.

இலங்கையில் அவர்கள் முழு உரிமையோடு வாழ்வதற்கு 'ஈழம்' ஒன்றே நிரந்தரத் தீர்வாக இருக்கும்.

இறுதியாக ஒன்று : நாம் என்னதான் தேசிய உணர் வோடு பேசினாலும் எழுதினாலும் இலங்கை விஷயத் தில் நடுவணரசு செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருக்கப் போகிறது. ஏனென்றால் இலங்கையில் பாதிக்கப் படுவது இந்தி பேசும் மக்கள் இல்லை. ✱

நன்றி: கண்ணியம்

கதை நேரம் - 7

# உன்னால் முடியும்

தி.க. சந்திரசேகரன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், திருப்பத்தூர், தமிழ்நாடு

இயேசுநாதர் 'பெதஸ்தா' என்கிற இடத்திற்குச் சென்றார். அந்த இடத்தில் ஒரு சிறிய நீர்த்தேக்கம் இருந்தது. எப்போதாவது ஒரு தேவதூதன் அந்தத் தண்ணீரில் இறங்கி நீரைக் கலக்குவான். அந்த நீரில் உடனே முதலில் யார் குதிக்கிறானோ அவனுடைய நோய் முற்றிலும் குணமடையும் என்பது நம்பிக்கை. இதனால் அந்தக் குளத்தைச் சுற்றி ஏராளமான நோயாளிகள் காத்துக்கொண்டிருந்தனர். ஆனால், தேவதூதன் எப்போது வருவான் என்று யாருக்கும் தெரியாது!

இயேசுநாதர் அங்குச் சென்றபோது, கால்கள் விளங்காத ஒருவன் ஒரு பாயில் படுத்திருந்ததைக் கண்டார்.

'எத்தனை ஆண்டுகளாகப் படுத்திருக்கிறாய்?' என்று கேட்ட போது, '38 ஆண்டுகளாக!' என்று பதில் வந்தது. 'நீ ஏன் முதலில் போய்த் தண்ணீரில் குதிக்கக் கூடாது?' என்று இயேசுநாதர் கேட்டபோது, 'என்னை யாரும் தூக்கிக் குளத்தில் போடவில்லை' என்று பதில் வந்தது.

'உனக்கு நடக்க வேண்டுமென்று ஆசையா?' - என்றார் இயேசுநாதர்.

'ஆம்! அதற்காகத்தானே இத்தனை ஆண்டுகளாக இங்கே காத்துக் கொண்டிருக்கிறேன்'' - என்றான் முடவன்.

'அப்படியானால், நான் சொல்லுகிறேன்; நீ எழுந்து நில், பாயைச் சுருட்டிக் கொண்டு உன் வீட்டுக்குப் போ' என்றார் இயேசுநாதர்.

உடனே அந்த முடவன் எழுந்து, பாயைச் சுருட்டிக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

## ஒரு தூண்டுகோல் தேவை!

இது ஓர் அற்புதமான நிகழ்ச்சி கருத்தாழமிக்கது! பாயில் படுத்திருக்கிற முடவன் பெரும்பாலான சமூக மக்களைக் காட்டுகிற குறியீடு.

ஒரு வேலையும் செய்யாமல், 'எனக்கு யாராவது உதவுவார்களா?' என்று வேறு ஒருவர் தயவை எதிர் பார்த்து, அனேக மக்கள் சோம்பேறிகளாக உட்கார்ந் திருக்கிறார்கள்.

நாள்கள் ஓடுவதைப் பற்றி அவர்கட்குக் கவலை இல்லை! அற்புதமான வாழ்க்கை வீணாவதைப் பற்றி அவர்கள் வருத்தப்படுவதில்லை.

ஆனால் வெற்றி பெறுவதற்குத் தேவையான அத்துணை ஆற்றல்களும் அவர்களிடம் ஒளிந்துள்ளன. வருத்தமான செய்தி - அவர்களுள் அடங்கியிருக்கின்ற ஆற்றல்களைப் பற்றி அவர்களுக்கே தெரிவதில்லை.

அவர்களுடைய ஆற்றல்களை உணர்த்தி, அவர்களைச் செயல்பட வைக்க ஒரு தலைவன் நமக்குத் தேவைப்படுகிறான். ஒருவேளை நாமே தலைவனாகத் திகழ வேண்டுமென்றால், நம்மைச் சார்ந்தவர்களின் ஆற்றல்களை, அடையாளம் கண்டுபிடித்துத் தட்டிக் கொடுத்துச் செயல்பட வைப்பதே நம் வேலையாகும்!

'யாராவது வந்து நமக்கு உதவுவார்கள்' என்று எண்ணி எதிர்பார்த்து உட்கார்ந்து கொண்டிருந்தால் நம்மை விட முட்டாள்கள் இவ்வுலகில் இருக்க முடியாது!

பாயில் படுத்திருந்த முடவன், தன்னை யாராவது தூக்கிக் குளத்தில் போடுவார்களா? என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அங்கே இருந்த அத்தனை நோயாளிகளும் தங்களைக் குணப்படுத்திக் கொள்ள முதலில் தாங்கள் குளத்தில் குதிக்க விரும்புவார்களே ஒழிய, இந்த முடவனைத் தூக்கிக் குளத்தில் போட எண்ண மாட்டார்கள்.

போட்டி நிறைந்த இவ்வுலகில் ஒவ்வொரு மனிதனும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், தன்னை உயர்த்திக் கொள்ளவும், பாடுபடும் போது, நம்மை உயர்த்திக்கொள்ள நாம்தான் முயலவேண்டும்! *

(தொடரும்)

## ஒன்றாய் நிற்போம்

சி.என். துரைராசா, திருக்கோணமலை.

''நீதிதேவனே, நீதிதேவனே
உனந்திதான் எங்கே
காவி உடைதரித்த அந்தக்
கயவர்கள் பின்னால் தானோ''?
''ஆதித் தமிழனாய் அவதரித்து
அன்னியனாய் இந்தமண்ணில்
ஒதிஉணர்ந்திட்ட உத்தமர்களே
உண்மை கூறாய் நீதிமன்றில்'',
''வயல்வெளி வருவாய் தம்பி
வரலாறு ஒருதரம் கூறாய்
கயல்மீன் கூட்டமென் ஈழமண்ணில்
கரும்புலி கண்டவனே தம்பி'',
''நீதிக்காய் உயிர்கொடுப்பாய்
நியாயத்தை எடுத்துவைப்பாய்
சாதிக்காய் மரணிப்பாய்
சரித்திரத்தில் என்றும் நிற்பாய்'',
''கொடிபிடித்துக் கொடிபிடித்துக்
கூனலாய் என்றும் வாழாதே
தடியெடுத்தவன் என்றும் தண்டகாரனாய்த்
தரணியில் வாழ்வது தகுமா?''
''பொறுமைக்கு ஓர் எல்லையுண்டு
பொறுத்தார் அரசாள்வார் என
உரிமைக்குத் தோள் கொடுப்போம்
உணர்வால் நாம் ஒன்றாய் நிற்போம்''.



MITHUS JEWELLERY
322 London Road, Croydon CRO 2TJ
Tel: 020 8683 1756 Fax: 020 8683 1792
DIAMONDS PALACE
மங்கையார்க்கு
எழில் சேர்க்க
வைர மாளிகை.
புதுப்பொலிவு நிதம்
பரவ வைரமாளிகை.
பொன்னகைக்கு
மறு பெயர்தான்
வைரமாளிகை.
மண்ணுலகில் மயன்
படைத்தான்
வைரமாளிகை.
ஆமாம்
செல்லுமிடமெல்லாம்
அதே பேச்சு
76 Tooting High Street
London SW17 0RN
Tel: 020 8767 5333
Fax: 020 8767 5814
open 7 days a week

# LONDON CARNATIC ISAI VIZHA 2007
# and
# CARNATIC MUSIC IDOL COMPETITION

**27th April, Friday-Bharatiya Vidya Bhavan 4A Castletown Road London W14 9HE**

Doors open at 5.30pm

6.00pm Vocal music Concert by **Sivasakthi Sivanesan**



| | |
|---|---|
| Violin | Balu Raguraman |
| Mridangam | M Balachander |
| Ghatam | R N Prakash |

7.30pm Vocal music Concert by **Bhushany Kalyanaraman**




| | |
|---|---|
| Violin | Mysore Srikanth |
| Mridangam | Neyveli Narayanan |
| Ghatam | R N Prakash |

**28th April Saturday –Hainault Forest High School,Harbourer Road, Hainault EssexIG6 3TN**

Doors open at 5.30pm

6.00pm Vocal music Concert by **V K Manimaran**



| | |
|---|---|
| Violin | Dr Jyotsna |
| Mridangam | Neyveli Venkatesh |

7.30pm Vocal music Concert by **Bombay Jayashri Ramnath**



| | |
|---|---|
| Violin | Mysore Srikanth |
| Mridangam | Neyveli Narayanan |

**29th April Sunday Lewisham Sivan Centre 4a Clarenden Rise London SE13 5ES**

Doors open 5.30pm

6.00pm Award Ceremony of LONDON CARNATIC MUSIC IDOL

6.15pm CONCERT BY WINNERS OF CARNATIC MUSIC IDOL

6.45pm Flute Concert by Kumaran Sriskandaraja

7.30pm Vocal music Concert by **S Sowmya**



| | |
|---|---|
| Violin | Mysore Srikanth |
| Mridangam | Neyveli Narayanan |

**Admission:**

| | |
|---|---|
| Sponsor tickets for single day | £15.00 per person |
| Rear Stalls | £10.00 per person |
| Family tickets per single day | £25.00 . |

Music students £5.00 per day available from teachers

For tickets and further particulars;-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Dr S Navaratnam | 01277 223981 | Dr P Sivayogan | 01388 607732 | A Raveendran | 07702404531 |
| N Satchithananthan | 0208 690 0401 | V Kanesamoorthy | 07956 854075 | Dr A Baheerathan | 07957682083 |
| Mrs S Yogaraja | 0208 654 1381 | Thilaka | 07980846113 | Thavamani Yesudasan | 0208 697 8374 |
| I T Sampanthan | 0208 552 6992 | | | | |

Event by MAXIMUM MEDIA

Sponsors

**Western Jewellers**
230 Upper Tooting Road
London SW17 7EW
Yele 0208 767 3445

**Silk Emporium**
122 Upper Tooting Road,
London SW17 7EN
Tele 0208 672 1900

**Western Jewellers**
5 Plaza Parade,
29-33 Ealing Road,
Wemley HA0 4YA
Tele 0208 902 0909